
# ௧௬௦ ஆவது ஆண்டு நிறைவு மலர்



## யா/கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி
## J/KOPAY CHRISTIAN COLLEGE

2013

# 160 ஆவது ஆண்டு
# நிறைவு மலர்

## 1852 - 2012

160th ANNIVERSARY SPECIAL SOUVENIR

1852 - 2012

## யா /கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி

## J/ Kopay Christian College

**2013**

# சஞ்சிகை விபர அட்டவணை


| | | |
|---|---|---|
| சஞ்சிகை | : | 160ஆவது ஆண்டு நிறைவு மலர் |
| வெளியீடு | : | மலர்க்குழு<br>யா /கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி |
| பக்க அளவு | : | B5 (JIS) |
| பக்கம் | : | xvii+ 119 + 11 படங்கள் |
| எண்ணிக்கை | : | 300 |
| தாள் | : | 70 GSM பாங் |
| அச்சுப்பதிப்பு | : | குரு பிறிண்டேர்ஸ், 39/2, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி. |


## மலர்க்குழு

அதிபர் : திரு. க. இ. இராசசேகரம்

பிரதி அதிபர் : திரு . சி. சிவலிங்கம்

பிரதி அதிபர் : திரு. சு. திருநாவுக்கரசு

திருமதி இ. சிவலிங்கம்
திருமதி ச. சந்திரகுமார்
திருமதி சி. ஆனந்தஜோதி
திரு. வி. லிங்கேஸ்வரன்
திருமதி சு. மதியானந்தன்
திருமதி இ. அருந்தவநாதன்
திருமதி ய. முரளிதரன்
திரு. இ. யோ. லெஸ்லி
திரு. பா. சசிக்குமார்
செல்வி. ந. யோகேஸ்வரி

### விளம்பரம்

திருமதி சி.தவகீஸ்வரன்
திரு. ஜே. ஜோன்கீயுபேட்
திரு. மா. லோகநாதன்
திரு. ம. கணேசானந்தன்
திரு .சி. சிறிரூபன்
திரு. க. செந்தில்நேசன்
திரு. சீ. சுரேஸ்குமார்
திரு. க. நித்தியானந்தன்

### இணைப்பாட விதான தொகுத்தல்

திருமதி து. நவரட்ணராஜா
திருமதி அ. எடிஅறிசன்
திரு. ச. வசந்தராசா
திருமதி ஜீ. கேசவன்

# J/ Kopay Christian College

## Motto

Truth and Justice

## Vision

"The ideal school of the peninsula"

## Mission Statement

To foster self respect, values, character, patriotism and social justice to lead the School Community towards the global frontiers in education and to work for the optimum use of all the available resources skills and abilities.

# மலரின் உள்ளே...


| | | |
|---|---|---|
| ☆ | ஆசிச்செய்திகள் | vi-vii |
| ☆ | வாழ்த்துச் செய்திகள் | viii - xi |
| ☆ | அதிபரின் உள்ளத்திலிருந்து..... | xii - xiii |
| ☆ | பிரதிஅதிபர்களின் இதயத்திலிருந்து.... | xiv - xvi |
| ☆ | கா.பொ.த(சாதாரண தர) (உயர்தர )பரீட்சை சித்தி | 1 - 2 |
| ☆ | பல்கலைக்கழக மாணவர் அனுமதி | 3 - 5 |
| ☆ | மெய்வல்லுநர் விளையாட்டுத்துறை | 6 |
| ☆ | மாகாணபாடசாலைகள் விளையாட்டுப்போட்டி - 2013 | 7 |
| ☆ | சாரண ஆணையாளராக நியமனம் பெற்ற சாதனையாளரைப் பாராட்டுகின்றோம் | 8 |
| ☆ | ஈழத்து இலக்கிய வரலாற்றில் பேராசிரியர் கா. சிவத்தம்பி | 9 |
| ☆ | இலங்கையும் சுற்றுலாப் பயணமும் | 13 |
| ☆ | சிந்திக்கச் சில | 14 |
| ☆ | காயநெஞ்சம் | 15 |
| ☆ | பழமொழிகள் (Proverbs) | 19 |
| ☆ | மனிதன் மனிதனாக வாழப் பதினெட்டு (18) அம்சங்கள் | 20 |
| ☆ | மஹாகவி சுப்பிரமணிய பாரதியார் | 21 |
| ☆ | இயற்கை அன்னை | 22 |
| ☆ | Organizations | 22 |
| ☆ | நல்லார்க்கு மேன்மை நன்றாகும். | 23 |
| ☆ | அதிக தடவைகள் 2 மட்டும் விடையாக வருமாறு கூட்டுத்தொகை பெறுதல் | 24 |
| ☆ | திறனாய்வு (ஒற்றுமை எங்கே?) | 25 |
| ☆ | தர்மத்தின் வாழ்வுதனை சூதுகவ்வும் ஆனாலும் தர்மம் இறுதியில் வெல்லும் | 28 |
| ☆ | உலகின் முக்கிய தினங்கள் | 33 |
| ☆ | சிறுவர் உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும் | 34 |
| ☆ | விண்வெளித் தகவல்கள் | 36 |
| ☆ | தேடல் இயந்திரத்தின் வகைகளும் அதன் முக்கியத்துவமும் | 39 |
| ☆ | தேசிய அடையாள அட்டையிலுள்ள ஒன்பது இலக்கங்களையும் கொண்டு பிறந்த திகதியைக் கணிக்கும் முறை | 41 |
| ☆ | ஒருவரின் வயதை உடனடியாக கண்டுபிடிக்கும் முறை | 43 |
| ☆ | ஆரம்பித்த எண்ணை மீண்டும் கிடையாகப் பெறல் | 44 |
| ☆ | எண்களுக்கிடையில் உள்ள பெருக்கம் | 45 |
| ☆ | நிரைகள் 3ஐயும் நிரல்கள் 3ஐயும் சேர்க்கும் போது பெறப்படும் சதுரத்தின் கூட்டுத் தொகை கூட்டாமற் பெறும் முறை | 45 |
| ☆ | Importance of English Language | 46 |
| ☆ | ஜான் நேப்பியர் | 48 |

★ சமுதாயச் சிற்பிகள் 51
★ தொலை தூரத்துக் கனவுகள் 52
★ உழைப்பின் மகத்துவம் 53
★ காலத்தால் அழியாத கல்வி 53
★ நட்பு 54
★ வாழ்வோம் 55
★ சிந்தனை விருந்து 55
★ கல்லூரி தாயே... 56
★ ஒழுக்கத்தைப் பேணிப் பாதுகாப்போம் 56
★ பொது அறிவு 57
★ இலங்கையின் கல்வித்துறை சார்பான விடயங்கள் 58
★ மனிதனும் சூழலும் 59
★ Famous Quotations 61
★ The Right Time When Dreams Get Coloured 62
★ The Wind In A Frolic 63
★ இந்துக் கலை மரபில் சிற்பக்கலை 64
★ Studying literature and the purpose of learning literature 68
★ சிறந்த கணித வல்லுநர் பிரெடெரிக் காஸ் 69
★ வாழ்வில் கற்றலின் முக்கியத்துவம் 71
★ உலகமயமாதலும் உருக்குலையும் மனிதமும் 73
★ அனைவரையும் அரவணைப்பது இறையாட்சி 77
★ மாணவர் கல்வியும் பாடசாலைகளும் 79
★ ஈர நிலங்கள் 83
★ விசேட வழிகாட்டல் ஆலோசனையும் மாணவ அபிவிருத்தியும் 88
★ எண்களின் மதிப்பு 94
★ சமாதானத்தை நோக்கி 96
★ விழுமியமும் நாமும் 97
★ இணையம் (Internet) 98
★ பாடசாலை அபிவிருத்திச் சங்கம் 2012 / 2013 104
★ பாடசாலை அபிவிருத்திக் குழு - 2012/ 2013 104
★ பழைய மாணவர் சங்கம் 2012/2013 105
★ மலருக்கு அனுசரணை வழங்கியோர் 106
★ விளம்பரங்கள் 107 - 117
★ கல்லூரிக் கீதம் 118
★ நன்றி நவில்கின்றோம் 119

உ
சிவமயம்
குருபாதம்



# நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்

ஸ்தாபகர் :- ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள்
முதலாவது குருமஹா சந்நிதானம்
ஆதீன குரு முதல்வர் :- ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள்
இரண்டாவது குருமஹா சந்நிதானம்
ஸ்தாபிதம் : 1966

021 222 2870

பருத்தித்துறை வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம், இலங்கை.



# நல்லை ஆதீன முதல்வரின் ஆசிச் செய்தி


**கல்விசார் பெருந்தகையினருக்கு**

யா/ கோப்பாய் கிறிஸ்தவகல்லூரி இன்று தனது 160ம் ஆண்டு நிறைவை கொண்டாடுவதையிட்டு மகிழ்ச்சியடைகின்றோம். நீண்ட கல்விப்பாரம்பரியத்தின் கிறிஸ்தவ சமயமக்களுக்கு மட்டுமன்றி ஏனைய சமயமக்களுக்கும் கல்வியை 160 ஆண்டுகள் வழங்கி தலைநிமிர்ந்து நிற்பது அனைவருக்கும் மகிழ்ச்சியைத் தருகின்றது. கல்வியே கண்ணென போற்றும் வள்ளுவர் கூற்றுக்கமைய எல்லோருக்கும் கல்வி எனும் வகையில் பாடசாலை 160 ஆண்டுகள் பணியாற்றியமை அனைவருக்கும் சிந்தனைக்குரியதாகும். ஒழுக்கம், பண்பாடு, கல்வி மற்றும் ஏனைய துறைகளிலும் தனித்துவம் கொண்ட இப்பாடசாலை கோப்பாய் பிரதேச மக்களுக்கு மட்டுமன்றி ஏனைய பிரதேச மக்களுக்கும் கல்வியை வழங்கி நிற்கின்றது. இப்பாடசாலையின் வளர்ச்சிக்கு பணிபுரிந்த அதிபர்கள், ஆசிரியர்கள், நலன்விரும்பிகள் அனைவரையும் வாழ்த்தி பாராட்டுகின்றோம். இன்று போல் என்றும் பல்லாண்டு வாழ இறையருளை வேண்டி நிற்கின்றோம்.

"என்றும் வேண்டும் இன்ப அன்பு"

ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரதேசிகஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள்

# யாழ் ஆயர் அவர்களின் ஆசிச் செய்தி



கோப்பாய் Christian கல்லூரி நீண்ட வரலாற்றைக் கொண்ட ஒரு கல்லூரி. காலத்தின் தேவையைக் கருத்தில் கொண்டு இக் கல்லூரி காலத்திற்குக் காலம் மக்களுக்கும் சமூகத்திற்கும் ஆற்றி வருகின்ற பணிகளை அனைவரும் நன்கு அறிவார்கள். அந்த வகையிலே கல்லூரியினால் வெளியிடப்படுகின்ற சஞ்சிகையானது குறிப்பிட்டுச் சொல்லக் கூடிய மிக முக்கியமான பணியாகும். இருபத்தோராம் நூற்றாண்டின் இலத்திரனியல் யுகத்திலே வாசிப்புப் பழக்கமும் ஆக்கங்களை எழுதுகின்ற பழக்கமும் அருகிவருகின்ற இக்காலகட்டத்தில் இந்த சஞ்சிகையின் வெளிவருகை இக்குறைகளை நீக்கும் என்பதில் எந்த விதமான சந்தேகமும் இல்லை

இந்த மகத்தான பணியை முன்னெடுக்கின்ற கல்லூரிச் சமூகத்தையும் மலர்க்குழுவினரைப் மனதாரப் பாராட்டுவதோடு எல்லாம் வல்ல இறைவனின் ஆசீர்வாதமும் வழி நடத்தலும் நிறைவாக கிடைக்க ஆசித்து நிற்கின்றேன்

"ஆண்டவர் இயேசு உங்கள் அனைவரையும்
நிறைவாக ஆசீர்வதிப்பாராக"

அதி வண. தோமஸ் சவுந்தரநாயகம்
யாழ் ஆயர்
*26.06.2013*

*Bishop of Jaffna*
*Sri Lanka*

# மாகாணக் கல்விப் பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி



யா/கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி 1852 ஆம் ஆண்டளவில் தொடங்கப் பெற்றது. ஏறக்குறைய 160 ஆண்டை நிறைவு செய்து சிறந்த கல்விப் பணியாற்றிக் கொண்டிருக்கின்றது. யாழ் மாவட்டத்திலுள்ள சிறந்த பாடசாலைகளில் இதுவும் ஒன்று. புகழ் பூத்த கல்லூரியாக இருந்து பல்வேறு சாதனைகளை நிகழ்த்தி முதன்மையான கல்லூரிகளில் ஒன்றாக விளங்குகின்றது. உயர்கல்வி அனுமதியிலும், இணைபாட விதானச் செயற்பாடுகளிலும் இக் கல்லூரி முன்னிலை பெற்று வருகின்றது .

160 ஆவது ஆண்டை நிறைவு செய்யும் இக்காலப்பகுதியில் கடந்த பத்து வருடங்களின் சாதனைகளையும் உயர்பெறுபேறுகளையும் உள்ளடக்கி கல்லூரியின் வரலாற்றுச் சான்றாதாரமாக மலரொன்று வெளிவருவது அறிந்து அம்மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன்.

இக்கல்லூரிக்குப் பலமுறை சென்று பார்த்திருக்கின்றேன். நல்ல இயற்கை எழில் மிக்க சோலைகள் மத்தியில் கல்லூரி அமைந்துள்ளது. பல்வேறு வளங்களையும் தன்னகத்தே கொண்டு சிறந்த கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள் நடைபெறுவதை அவதானித்திருக்கின்றேன். இக்கல்லூரியில் கல்வி பயிலும் மாணவர்கள் பெரும்பாலானவர்கள் வறுமைக் கோட்டிற்கு உட்பட்டவர்கள். அவர்களது கல்வி அபிவிருத்திக்கான முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டு வருவது பாராட்டுக்குரியது மாணவர்களதும் ஆசிரியர்களதும் ஆக்கங்களுடன் கல்லூரியின் வரலாற்றுத் தகவல்களையும் தாங்கி வெளிவரும் 160 ஆவது ஆண்டு நிறைவு மலர் சிறந்த முறையில் வெளிவரவும் கல்லூரியின் மாணவர்களது அறிவு வளர்ச்சிக்கும்அவர்களது ஆளுமை வளர்ச்சிக்கும் இம் மலர் உறுதுணையாக இருக்கும் என நம்புகின்றேன்

நன்றி

04-07-2013

திரு .வை. செல்வராசா
**மாகாணக் கல்விப் பணிப்பாளர்**
வடமாகாணம்

# வலயக் கல்விப் பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி



யா/கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியினது 160வதுஆண்டு நிறைவையொட்டி வெளியிடப்படும் சஞ்சிகைக்கு ஆசிச்செய்தி வழங்குவதில் மகிழ்வடைகின்றேன்.

கோப்பாய் பிரதேசப் பிள்ளைகளினது கல்வி வளர்ச்சிக்கு உறுதுணையாக விளங்கிவரும் இப்பாடசாலையானது இப்பிரதேச மாணவர்களது கலாசார விளையாட்டு துறைகளிலும் தனது சிறப்பான பங்களிப்பினை வழங்கி வருகின்ற பாடசாலையாகும்.

1852 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட இப்பாடசாலையானது இன்று 160 ஆண்டுகள் தனது சிறப்பான பணியினை ஆற்றியுள்ளது. இப்பாடசாலையிலிருந்து மாணவர்கள் பல்கலைக்கழகங்களுக்கும், நுண்கலைப்பீடத்திற்கும், கல்வியியல் கல்லூரிகளுக்கும் வருடாந்தம் அனுமதி பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

இப் பாடசாலையானது கல்வியோடு மட்டுமன்றி இணைப்பாடவிதானச் செயற்பாடுகளிலும் முன்னிலை வகிக்கின்றது. குறிப்பாக கோட்ட, வலய, மாகாண மட்டங்களில் பல இடங்களைப் பெற்றுள்ளதுடன் தேசிய மட்டத்திலும் சாதனைகளைப் புரிந்துள்ளது.

இப்பாடசாலை மென்மேலும் வளர்ச்சி பெற்று கோப்பாய் பிரதேச மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு உறுதுணையாக விளங்க வாழ்த்துகின்றேன்.

**செ. உதயகுமார்**
**வலயக்கல்விப் பணிப்பாளர்**
**யாழ். கல்விவலயம்**

01.07.2013

# கோப்பாய்ப் பிரதேச செயலரின் வாழ்த்துச் செய்தி



வலிகாமம் கிழக்கு கோப்பாய்ப் பிரதேச செயலகப் பிரிவில் ஒளிரும் யா/ கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியானது தனது 160 வது ஆண்டு நிறைவையொட்டி வெளியிடும் சஞ்சிகைக்கு ஆசிச் செய்தி வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன்.

யா/கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியானது 1852 ஆம் ஆண்டு CMS மிஷனறிமாரால் ஆரம்பிக்கப்பட்டு தேவாலயக் குருவானவரின் மேற்பார்வையில் இயங்கியது. பழமையும், பெருமையும் வாய்ந்த இக் கல்லூரி1945 இல் பெண்கள் விடுதிப் பாடசாலையுடன் இணைக்கப்பட்டு கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி எனப் பெயர்மாற்றம் பெற்று இயங்கத்தொடங்கியது இக்கல்லூரி தன்னுடைய விடாமுயற்சியால் கல்வியில் மட்டுமன்றி ஒழுக்கம் இணைப்பாடவிதானச் செயற்பாடுகளிலும் மேன்மை பெற்று நிற்கின்றது. இத்துடன் மாணவர்கள் பெற்றுக் கொண்ட உயர்வான சாதனைகளை வெளிக் கொணர்வதற்கும் இச்சஞ்சிகை களம் அமைத்துக் கொடுக்கின்றது.

மாணவர்களின் ஆக்கத் திறனுக்கு களம் அமைத்துக் கொடுத்து அவர்களுடைய எழுத்தாற்றல் சிந்தனா சக்தியை மேம்படுத்தி ஆக்கங்களை வெளிக் கொணரும் ஊடகமாக இச்சஞ்சிகை காணப்படுகின்றது.

கோப்பாய்ப் பிரதேசத்தில் பிரபல்யம் பெற்று விளங்கும் இக்கல்லூரியானது பல மாணவர்களை பல்கலைக்கழகத்திற்கு வருடாவருடம் அனுப்பி வைக்கும் பெருமையைக் கொண்டது. இவ்வாறு மாணவர்களின் கல்வி விருத்திக்குரிய சேவைகளை ஆற்றும் கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி சிறப்பிடம் பெறுவதுடன் மாணவர்களின் பல்வேறுபட்ட அறிவு விருத்திக்கும் தோள் கொடுத்துச் சிறப்புடன் செயற்படுகின்றது. இப்பாடசாலையில் கல்வி கற்ற பலர் கல்வியியலாளர்களாகவும், புத்திஜீவிகளாகவும் சமூகப் பொறுப்புடையோராகவும் எமது பிரதேசத்திலும் வாழ்ந்து வருகின்றனர் .

இந்த அர்ப்பணிப்பு மிக்க கல்விச் சேவைக்காக தங்களை ஈடுபடுத்தி வருகின்ற அதிபர், ஆசிரியர், பழைய மாணவர்களுக்கும் மற்றும் மலர்க்குழுவினருக்கும் நல்வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்வதுடன், இக் கல்லூரி மேன்மேலும் சிறப்பு பெறவும், கல்லூரி நின்று நிலைத்திருக்கவும் எல்லாம் வல்ல இறையருளை வேண்டி நிற்கின்றேன்.

திரு. மருதலிங்கம் பிரதீபன்
பிரதேச செயலர், பிரதேச செயலகம்
*கோப்பாய்*

# கோப்பாய்க் கோட்டக்கல்விப் பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி



160 ஆண்டுகளாக கோப்பாய்ப் பிரதேசத்திற்கு அறிவொளி பரப்பிக்கொண்டிருக்கும் கோப்பாய்க் கிறிஸ்தவ கல்லூரியின் 160 ஆவது ஆண்டு விழாவை முன்னிட்டு வெளியிடப்படும் சிறப்பு மலருக்கு வாழ்த்துச்செய்தி வழங்குவதில் பெருமகிழ்வடைகின்றேன். ஐரோப்பியர் வருகை கல்வி பெறும் வாய்ப்பைப் பரவலாக்கியது. கோப்பாய்ப் பிரதேசத்தில் கல்வி வளர்ச்சிக்கு கோப்பாய்கிறிஸ்தவ கல்லூரி ஆற்றிய பணி அளப்பரியது.

வெளிநாடுகளில் பலமான பழைய மாணவர் சங்கங்களைக் கொண்டுள்ள சில கல்லூரிகளில் இக் கல்லூரியும் ஒன்றாகக் காணப்படுகின்றது. பழைய மாணவர்கள் காட்டிவரும் பேரார்வம் இக் கல்லூரியின் வளர்ச்சிக்குப் பெரிதும் துணை புரியும் என நினைக்கின்றேன்.

ஆங்கிலத்தைப் போதனா மொழியாகக் கொண்டு இயங்கிவந்த இக் கல்லூரி தேசிய எழுச்சியின் பின்னர் சுயபாஷாமொழிக் கல்லூரியாக மாறி இப் பிரதேச மக்களின் அறிவுப்பசிக்கு தீனி போட்டுக் கொண்டிருக்கின்றது. ஆண்டு தோறும் பல மாணவர்களை பல்கலைக் கழகங்களுக்கும் வேறு மூன்றாம் நிலைக் கல்விக் கூடங்களிற்கும் அனுப்பிக் கொண்டிருக்கும் இக்கல்லூரி இணைபாடவிதானச் செயற்பாடுகளிலும் தேசிய மட்டம் வரை சென்று பல சாதனைகளைப் படைக்கின்றது. ஆயிரம் பாடசாலைகள் திட்டத்தின் கீழ் உள்வாங்கப் பட்டிருக்கும் இக்கல்லூரி மென்மேலும் வளர்ச்சியடையும் என்பதில் சந்தேகமில்லை.

ஆரம்ப காலத்தில் மாணவர் விடுதி வசதிகளுடன் இயங்கி வந்த இக்கல்லூரியில் நாட்டின் பல பாகங்களிலும் இருந்து வருகை தந்த மாணவர்கள் கல்வி கற்றனர். இன்று விடுதி வசதிகள் இல்லாவிடினும் கோப்பாய் பிரதேசம் முழுவதிலுமிருந்து மாணவர்கள் விரும்பி வந்து சேரும் கல்லூரியாக இது மிளிர்கின்றது.

அதிபர் திரு. க. இ. இராசசேகரம் அவர்களின் அயராத முயற்சியும், ஆசிரியர்களின் தளராத அர்ப்பணிப்பும் தரமான கல்வியை மாணவர்கள் பெற்றுக்கொள்வதற்கு பெரிதும் உதவுகின்றது. இது பாராட்டுதற்குரியது. கல்லூரியின் எதிர்கால வளர்ச்சிக்கு எனது மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன். இம்மலர் இக் கல்லூரியின் வரலாற்றுத் தடத்தில் பெரிய சாதனையென்றே கூறமுடியும்.

" கலலூரி மென்மேலும் வளர்ச்சியடைய எனது வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றேன் "

திரு. வே.பாலசுப்ரமணியம்
**கோட்டக் கல்விப் பணிப்பாளர்**
**கோப்பாய்க் கோட்டம்**

# அதிபரின் உள்ளத்திலிருந்து...



1852ஆம் ஆண்டு C.M.S மிஷனரிமாரால் ஆரம்பிக்கப்பட்ட எமது கிறிஸ்தவ கல்லூரி அன்னையின் 160 ஆண்டு வரலாற்றில் தடம்பதிக்கப்பட்ட சாதனைகள் பல கல்லூரியின் கடந்து வந்த பாதையைத் திரும்பிப் பார்ப்பதில் மனம் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றது. கல்லூரி அன்னையின் மடியில் என் பாதம் பதித்த இளங்காலைப் பொழுதை எண்ணும் போது உள்ளம் புளங்காகிதம் கொள்கிறது. கல்லூரி அன்னையின் மடியில் வளர்ந்து உயர்ந்து உலகெங்கிலும் பரந்து வாழும் அன்னையின் பிள்ளைகள் அனைவரும் அன்னையின் வளர்ச்சி கண்டு மனம் மகிழ்வர் என்பதில் ஐயமில்லை.

கல்லூரி ஒன்றில் கல்வி கற்றுஅக்கல்லூரியிலேயே அதிபராகப் பதவி வகிப்பது எல்லோருக்கும் கிடைக்கக் கூடிய பேறல்ல. கிறிஸ்தவக் கல்லூரியில் கல்வி கற்று அதிபர்களாக கடமையாற்றியவர்களில் ஒருவராக, எனது கல்லூரியிலே அதிபராகக் கடமையாற்றுகின்றேன் என்பதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன்.

யாழ் மாவட்டத்தின் புகழ்பூத்த கல்லூரிகளில் ஒன்றாக விளங்கும் எமது கல்லூரியில் அண்மைக் காலங்களில் கல்லூரியை சிறப்பாகச் வழிநடாத்திய திரு. த. முத்துக்குமாரசுவாமி அவர்களுக்குப் பின் திரு. ந. சிவகடாட்சம் அவர்களின் காலத்தில் 150ஆவது ஆண்டு விழா கொண்டாடப்பட்டு மலரொன்றும் வெளியிடப்பட்டது. அவரின் அகாலமரணத்தின் பின் அதிபராகப் பொறுப்பேற்றுக் கொண்ட திரு. அ. அகிலதாஸ் அவர்கள் கல்லூரியை சிறப்பாக வழிநடத்தியதுடன் சண்முகநாதன் மண்டப புனரமைப்பு, மைதானப்புனரமைப்பு, பூங்கன்றுகள் நடப்பட்டு அதற்கான பாதுகாப்புச் சுவர் அமைக்கப்பட்டமை ஆகிய திட்டங்களை நடைமுறைப்படுத்தியதுடன் கல்லூரி மாணவர்களுக்கான காலுறைகளையும் அறிமுகப் படுத்தினார். அவர் கொக்குவில் இந்துக் கல்லூரிக்கு இடமாற்றம் பெற்றுச் சென்றமையால் கல்லூரியின் பழைய மாணவனாகிய நான் 2007ஆம் ஆண்டு கல்லூரியின் அதிபராகப் பொறுப்பேற்றுக் கொண்டேன்.

கல்லூரியின் பரீட்சைப்பெறுபேறுகளிலும், இணைபாட விதானச் செயற்பாடுகளிலும் பிரபல கல்லூரிகளுக்கு இணையாக எமது கல்லூரி விளங்குகின்றது. நான் கல்லூரியின் அதிபராகப் பொறுப்பேற்றதன் பின் பல்கலைக்கழக அனுமதியிலும் கல்வியியல் கல்லூரி அனுமதியிலும், மாணவர்கள் உயர் கல்வி வாய்ப்புப் பெற்றுள்ளனர் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றேன். ஆண்டு தோறும் இருபதுக்கும் மேற்பட்ட மாணவர்கள் உயர்கல்வி பெறுவதற்குச் செல்கின்றனர்.

இணைபாடவிதானச் செயற்பாடுகளில் எமது கல்லூரி முன்னிலை பெற்று வருகின்றது. குறிப்பாக 2012ஆம் ஆண்டு கோட்டமட்ட விளையாட்டுப் போட்டியில் 90 இடங்களைப் பெற்று

முதலாமிடத்தையும், வலயமட்டத்தில் 27இடங்களையும் மாவட்டத்தில் 16 இடங்களையும் மாகாணத்தில் 9இடங்களையும் பெற்றுள்ளதுடன் தேசிய மட்டத்திலும் சாதனை புரிந்துள்ளது.

கல்லூரியின் பௌதிக வளங்கள் பூரணப்படுத்தப்பட்டுள்ளன. கல்லூரியின் குடிநீர் தேவையைப் பூர்த்தி செய்யும் வகையில் 2000 கலன் நீர்த்தாங்கி அமைக்கப்பட்டுள்ளது. மண்டபங்கள் வர்ணங்கள் பூசப்பட்டு புனரமைப்புச் செய்யப்படுள்ளது. சமையற் கூடம் புதிதாக அமைக்கப்பட்டுள்ளது. பூங்கன்றுகளுக்கான பாதுகாப்புச் சுவர் அமைக்கப்பட்டுள்ளது.

எமது கல்லூரியில் நீண்ட காலமாக நிறைவேற்றப்படாதிருந்த கல்லூரிச் சுற்றுமதில் தெற்குப்பக்கத்திற்கும், மேற்குப் பக்கத்திற்கும் கட்டப்பட்டுள்ளது. கல்லூரியில் இவ் வாண்டில் நினைவு மண்டபம் புனரமைத்து வர்ணம் தீட்டப்பட்டுள்ளது.

எமது கல்லூரியில் மிக நீண்ட காலமாகச் சிறப்பாகச் சேவையாற்றிய பல ஆசிரியர்கள் இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ளார்கள். அதனால் ஏற்பட்ட வெற்றிடத்தை பல புதிய ஆசிரியர்கள் இடமாற்றப் பெற்று வந்து ஈடுசெய்துள்ளார்கள். எதிர்காலத்தில் எமது கல்லூரிசிறப்பான முறையில் செயற்படும் என எதிர்ப்பார்க்கின்றேன்.

எமது கல்லூரி ஆயிரம் பாடசாலைகள் அபிவிருத்தித் திட்டத்தில் 2ஆம் கட்டமாக உள்வாங்கப்பட்டு அதற்கான செயற்பாடுகள் முன்னெடுக்கப்படவுள்ளதுடன் "மகிந்தோதய" திட்டத்தின் கீழ் எமது கல்லூரியில் தொழில் நுட்ப ஆய்வுகூடம் அமைப்பதற்கான ஆரம்பக்கட்ட வேலைகள் நடைபெற்று வருகின்றன.

எமது கல்லூரியின் வளர்ச்சிக்கு வலயக் கல்விப் பணிப்பாளர், பிரதிக்கல்விப் பணிப்பாளர்கள், உதவிக்கல்விப்பணிப்பாளர்கள், ஆசிரிய ஆலோசகர்கள் ஆகியோர் பெரும் பங்களிப்புச் செய்துள்ளார்கள். அவர்களிற்கும் இச் சந்தர்ப்பத்தில் நன்றிகளைக் தெரிவித்துக் கொள்கின்றேன். எமது கல்லூரியின் வளர்ச்சிக்குப் பல வழிகளிலும் ஒத்துழைப்பு வழங்கும் எமது கோப்பாய் கோட்டக் கல்விப் பணிப்பாளர் அவர்களுக்கும், உத்தியோத்தர்களுக்கும் எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

எமது கல்லூரியின் வளர்ச்சியில் என்னோடு தோளோடு தோள் நின்ற எனது நிர்வாகக் குழுவினர், ஆசிரியர்கள், கல்விசாரா உத்தியோகத்தர்கள், பழைய மாணவர்சங்க உறுப்பினர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள், பாடசாலை அபிவிருத்திக் குழுவினர் அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

எமது கல்லூரி 160வது ஆண்டு நிறைவை விழாவை முன்னிட்டு வெளிவரும் மலர், சிறப்புடன் வெளிவர அயராது பாடுபட்ட மலர்க்குழுவினருக்கும் இந்த மகிழ்ச்சியான சந்தர்ப்பத்தில் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**திரு. க. இ. இராசசேகரம்**
**அதிபர்**
**யா/ கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி**
***கோப்பாய்***

# பிரதி அதிபரின் இதயத்தின் பதிவுகள்...



நீண்ட கால வரலாற்றினைக் கொண்ட எமது கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி 160ஆவது வருடத்தை கடந்து கல்விப் பணியாற்றிக் கொண்டிருக்கின்றது. கல்லூரியின் பத்து வருட சாதனைகளை உள்ளடக்கி கல்லூரி மலர் ஒன்று வெளிவருகின்றது. சாதனைகளை வெளிப்படுத்தும் சான்றுகளாக விளங்கும் கல்லூரி மலர்கள் ஆண்டு தோறும் வெளிவருவது இலகுவான விடயமல்ல. 2002ஆம் ஆண்டு 150ஆவது ஆண்டு மலர் பல்வேறு விடயங்களை உள்ளடக்கியும் கல்லூரிப் பிரதேசத்தின் வளங்களையும் சேவை நிறுவனங்களின் தகவல்களையும் வெளிக்கொணரும் வகையில் சிறப்பான முறையில் வெளிவந்தது. இம்மலரின் உருவாக்கத்திற்கு எனது முழுமையான பங்களிப்பை வழங்கியது போலவே 160ஆவது நிறைவையொட்டி வெளிவரும் இம் மலரும் சிறப்புற வெளிவரமுழுமையாக அர்ப்பணிப்புடன் செயற்பட இறையருளை வேண்டுகின்றேன்.

எமது கல்லூரியின் கடந்த பத்து வருடங்களின் தகவல்களை உள்ளடக்கியும், மாணவர், ஆசிரியர்களது ஆக்கங்களைத் தாங்கியும் கல்லூரி மலர் வெளிவருகின்றது. கல்லூரிச் சஞ்சிகை ஒன்று வெளியிடுவது என்பது சாதாரண விடயமல்ல தகவல்களைச் சேரிப்பதும், ஆக்கங்களைப் பெற்றுக் கொள்வதும் சிரமமான விடயம் எனினும் பல்வேறு சிரமங்களின் மத்தியில் இம் மலர் வெளிவருகின்றது. கடந்த 10 வருடங்களைப் பின்நோக்கிப் பார்க்கின்ற போது திரு. ந. சிவகடாட்சம் திரு. அ. அகிலதாஸ், திரு. க. இ. இராசசேகரம் ஆகிய மூவரும் அதிபர்களாகவிருந்து பணியாற்றி இருக்கின்றார்கள். இம் மூவரும் தாம் பணியாற்றிய காலங்களில் கல்லூரியின் வளர்ச்சியில் அர்ப்பணிப்புடன் செயலாற்றியுள்ளார்கள். மறைந்த அதிபர் அமரர். ந. சிவகடாட்சம் பதித்துச் சென்ற பாதச்சுவடுகளிலிருந்து திரு. அ. அகிலதாஸ் அவர்கள் கல்லூரியைச் செம்மையாக வழிநடத்தினார். பல்வேறு வகையான அபிவிருத்தி வேலைத்திட்டங்களை முன்னெடுத்தார். சிறந்த முறையில் கற்றல், கற்பித்தல் இணைபாடவிதானச் செயற்பாடுகள் நடைபெறுவதற்கு ஏற்ற நடவடிக்கைகளை எடுத்துச் செயற்படுத்தி வரும் காலத்தில் இடமாற்றம் பெற்றுச் சென்றார்.

இதன் பின் எமது கல்லூரியின் பழைய மாணவரான திரு. க. இ. இராசசேகரம் அவர்கள் அதிபராகப் பொறுப்பேற்றுச்சிறந்த முறையில் கல்லூரியை நிர்வகித்து வருகின்றார். இவரது காலத்தில் கல்லூரியின் அவசிய தேவைகளில் ஒன்றான தண்ணீர்த் தாங்கியொன்று நவீன முறையில் நிர்மாணிக்கப்பட்டுள்ளதுடன், கல்லூரி வளாகத்தின் பாதுகாப்பை பேணும் நோக்குடன், பாதுகாப்பு மதில் அமைக்கப்பட்டமை பாராட்டுதற்குரிய முயற்சியாகும். கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகள் சிறந்த முறையில் முன்னெடுக்கப்பட்டமையால் வருடந்தோறும் உயர்கல்வி பெறுவதற்கான மாணவர்கள் எண்ணிக்கை அதிகரித்துச் செல்வது மகிழ்ச்சியைத் தரும் செய்தியாகும்.

இணைப்பாட விதானச் செயற்பாடுகளில் சிறந்த முறையில் வளர்ச்சி காண்டு தேசிய மட்டப் போட்டிகளிலும் எமது மாணவர்கள் பங்குபற்றி வருகின்றார்கள்.

நீண்ட காலம் எமது கல்லூரியில் கல்வி கற்பித்த மூத்த ஆசிரியர்கள் பலர் இடமாற்றம் பெற்றுச் சென்றுவிட்டார்கள். இது கல்லூரி வரலாற்றில் பெருந்தாக்கத்தை ஏற்படுத்தி விட்ட போதிலும், புதிதாக எமது கல்லூரிக்கு இடமாற்றம் பெற்று வந்து இணைந்து கொண்டவர்கள் சிறப்பான முறையில் சேவையாற்றுவது கல்லூரியின் எதிர்கால வளர்ச்சிக்கு துணையாக அமையும் என நம்புகின்றேன். இத்தகைய சூழ்நிலையில் 160ஆவது ஆண்டு நிறைவை கல்லூரி எட்டியுள்ளது. இந் நிறைவைமுன்னிட்டு மலரொன்று வெளிவருகின்றது கல்லூரியின் பத்தாண்டுச்சாதனைகளை உள்ளடக்கி வெளிவரும் மலரானது சிறந்த முறையில் வெளிவர எல்லாம் வல்ல இறைவனை வேண்டி வாழ்த்துகின்றேன்.

திரு. சி. சிவலிங்கம்
பிரதி அதிபர்
யா/ கோப்பாய் கிறிஸ்தவகல்லூரி

# பிரதி அதிபரின் வாழ்த்துச் செய்தி...



இலங்கைத் தீவின் தலையாய் விளங்கும் யாழ்ப்பாணத்தில் இயற்கை எழில் கொஞ்சும் அழகிய கிராமம் கோப்பாய் ஆகும். விவசாயம் பல்கிப் பெருகி வளம் சேர்க்கும் கிராமத்தில் கல்வி வளம் பெருகுவதற்கு பல பாடசாலைகள் அமைந்திருந்தாலும் கல்விமான்களை, கவிஞர்களை, கலைஞர்களை உருவாக்கிய பெருமையும் பேறும் கோப்பாய் மண்ணில் கட்டி எழுப்பப்பட்ட கிறிஸ்தவ கல்லூரிக்கே உரியதாகும் .

யாழ்ப்பாணத்தில் தலைநிமிர்ந்து, தலைசிறந்து நிற்கும் பழமை வாய்ந்த கல்லூரிகளில் ஒன்றாக திகழ்வது கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியாகும் இயற்கை எழில் பரப்பும் இக் கல்லூரியின் நிலப்பரப்பு மிகப் பரந்தது ஆறு ஏக்கர் நிலப்பரப்பில் விரிந்து கல்விச் சேவையை வழங்கி வருவது குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

இங்கு கலைப்பிரிவு வர்த்தகப்பிரிவு, கணிதப்பிரிவு, விஞ்ஞானபிரிவு ஆகிய பிரிவுகளில் பன்னெடுங் காலமாக சாதனை புரிந்து வரும் கல்லூரியாகவும் இக்கல்லூரி திகழ்கிறது. ஏழ்மைக்குட்பட்ட மாணவர், எண்ணிக்கையை அதிகமாக கொண்ட கல்லூரியாயினும் அவர்தம் பேருக்கம் காரணமாகச் சிறந்த பெறுபேறுகளைக் கொண்ட கல்லூரியாக விளங்குகிறது. இணைபாடவிதானச் செயற்பாடுகளிலும் ஈடிணையற்ற பெருமையை ஈட்டிக் கொள்ளும் கல்லூரி என்ற நிலையினைக் கொண்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது

நூற்று அறுபதாவது அகவையை கொண்டாடி மகிழும் கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியானது சேவைகள் பல புரிந்து மண்ணில் நல்லோரையும் வல்லோரையும் உருவாக்கிய பெருமையுடன் மன நிறைவுடன் நிமிர்ந்து ஓங்கி விரிந்து கல்விப்பணி தொடர்வது பாராட்டுதற்குரியது

மேலும் நூற்று அறுபதாவது அகவையைக் கொண்டாடும் கல்லூரி அன்னைக்கு விழா எடுக்கும் இவ்வேளை அன்னையின் அருமைபெருமைகளை எடுத்துரைக்க மலர் ஒன்றினை வெளியிடுவது மிகவும் பொருத்தமுடையதாகும் இம்மலர் வெளியீடு சிறப்புறவும் கல்லூரி அன்னையின் சேவைகள் தொடர்நிலையில் பெருமை சேர்க்கவும் வாழ்த்துக்களையும் ஆசிகளையும் வழங்குவதில் அக மகிழ்கின்றேன்


நன்றி


சு. திருநாவுக்கரசு
பிரதி அதிபர்
யா/கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி

# எமது கல்லூரி அதிபர்




திரு. க.இ. இராசசேகரம் (Trd., Scie., B.A, Dip., in Edu., SLPS - I)


க.பொ.த.(சாதாரண தர) பரீட்சையில் சித்தி
தோற்றிய மாணவர்கள்
சித்தியடைந்த மாணவர்கள்
0
20
40
60
80
100
120
140
160
107
36
119
29
114
35
153
59
112
63
47
35
116
47
95
35
78
41
95
33
85
35
2002
2003
2004
2005
2006
2007
2008
2009
2010
2011
2012


க.பொ.த.(உயர் தர) பரீட்சையில் சித்தி
தோற்றிய மாணவர்கள்
சித்தியடைந்த மாணவர்கள்
0
20
40
60
80
100
120
2002
2003
2004
2005
2006
2007
2008
2009
2010
2011
2012
71
58
103
42
53
40
70
38
99
42
60
45
89
59
79
52
67
33
74
35
66
30

## எமது கல்லூரியின் பிரதி அதிபர்கள்



**திரு. சி. சிவலிங்கம்**
(B.A, Dip. in Ed., SLTS - I)



**திரு. சு. திருநாவுக்கரசு**
(Agr., Trd., SLPS 2-II)

# எங்கள் பகுதி தலைவர்கள்



திருமதி இ. சிவலிங்கம்
(B.A, Dip.inEd, SLTS - I)



திருமதி ய. சந்திரலிங்கம்
(Trd. Social, SLTS -1)



திரு. செ. ஜெயரத்தினம்
(Trd. Sci., SLTS - I)



திரு. ஐ.மகேந்திராசா
(Trd. Maths, SLTS - I)



திருமதி இ. அருந்தவநாதன்
B.A. (Hones) Dip.in Ed., SLTS -I)



திரு. வி. லிங்கேஸ்வரன்
(B.Sc, Dip. in Edu. SLTS 2 - II)

# பல்கலைக்கழக மாணவர் அனுமதி

## 2003 / 2004

| | | |
|---|---|---|
| பொறியல்த்துறை | சி. ஜனார்த்தனன் | |
| முகாமைத்துவப் பிரிவு | கா. சங்கீதா | |
| கலைப்பிரிவு | இ. பிரதீபன் | |

## 2004 / 2005

| | | |
|---|---|---|
| பௌதீக விஞ்ஞான பிரிவு | நி. செந்தூரன் | |
| கலைத்துறை | த. சிவரூபி | |
| | ந. கேமவர்த்தனி | |
| | த. ஜெயகோபி | |
| | எஸ். கோமளாதேவி | |
| நுண்கலைப்பிரிவு | வி. அனுசியா | (நடனம்) |
| கல்வியியற் கல்லூரி | இ. தேன்மொழி | (சங்கீதம்) |
| | அ. அனித்தா | (உடற்கல்வி) |

## 2005 / 2006

| | | |
|---|---|---|
| மருத்துவத்துறை | சி .நித்தியரூபன் | |
| பொறியியல்துறை | சி. கோபிகா | |
| முகாமைத்துவம் | தி. திருமாலினி | |
| கலைப்பிரிவு | சி. கிரியா | |
| | செ. சிவானதி | |
| | ஜெ. சர்மிலா | |

## 2006 / 2007

| | | |
|---|---|---|
| கலைப்பிரிவு | யோ. சசிகரன் | |
| | த. சங்கீதா | |
| | த. திருநிலைநாயகி | |
| | த. தயேந்திரன் | (சித்திரமும் வடிவமைப்பும்) |
| | வி. விஜயசாந்தினி | (சித்திரமும் வடிவமைப்பும்) |
| | தி. கமலலோஜினி | (சங்கீதம்) |
| | வி. பவுசியா | (சங்கீதம்) |
| | எ. எருசா | (சங்கீதம்) |

## 2007 / 2008

| | | |
|---|---|---|
| கலைப்பிரிவு | தா. லக்ஷன்நீதிராசா | |
| | கு. குணஜா | |
| | ச. வினோஜா | |
| | பா. விதுப்பிரியா | (நடனம்) |
| | இ. பதுஷா | (நடனம்) |
| சித்தமருத்துவபிரிவு | லோ. சுதாஜனனி | |
| விவசாயபீடம் | எஸ். கார்த்திகா | |

கல்வியற் கல்லூரி அனுமதி பெற்றோர்

| | | |
|---|---|---|
| | இ. சிவநந்தினி | (ஆரம்பக்கல்வி) |
| | ந. ஜனனி | (இந்துசமயம்) |
| | ச. சவுந்தினி | (ஆரம்பக்கல்வி) |
| | சி. சுதாகரன் | (விவசாயம்) |
| | ப. விஜிதரன் | (விவசாயம்) |

## 2008 / 2009

| | | |
|---|---|---|
| சித்தமருத்துவத்துறை | சி. சயூந்தினி | |
| வர்த்தகப் பிரிவு | தே. கபில்ராஜ் | |
| | த. நிசாளினி | |
| கலைப்பிரிவு | சோ. ஜெயதேவி | |
| | யோ. கிரிஜா | |
| | செ. சிந்துஜா | |
| | இ. கார்த்தீபன் | |
| நுண்கலைப்பிரிவு | | |
| | ஜெ. லக்ஷலா | (நடனம்) |
| | ரா. பரிஸ்ரா ஜேம்ஸ் லிற்றினி | (சங்கீதம்) |
| | ந. பாதுஷா | (நடனம்) |
| | சி. சுகந்தினி | (நடனம்) |
| | ச. அருள்மொழிவர்மன் | (சங்கீதம்) |
| | இ. சாலினி | (சங்கீதம்) |
| கல்வியற் கல்லூரி அனுமதி | | |
| | தா. றுக்ஷி அன்சியா | (நடனம்) |
| | பா. நதியா | (சித்திரம்) |

## 2009 / 2010

| | | |
|---|---|---|
| சித்தமருத்துவம் | சு. ரகுசாந் | |
| உயிரியல்விஞ்ஞானம் | ச. சரண்யா | |
| கலைப்பிரிவு. | இ. நிரோகரன் | |
| | ம. தர்சிகா | |
| | பா. மயூரிகா | |
| | ச. உஷாந்தினி | |
| | செ. தர்மராஜா | |
| | த. ஜனனி | (நடனம்) |
| நுண்கலைப்பிரிவு | | |
| | இ. சங்கீதா | (சங்கீதம்) |
| | ம. கிருபாஹரி | (நடனம்) |
| | ச. தேவகுமாரி | (நடனம்) |
| | செ. கோகிலம் | (சங்கீதம்) |
| | த. அஜித்குமார் | (சித்திரமும் வடிவமைப்பும்) |
| | பா. பிரதீபன் | (சித்திரமும் வடிவமைப்பும்) |
| கல்வியற்கல்லூரி | | |
| | ம. நிரோசன் | (நாடகமும் அரங்கியலும்) |
| | தே. சுசிலதா | (மனைப் பொருளியல்) |
| | ஜெ. சாளினி | (சங்கீதம்) |
| | ஸ்ரீ. சோபிதா | (சங்கீதம்) |

## 2010 / 2011

உணவும் தொழில்நுட்பபிரிவு — ச. தனுசன்
விஞ்ஞானமும் தொழில்நுட்பம் — இ. கோபிக்கண்ணா
விவசாய விஞ்ஞானப் பிரிவு — சு. சுகிர்தரூபன்
பௌதிக விஞ்ஞானப் பிரிவு — க. ஸ்ரீரூபன்
பிரயோக விஞ்ஞானப் பிரிவு — ச. வனுராகினி
மருந்தாக்கவியல் பிரிவு — த. கீரீந்திரன்
கலைப்பிரிவு — இ. பிருந்தா
ஸ்ரீ. பத்மகரன் (சித்திரம்)
தே. சோபனா

கல்வியற்கல்லூரி அனுமதி

நி. தனஞ்செனி (ஆரம்பக்கல்வி)
இ. சங்கீத் (விஞ்ஞானம்)
வை. ரம்யா (நாடகமும் அரங்கியலும்)
ந. பாசினி (சங்கீதம்)

## 2011 / 2012

பௌதிக விஞ்ஞானம் — இ. அனோஜா
வர்த்தக பிரிவு — செ. டனோசியன்
கலைப்பிரிவு — ஸ்ரீ. ஜனனி
நா. தர்சிகா
பா. ராகினி
ந. தாரணி
இ. பகீரதன்
க. கார்த்திகா
தெ. கனிதா

நுண்கலைப்பீடம்

த. திலோத்தமன் (நடனம்)
ர. மயூரி (நடனம்)
வி. விதூஷன் (நாடகமும் அரங்கியலும்)
யோ. நர்மிதா (சங்கீதம்)
ம. சோபிகா (நடனம்)

கல்வியற்கல்லூரி அனுமதி எதிர்பார்க்கப்படுவோர்

வீ. கஜேந்தினி (தமிழ்)
சு. ஜீவாஸ்கரன் (விவசாயம்)
கு. தக்ஷாயினி (விவசாயம்)
சி. சாளினி (நடனம்)
அ. மேரிகொலஸ்ரீனா (கிறிஸ்தவம்)
ச. பிரதாபன் (2ம் மொழி)
கு. பிரியா (ஆரம்பக்கல்வி)
சே. சுபாசினி (கணிதம்)
ச. பிரதீபா (சங்கீதம்)
மு. மிரோசன் (ஆரம்பக்கல்வி)

# மெய்வல்லுநர் விளையாட்டுத்துறை - 2012

## மாகாண மட்டத்தில் சாதனை படைத்து தேசிய மட்டத்திற்கு தெரிவு செய்யப்பட்ட மாணவர்கள்

| போட்டி | வீரர்கள் | இடம் |
|---|---|---|
| 100 மீற்றர் | செல்வன் நா. சுமன் | 1ஆம் இடம் |
| 200 மீற்றர் | செல்வன் நா. சுமன் | 1ஆம் இடம் |
| 400 மீற்றர் | செல்வன் பா. சாலுஜன் | 2ஆம் இடம் |
| தட்டெறிதல் | செல்வி சு. ரேமியா | 1ஆம் இடம் |
| பழுதூக்கல் | செல்வன் க. கஜந்தன் | 2ஆம் இடம் |
| கராத்தே | செல்வன் மூ. கஜிகரன் | 3ஆம் இடம் |
| கராத்தே | செல்வன் நா. மனோகரன் | 3ஆம் இடம் |
| கராத்தே | செல்வன் சி. சிவராசா | 1ஆம் இடம் |
| கராத்தே | செல்வன் பொ. ஜெசிந்தன் | 3ஆம் இடம் |

### விசேட பரிசு

| | |
|---|---|
| சாரணர் | ஜனாதிபதி விருதுத் தகுதி |
| செல்வன் பா. அருணன் | ஜனாதிபதி விருதுத் தகுதி |
| செல்வன் பா. அஜந்தன் | ஜனாதிபதி விருதுத் தகுதி |
| செல்வன் பா. வேணுஜன் | திரிசாரணர் விருதுத் தகுதி |

## மெய்வல்லுநர் விளையாட்டுத்துறை - 2013
## மாகாண மட்டத்திற்குத் தெரிவு செய்யப்பட்டோர்

| போட்டி | வீரர்கள் | இடம் |
|---|---|---|
| 100 மீற்றர் | கலையரசன் | 1ஆம் இடம் |
| 200 மீற்றர் | கலையரசன் | 2ஆம் இடம் |
| 100 மீற்றர் | நா. சுமன் | 1ஆம் இடம் |
| 200 மீற்றர் | நா. சுமன் | 1ஆம் இடம் |
| குண்டெறிதல் | இ. இசைவாணன் | 2ஆம் இடம் |
| தட்டெறிதல் | இ.இசைவாணன் | 3ஆம் இடம் |
| 100 மீற்றர் தடை தாண்டல் | வ. நிலக்ஷா | 3ஆம் இடம் |
| ஈட்டியெறிதல் | வ. மதுரன் | 2ஆம் இடம் |
| 100 மீற்றர் ஓட்டம் | த. லஸ்சிகா | 3ஆம் இடம் |
| 100 மீற்றர் தடை தாண்டல் | A. நிறோஜன் | 3ஆம் இடம் |
| 400 மீற்றர் தடைதாண்டல் | B. சாலுஜன் | 3ஆம் இடம் |
| தட்டெறிதல் | S. லக்சனா | 1ஆம் இடம் |
| குண்டெறிதல் | சு. ரேமியா | 3ஆம் இடம் |



அதிபர், பிரதி அதிபர்கள் ஆசிரியர்



சிரியர்கள், கல்விசாரா ஊழியர்கள்


## மாகாண பாடசாலைகள் விளையாட்டுப் போட்டி - 2013

### தேசிய மட்டத்திற்குத் தெரிவாகியோர்

பழுதூக்கும் போட்டி K. கஜந்தன் 2ஆம் இடம்

*****

## 2013 ஆம் ஆண்டு தேசிய மட்ட மெய்வல்லுனர் போட்டிக்கு தெரிவாகிய விளையாட்டு வீரர்கள்




நா. சுமன்



இ. இசைவானன்

✯ Royal Australian Chemical institute நடாத்திய National Chemistry quiz Sujanthan Raveendrarasan Districition ஐ பெற்றுள்ளார்.

# பருத்தித்துறை மாவட்டசாரண ஆணையாளராக நியமனம் பெற்ற சாதனையாளரைப் பாராட்டுகின்றோம்.



திரு. வே. சண்முகலிங்கம் அவர்கள் பருத்திதுத்துறை மாவட்ட சாரண ஆணையாளராக பதவி பெற்றதையிட்டு எமது கல்லூரியின் கல்விச் சமூகத்தின் சார்பாக பாராட்டுகின்றோம். எமது கல்லூரியில் கல்வி கற்று கணித ஆசிரியராக நியமனம் பெற்றவர். எமது கல்லூரியின் புகழ் மிக்க கணித ஆசிரியராக விளங்கியவர், தற்போது ஓய்வு நிலையிலுள்ளார். எமது கல்லூரியின் சாரணப் பொறுப்பாசிரியராக இருந்து சாரணியத் துறையின் வளர்ச்சிக்காக தன்னை அர்ப்பணித்து செயற்பட்டவர். ஓய்வு பெற்றுச் சென்ற போதும் கல்லூரியின் சாரணியத் துறை வளர்ச்சிக்காக உழைத்துக் கொண்டிருக்கின்றார். சாரணிய பல்வேறு வளர்ச்சிப் படியில் 2012ம் ஆண்டு பேடன் பௌவல் தினத்தில் பண்டாரநாயக்கா நினைவு மண்டபத்தில் ஜனாபதியின் சாரணர் சேவை பாராட்டுக் கடிதம் பெற்றவர். தற்போது பருத்துத்துறை மாவட்ட சாரண ஆணையாளராக நியமனம் பெற்றுள்ளார். எமது கல்லூரியின் பழைய மாணவனும் ஓய்வு நிலையிலுள்ள ஆசிரியருமான திரு. வே. சண்முகலிங்கத்தின் அரிய சேவையின் காரணமாக இரு சாரணர்கள் ஜனாதிபதி விருதிற்கான தகைமையில் விருது பெறுவ்தற்காக அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இது எமது கல்லூரியின் சாரணீய வளர்ச்சியைக் காட்டுகிறது.

பருத்தித்துறை மாவட்ட சாரணிய ஆணையாளர் திரு. வே. சண்முகலிங்கத்தை பாராட்டி அவர் சேவை எமது கல்லூரிக்கு தொடர்ந்து கிடைக்க வேண்டுமென வேண்டி அவர் மகிழ்ச்சியுடன் இருந்து மேற்படி பணியை ஆற்ற வாழ்த்துகின்றோம்.

கல்லூரிச் சமூகம்
யா/கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி



மாணவ முதல்வர்கள்





2013 ம் ஆண்டு தமிழ் விழா



விஞ்ஞான தின விழா



தமிழ் விழா



# ஈழத்து இலக்கிய வரலாற்றில் பேராசிரியர் கா. சிவத்தம்பி

ஈழத்தில் தமிழ் இலக்கிய வளர்ச்சிக்காக பலர் பெரும் பணியாற்றியுள்ளனர். இவர்களுள் கா. சிவத்தம்பி அவர்களின் பணி அளப்பரிய ஒன்றாகும். தமிழ் இலக்கிய வரலாறு பற்றி நாம் அறிவதற்கு இன்று பல புத்தகங்கள் கிடைக்கின்றன. அவற்றுள் சிலவற்றைக்குறிப்பிடமுடியும்.

சைமன்காச் செட்டி எழுதிய புளூறாக், ஆர்னோல்ட், சதாசிவப்பிள்ளை எழுதிய பாவலர்சரித்திரத்தீபம், சுன்னாகம் அ. குமாரசாமிப்புலவர் எழுதிய தமிழ் புலவர் சரித்திரம், கல்லடி வேலுப்பிள்ளை எழுதிய யாழ்ப்பாண வைபவக் கௌமுதி, வித்துவசிரோமணி சி. கணேசையர் எழுதிய ஈழநாட்டுத் தமிழ் தந்த தாதாக்கள் முதலியவற்றை குறிப்பிடமுடியும். இலக்கிய வளர்ச்சிக்கு உறுதுணையாய் அமைந்த பேராசிரியர் கா.சிவத்தம்பியின் பணிகள் பற்றி நாம் நோக்குவோம்.

பேராசிரியர் அவர்கள் தமிழுலகு முழுவதும் அறியப்பட்டவர். இதற்கு இவரது அறிவுத்திறன், ஊக்கம், குறைவில்லாக்கல்வித் தொழிற்பாடுகளுமே காரணமாக அமையும். தமிழைப் பொருளியல், அரசியல், வரலாறு, சமூகவியல், மானிடவியல், முதலான பல்வேறு முறைகளில் தொடர்பு படுத்திப் பார்ப்பது இவருடைய பழக்கம். தமிழ் என்று நோக்குகின்ற போது அவருடைய அறிவுத்திறனுக்கு எல்லையே இல்லை. சங்க கால இலக்கியம் முதல் மிக சமீபத்தில் வந்த இலக்கியம் வரையிலும் அதற்கப்பால் உள்ள நாடகம், சினிமா முதலான இலக்கியங்களையும், இலக்கிய சமூகக் கோட்பாடுகளையும் படித்து தமது அறிவை கூட்டிக் கொண்டார்.இவர் தமிழ் வாசகர்களால் "நவீன தமிழ் அறிஞர் அல்லது நவீன இலக்கிய விமர்சகர்" என்ற வகையிலான ஒரு மனப்பதிவோடு உணரப் பட்ட ஒருவராவார். பட்டப்படிப்பிற்கான ஆய்வுகளின் போது அவர் பழந்தமிழ் இலக்கியங்களையே நாடிச் செல்வார். இவருடைய கலாநிதிப்பட்ட ஆய்வு "பண்டைத் தமிழ்ச்சமுதாயத்தில் நாடகம்" என்பதாகும். அந்த ஆய்வு சங்க கால இலக்கியங்களையும், சிலப்பதிகாரத்தையும், மிக நுணுக்கமாகப் பரிசீலித்து மேற்கொள்ளப்பட்ட ஓர் ஆய்வாகும். பேராசிரியர் அதிக ஈடுபாடுகாட்டிய நூல்களுள் முக்கியமானது தொல்காப்பியமாகும். குறிப்பாக அதன் பொருள் அதிகாரத்தை மிக நுணுக்கமான முறையில் நோக்கியுள்ளார்.

தொல்காப்பியம் என்னும் இலக்கண நூலின் உருவாக்கத்திற்கான காரணங்களையும் அவற்றின் அடிப்படையாக தொல்காப்பியரின் ஆளுமையையும் புலப்படுத்த முயன்றிருக்கின்றார். தொல்காப்பியத்தின் படி தமிழ்க்கவிதையினை தெளிவு படுத்தியிருக்கின்றார். இவை யாவும் ஈழத்து இலக்கிய வளர்ச்சிக்குப் பேராசிரியரினால் மேற்கொள்ளப்பட்ட பங்களிப்பாகும். பேராசிரியருக்கு தமிழ் பக்தி இலக்கியங்களிலும் ஆர்வம் உண்டு. பக்தி இலக்கியங்களை வழிபாட்டோடு மாத்திரம் தொடர்பு

பட்டவையாக கருத்திற் கொண்டு அவற்றில் இருக்கும் கவித்திறனையும், மானிட உணர்வையும் புறந்தள்ளிவிடக் கூடாது என்ற தமது நிலைப் பாட்டினை, பக்தி இலக்கியம் தொடர்பான கட்டுரைகளிலும் சிறு நூல்களிலும் இவர் வெளிப்படுத்தியிருக்கின்றார். கம்பனை தமிழ்க் கவிதையின் உயர்வாகவும், மானிட உயர்வின் சிகரமாகவும் கொள்ளும் பேராசிரியர் கம்பராமாயணத்தின் ஊற்றுக்களை தமிழின் பக்தி இலக்கியங்களிலே பெரிதும் கண்டு கொள்கின்றார். சைவ சித்தாந்தமும் இவரது ஆய்வுக்கு பொருளாக அமைகின்றது.

இந்தவகையில் பேராசிரியர் "நவீன ஆய்வாளர் அல்லது நவீன இலக்கிய விமர்சகர் என்று அழைப்பதற்குப் பொருத்தமானவர். இவரின் தமிழ் ஆய்வு வெளியீடுகள் ஈழத்து இலக்கிய வளர்ச்சிக்கு வலுச்சேர்ப்பனவாய் அமைகின்றன. செழுமையான ஒரு ஆராய்ச்சிக்கான வளமும் தளமும் தொன்மையான நூல்களிலே உண்டு என்று அறிந்து அவற்றை நவீன நோக்கில் ஆராய்ந்த ஒரு ஆய்வுப் பரம்பரையின் உயர் அடையாளங்களுள் ஒன்றாகத் திகழ்பவர் பேராசிரியர் ஆவார். இன்றைய தமிழ் இலக்கிய ஆய்வுகளில் அவருடைய நூல்களில் ஒன்றையேனும் ஆய்வு மேற்கொண்டிருப்பது மிகவும் கடினம். இது அவரது ஆய்வாளுமையைப் புலப்படுத்துவதாகும். பின்நோக்கிப் பார்க்கின்ற போது பழந்தமிழ் இலக்கியங்களைப் படிப்பதிலே ஆராய்வதிலே கண்ட திருப்தி எனக்கு ஏனையவற்றில் வந்ததில்லை என்றும் இளம் ஆய்வாளர்களைக் காணும் போதெல்லாம் "பழந்தமிழ் இலக்கியங்களிலே ஆட்சி பெறுங்கள், அப்போதுதான் உங்களை நிலை நிறுத்தி கொள்ள முடியும்" என்று கூறி வழிப்படுத்திய ஆய்வறிஞராகிய இவர் ஈழத்து இலக்கியத்தின் பக்கம் உலகையே திருப்பிம் பார்க்க வைத்தார்.

மரபுப்போராட்டம் என்பது ஈழத்தில் மிக முக்கியமான ஒன்றாகும். பழமை பேண் பண்டிதர்களுக்கும், நவீன இலக்கிய வாதிகளுக்கும் இடையே நிகழும் ஒரு கருத்து நிலைப்போராட்டமாகும். பேராசிரியர் பழமை வாய்ந்த பண்டிதரின் மரபினை அதன் காரணமாக பண்டிதர்கள் விதந்து போற்றிய மரபினை நன்கு அறிந்த ஒருவராவார். இந்த பண்டிதர்களுக்கு எதிராக மார்க்ஸிய நோக்கோடு முற்போக்கு கருத்துக்களை முன்வைத்தவர்களுள் பேராசிரியர் முக்கியமான ஒருவராவார். இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் தளகர்த்தாக்களுள் முக்கியமான ஒருவராவார். மரபுப் போராட்டத்தின் போது முற்போக்கு எழுத்தாளர் சங்கம் பெற்றுக் கொண்ட வெற்றிக்கும், அதனைத் தொடர்ந்து வந்த எழுச்சிக்கும் அத்திவாரம் இட்ட சிலரில் பேராசிரியர் முக்கியமான ஒருவர்.

மரபுப் போராட்ட காலத்தில் அடிநிலை மக்கள் பற்றிய இலக்கியங்களையும், இலக்கியவாதிகளையும் "சாதாரணங்கள்" எனக் கேலி பேசிய பண்டிதவர்க்கத்துக்கு எதிராக, அவ்விலக்கியங்கள் தமிழ் இலக்கியத்துக்குப் புதிய வரவுகள் என்பதை அடித்துச் சொல்லி நிறுவிய பெருமை பேராசிரியர் சிவத்தம்பியையே சாரும். அடிநிலை மக்கள் பற்றிய இலக்கியங்கள் மக்களிடையே இருந்து மேலெழுந்த போது "இழிசனர் இலக்கியங்கள்" எனப் பண்டித கூட்டத்தினர் ஒதுக்கி வைக்க முற்பட்ட போது காலத்துக்கு ஏற்ப காலமாற்றத்துக்கு உகந்த சிறந்த இலக்கியப் படைப்புக்கள் அவைகள்

என்பதைச் சந்தர்ப்பம் வாய்க்கும் சமயங்களிலெல்லாம் தொடர்ந்து சொல்லிச் சொல்லி வந்தவர் பேராசிரியர் ஆவார். ஈழத்தின் வளர்ச்சிக்கு பேராசிரியர் இவ்வாறு பாடுபட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. பேராசிரியர் கா. சிவத்தம்பி அவர்கள் ஈழத்துத் தமிழிலக்கியத்திற்கு மட்டுமல்ல தமிழுக்குச் செய்திருக்கும் பணிகள் பல. காலங்காலமாக மிக உயர்த்திக் காட்டப் பெற்று வந்த போலித் தோற்றங்களைச் சிதைத்து உண்மையைத் தரிசிக்கச் செய்வது. சமூகத்தின் இருண்ட பக்கத்தினையும் புரட்டிக்காட்டி முழுமையைக் கண்டு கொள்ள வைப்பது. அதனால் தமிழ்ச் சமூகத்தின் மீது பேராசிரியர் வைக்கும் ஆய்வு நிலைப்பட்ட கருத்துக்கள் சில, அவர் மேல் அடிப்படை வாதிகள் சிலர் அதிருப்தி கொள்வதற்கு காரணமாக அமைகின்றது. ஆய்வு நுட்பங்களை நிராகரிக்க முடியாது அவர் வளர்த்த ஆளுமையை அங்கீகரிக்க வேண்டி இருந்தது.

ஈழத்து இலக்கிய வளர்ச்சியில் பேராசிரியரின் பங்களிப்பாக குறிப்பிட்டுச் சொல்லத்தக்க இன்னோர் விடயமும் உண்டு. அது பேராசிரியர் தமது எழுத்து திறமையினூடாக சொற்றொடர்களையும் அறிமுகம் செய்தமையாகும். அவற்றுள் சில உதாரணமாக சொல்லலாம். செல்நெறி, உணர்திறன், உசாவல், சமவீனம், வகிபாகம் என்பன குறிப்பிடமுடியும்.

பேராசிரியர் ஒரு நாடக நடிகனும் ஆவார். இதனால் தான் பிற்காலத்தில் தனது கலாநிதிப்பட்ட ஆய்வுக்குப் "பண்டைய தமிழ்ச் சமூகத்தில் நாடகம்" என்ற தலைப்பினைத் தேர்ந்தெடுத்துக் கொண்டார். இன்றைய பட்டப்படிப்புக்கு "நாடகமும் அரங்கியலும்" என்பதை ஒரு துறையாக அறிமுகப்படுத்தி வைத்தமையும் அதனாலேயே நவீன நாடக அரங்கியலினதும் செல்நெறிகளைச் சுட்டிக் காட்டியவர்களில் முக்கியமானவர் பேராசிரியர் ஆவார். மண்வாசனை, தேசிய இலக்கியம் என்னும் பண்புகளைக் கொண்ட படைப்புக்கள் எவ்வாறு அமைய வேண்டும் என்று அறிந்து அதை சரிவர செய்த பெருமை பேராசிரியர் சிவத்தம்பியையே சாரும். இத்துறை சார்ந்த "தமிழ்ச் சிறுகதையின் தோற்றமும் வரலாறும்" "ஈழத்துத் தமிழ் இலக்கியம்" "நாவலும் வாழ்க்கையும்" "இலக்கியத்தில் முற்போக்கு வாதம்" இலக்கியமும் கருத்து நிலையும்" எனச் சிறிதும் பெரிதும் முப்பத்தைந்து நூல்களைத் தமிழிலும் பதினொரு நூல்களை ஆங்கிலத்திலும் எழுதியுள்ளார்.

பேராசிரியர் கா. சிவத்தம்பி நாடகத்துறை, இலக்கியத்துறையோடு நின்று விடாமல் விமர்சனத்துறையிலும் அதிக ஈடுபாடு கொண்டிருந்தார். இவர் பல இலக்கிய விமர்சனக் கட்டுரைகளை எழுதியுள்ளார். குறிப்பாக மார்க்சிச அடிப்படையில் இலக்கிய விமர்சனக் கட்டுரை எழுதியுள்ளார். நவீன காலத்து இலக்கிய வளர்ச்சியிலும் இவர் எழுதிய கட்டுரைகள் பங்களிப்பு செய்துள்ளன. தமிழக எழுத்தாளர்களும் ,பேராசிரியரது கட்டுரைகளை விரும்பி வரவேற்றுள்ளனர். பல்கலைக்கழகங்கள் இவரை அழைத்து விரிவுரை ஆற்றும்படி வேண்டின. இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட பேராசிரியர் அதன் வளர்ச்சியில் பெரும் பங்களிப்புச் செய்துள்ளார்.

இவர் ஆசிரியராக இருந்து தமது மாணவர்களை வளப்படுத்தியும் உள்ளார். தமது மாணவருக்கு வானொலியுடான தொடர்பினையும் ஏற்படுத்திக் கொடுத்துள்ளார். ஒவ்வொரு திங்கட் கிழமையிலும் இளைஞர் மன்றம் இவர் நடத்தியுள்ளார். 1965ம் ஆண்டு சிறிஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராக இணைந்து கொண்டார். அங்கு பெரும்பான்மையான சிங்கள மாணவர்களும் ஆங்கில மாணவர்களும் ஆசிரியர்களுமே இருந்தனர். அங்கு இவர் பதின்மூன்று ஆண்டுகள் சிங்கள மணவர்களுக்கு தமிழ் கற்பித்தார். அவரின் புலமைக்கு சான்றாக இதை குறிப்பிட முடியும். அதாவது 'Professor of Emeritus' என்ற ஆங்கிலச் சொல்லுக்கான தமிழ்ச் சொல்லை அவரே உருவாக்கினார் அதை இவ்வாறு குறிப்பிடலாம். "தகைசால் ஓய்வு நிலைப் பேராசிரியர்"

இவர் எமது நாட்டின் கலாசாரங்களை வேறு நாட்டவர்களும் அறிந்து கொள்ள வேண்டும் என்பதில் பெரிதும் அக்கறையுடையவராக விளங்கினார். 2010ல் கோவையில் நடைபெற்ற உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டில் கலந்து " செம்மொழி வரையறைகளும் தமிழும்" என்ற கட்டுரையை வெளியிட்டார். இவர் தமிழ் வரலாறு குறித்தும் மற்றும் இலக்கியம் குறித்தும் எழுபதுக்கும் மேற்பட்ட நூல்களையும் இருநூறுக்கும் மேற்பட்ட ஆராய்ச்சிக்கட்டுரைகளையும் எழுதியுள்ளார். அவற்றுள் சிலவற்றை குறிப்பிட முடியும் அதாவது.

- இலங்கைத் தமிழர் யார்? எவர்?
- தமிழ் இலக்கிய வரலாறு
- மதமும் கவிதையும்
- தமிழ் பண்பாட்டில் சினிமா
- உலகத் தமிழ் இலக்கிய வரலாறு
- சகியாக்கதை
- யாழ்ப்பாணச் சமூகம் - பண்பாடு கருத்து நிலை

இவ்வாறான பலவற்றை வெளியிட்டுள்ளார். இவ்வாறாக ஈழத்து இலக்கிய வளர்ச்சியிலே பெருமை சேர்த்தவர்களில் பேராசிரியர் கா. சிவத்தம்பியும் ஒருவராவார். வரலாற்றில் போற்றப்படும் பேராசிரியராக கா. சிவத்தம்பி விளங்குகின்றார் என்றால் அது மிகையாகாது.

ச. சங்கீதன்
13A (கலை)





2013 ம் ஆண்டு நடைபெற்ற இல்ல மெய்வல்லுநர் போட்டி நிகழ்வில்
விருந்தினர்கள்



வடமாகாண முன்பள்ளி கண்காட்சி
நிகழ்வில் கல்வி உயர் அதிகாரிகள்



முன்பள்ளி கண்காட்சி நிகழ்வில்
விருந்தினர்கள் கண்காட்சியை பார்வையிடும் காட்சி





பிரதி கல்வி அமைச்சர் திரு. ப. சச்சிதானந்தம் அவர்கள் பாடசாலைக்கு
வருகை தந்த போது அதிபர் ஆசிரியர்களுடன் கலந்துரையாடும் காட்சி



# இலங்கையும் சுற்றுலாப் பயணமும்

சுற்றுலாத் துறையானது வளர்ச்சி அடைந்து வரும் துறையாக உள்ளது. இது ஒரு சேவைத்துறை சார்ந்த கைத்தொழில் ஆகும். ஒரு நாட்டின் இயற்கைக் காட்சிகளையும், அழகினையும் பயன்படுத்தி இந்த சுற்றுலாத்துறைக் கைத்தொழிலானது வளர்ச்சியடைந்து வருகின்றது. இச் சுற்றுலாத் துறையில் பல நன்மைகள் ஏற்பட்டுள்ளதோடு அதனை மேம்படுத்த வேண்டிய தேவையும் உருவாகியுள்ளது.

இலங்கைக்கு அவுஸ்ரேலியா, இந்தியா. மலேசியா, ஜப்பான், சுவிற்சலாந்து போன்ற நாடுகளில் இருந்து சுற்றுலாப் பயணிகள் வருகின்றனர். கடந்த வருடங்களில் சுற்றுலாப் பயணிகளின் வருகை குறைவாக இருந்தாலும் தற்போது யுத்தம் முடிவுக்குக் கொண்டு வரப்பட்ட நிலையில் சுற்றுலாப் பயணிகள் அதிகரித்துள்ளமை இங்கு கோடிட்டுக் காட்டப்பட வேண்டியதேயாகும்.

இலங்கையின் இயற்கைச் சூழலே இங்கு அதிகமான பயணிகள் வரக் காரணமாயிருந்தது. இங்கு இயற்கை அழகு நிறைந்த கடற்கரைப் பிரதேசங்கள், அழகிய மலைகள், ஆறுகள் போன்றனவும் துன்கிந்தை, டெவோன். கென்கிளயர் போன்ற நீர்வீழ்ச்சிகளும் காணப்படுகின்றன. உல்லாசப் பயணிகளைக் கவரத்தக்க குட்டி "நியூசிலாந்து" என வர்ணிக்கப்படும் நுவரெலியா போன்ற புராதன நகரங்களாக விளங்கும் அனுராதபுரம், கண்டி, பொலனறுவை போன்ற இடங்களும் அப்பிரதேசங்களில் பல்வேறு காலநிலைகளை அனுபவிக்கக் கூடியதாக இருந்தாலும், அழகியஎழில் கொஞ்சும் தேயிலைத்தோட்டங்களும் சுற்றுலாப்பயணிகளை கவர்ந்தவையாக உள்ளன.

இலங்கையைப் பொறுத்த வரையில் பலநினைவுச் சின்னங்களும். காட்டு விலங்குகளும் பல குகை அரண்களும் காணப்படுகின்றன. எடுத்துக் காட்டாக அனுராதபுரம் பொலனறுவை போன்ற இடங்களில் புராதன சிதைவடைந்த கட்டிடங்களும், பல நினைவுச் சின்னங்களும், அதிசயிக்கத்தக்க பல அம்சங்களைக் கொண்டிருக்கின்றன. யால, குமண, வில்பத்து என்பனமுக்கிய வன விலங்குகளின் குகை அரண்களாக விளங்குகின்றன இவ்வாறான அம்சங்களும் சிகிரியா போன்ற ஓவியங்களும் சுற்றுலாப் பயணிகளை அதிகமாகக் கவர்கின்றன

இவ்வாறானசுற்றுலாத் துறையால் இலங்கைபெரும் அந்நியச் செலவாணியைச் பெற்றுக்கொள்கின்றது. சுற்றுலாப் பயணிகள் அதிகரிப்பால் இலங்கையர்கள், பிரயாண முகவர், விமானசேவை, போக்குவரத்து செயற்பாடுகள் போன்ற தொழில்களில் ஈடுபடுகின்றனர் இதன் காரணமாக இலங்கையருக்கு வேலை வாய்ப்பு அதிகரிக்கின்றது. உற்பத்திப் பெருக்கம் ஏற்பட்டுள்ளதோடு நாட்டில் அபிவிருத்திஉயர்வடைந்து செல்வதனைகாணலாம்.

இந்தச் சுற்றுலாத்துறையை மேம்படுத்த வேண்டுமாயின் சுற்றுலா மையங்களை அமைப்பதோடு. பாதுகாப்பு வசதிகளை ஏற்படுத்த வேண்டும். உள்நாட்டு உல்லாசப் பயணிகளைஊக்கப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். வாசனைத் திரவியங்கள் ஆடைகள், அழகு சாதனப் பொருட்கள் போன்ற உள்ளூர் உற்பத்திகளை நவீன முறையில் உருவாக்கி விற்பனை செய்தல்வேண்டும். இதன் மூலம் சுற்றுலாத் துறையை மேலும் வளர்ச்சியடையச்செய்யலாம்.

எனவே சுற்றுலாத் துறையால் எமதுநாடு பல விதமான நன்மைகளை அனுபவித்து வருகிறது. இதனையே மேலும் ஊக்குவிக்கப் பல்வேறு நடவடிக்கைகளை எடுப்பது அவசியமாகும்.

ந. சதுசா
11A

# சிந்திக்கச் சில

- தந்தையின் நற்குணம்மலையை விட உயரமானது தாயின் நற்குணம் கடலை விடஆழமானது.
- அறம்என்பது ஒரு போராட்டம். அறத்தின் நடுவில் வாழ வேண்டுமானால் எப்பொழுதும் நம்மை நாமே எதிர்த்து போராட வேண்டியிருக்கிறது
- ஒழுக்கம் போர்க்களம் போன்றது. அதில் வாழ வேண்டுமானால் ஓயாமல் நன் மனத்தோடு போராட வேண்டும்.
- கல்விக்காக உயிரைக் கொடுப்பவன் ஒரு போதும் மரணமாவதில்லை
- கலை என்பது மனிதன் சிறப்பாகக் கண்டு பிடித்த ஒரு கருவி ஆகும்
- கவிதை துக்கத்தின் தங்கை. துக்கம் அறிந்தவன் கவிஞன். ஒவ்வொரு கண்ணீர் துளியும் ஒரு கவி. ஒவ்வொரு மனமும் பாட்டு.
- நமக்கு நன்மை கிட்டும்போது மகிழ்ந்து, தீமைவந்த போது வருந்துபவனே நண்பன்.
- விதி விளையாடத் தொடங்கினால் மதி மயங்கிப் போகும்.
- அகக் கண்ணினைதிறந்து விடும்ஆசிரியர்கள் இளம் பருவத்திலேயே கிடைக்க வேண்டும்.

ச.நிக்சன்
தரம் 7B

# காயநெஞ்சம்

அன்று திங்கட்கிழமை விரைவாக எழுந்து தனது கடமைகளை சரிவரச் செய்து முடித்தாள் நிலா. பாடசாலை சீருடையை மின்னழுத்தியால் விரைவாக அழுத்தி விட்டு குளியலறையை நோக்கி விரைந்தாள். “என்ன இது குசினியெல்லாம் இவ்வளவு குப்பையாக இருக்கின்றது. ஒண்டையும் செய்யாமல் சீமாட்டிஎங்க போறா. இண்டைக்கு இதைஎங்கயும் விடுகிறதில்லை. பாப்பம் போறதிறத்தை, இது கமலத்தின் சீறல். நிலாவின் காதில் எட்டியது. குளியலறையை நோக்கிச் சென்ற நிலா தனது சித்தியின் குரல் கேட்டு மிரண்டுபோய் நின்று விட்டாள். கல்வியில் ஆசைகொண்ட அவளிற்கு மனித ஒத்துழைப்பின்றி மிகவும்அவஸ்தைப்படுகின்றாள். “ஐயோ காலையிலேயே அடிக்கப்போறாவே” என்றவளாக குளியலறையில் உடைகளை வைத்து விட்டு சமயலறையை நோக்கி விரைந்தாள்.

இவளைக், கண்டதும் கமலம் எலியைக் கண்ட பூனையைப் போல சீற்றத்துடன் நிலாவின் மீது பாய்ந்தாள் .நிலாவின் சிறிய பிஞ்சுக் கன்னங்களில் ஓங்கி அறைந்தாள். “அம்மா” எனக் கதறியவாறு சுவரில் தலை அடிபட கீழே விழுந்தாள் நிலா. ஆனாலும் கமலம் விடுவதாக இல்லை. மறுபடியும் அவள் மீது பாய்ந்தாள். கொப்பர் சொன்னவர் எண்டவுடனே வெளிக்கிட்டியே போறதுக்கு. இங்க அவர்சொல்ற தொண்டும் நடக்காது. நான் சொல்லுறது தான் நடக்கும். என்னைத் தாண்டி வெளியில் போனியெண்டால் காலை முறிப்பன். பின்னேரம் வந்து கொப்பர் கேட்டா பள்ளிக்கூடம் போனான் என்று சொல்லோணும் போய்முதல் குசினிய கிளீன் பண்ணு. போகெதியா.

நிலாவின் கண்களில் இருந்து கண்ணீர் ஊற்றெடுத்துப் பாய்ந்தது . வெறும் பத்து வயதே நிரம்பிய நிலா. தன் சிறுவயதிலேயே தாயை இழந்தாள். தந்தையின் அரவணைப்பில் வளர்க்கப்பட்டவள். திடீரென இன்னொரு பெண்ணிற்கு கட்டுப்பட வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. “மகளிற்கு அம்மா என கூப்பிட ஒராள் வேணும்” எனக் கூறி நிலாவின் தந்தையார் இரண்டாவதாக திருமணம் செய்து கொண்டார். அன்றிலிருந்து சொர்க்கமாக இருந்த நிலாவின் வாழ்க்கை நரகமாக மாறியது. தந்தையின் முன் மிகவும் அன்புள்ள தாயாகவும் தந்தை இல்லாத நேரத்தில் இராட்சசியாகவும் நிலாவிடம் கமலம் நடந்து கொண்டாள்.

கமலத்துக்கு நான்கு பிள்ளைகள். அவர்களைப் பார்க்கும் பொறுப்பும் நிலாவின் மேலேயே சுமந்தப்பட்டிருந்தது. நிலாவின் தந்தையார் நகை வியாபாரி. அவர் அதிகாலையிலேயே புறப்பட்டுவிடுவார். வேலை முடிந்து அவர் வீடுவந்து சேருவதற்கு சுமார் இரவு பத்து மணியெடுக்கும்.அவ்வளவு நேரமும் நிலாவை கமலம் தனது கட்டுப்பாட்டிற்குள்ளேயே வைத்திருப்பாள்.

நிலாவிற்கு பாடசாலை செல்வதென்றால் மிகவும் விருப்பம். படிப்பதற்கு நல்ல ஆர்வம், ஆனால் அவளால் என்ன செய்யமுடியும். கொடுமையின் சிறையில் அடைபட்டு இருந்தாள். கதைப்பதற்கு யாரும் இல்லை. கமலம் மிகவும் சொகுசாக வாழ்ந்தாள் நிலாவிற்கு உணவு கொடுப்பதில்லை. வேலையை சுமத்தி ஒரு வேலைக்காரியைப்போல் நடத்தினாள். தான் உண்ணும் எச்சில் உணவைக் கூட நிலாவிற்கு அவள் கொடுப்பதில்லை.

வேலை வேலையென அவளை கட்டுப்படுத்தி வைத்திருந்தாள். நிலா "பசிக்குதுசாப்பாடு வேணும்" என்று கேட்டால் கமலம் சீற்றம் கொண்டெழும்புவாள்.

அவ்வளவிற்கு கமலம் ஒரு பாதகியாக காணப்பட்டாள். கமலத்தின் பிள்ளைகள் கூட நிலாவை ஓர் வேலைக்காரியைப்போல் நடத்தினார்கள். கமலத்தின் பிள்ளைகளைப் பாடசாலை அனுப்புவதில் இருந்து கமலத்தின் ஆடைகள் தோய்க்கும் வேலைவரை நிலாவின் மேல் சுமத்தப்பட்டிருந்தது. வாழ்க்கையே நரகமாக மாறியது. "நான்வாழ்ந்து என்ன பயன் சாகலாமே" எனஅடிக்கடி தனக்குள் நிலா நினைத்துக் கொள்வாள்.

நிலா பத்து வயது நிரம்பிய சிறுபிள்ளை என்பதனால் அவள் ஐந்தாம்வகுப்பு புலமைப்பரீட்சை எழுத வேண்டியவளாயிருந்தாள். பரீட்சையில் சித்தியடைய வேண்டும் என்ற ஆசை அவளை வாட்டினாலும்பாடசாலை செல்ல முடியாத நிர்ப்பந்த நிலையில் நிலா தள்ளப்பட்டிருந்தாள். படிப்பதற்கு நிலா புத்தகத்தை எடுத்தாலே கமலம் தணலாய்க் கொதிப்பாள் புத்தகத்தை வீசியெறிவாள். கமலம் அவ்வளவு பயங்கரமானவள்.

அன்றொரு வெள்ளிக்கிழமை நிலாவின் தந்தை வேலைக்குச் செல்லாமல் வீட்டில்படுத்திருந்தார். "என்னங்க நேரமாச்சு இன்னும் வேலைக்கு போகலையா? கமலம் கனிவான குரலுடன் தன் கணவனைக் கேட்டாள். "நான்இண்டைக்குப்போகல லீவெடுத்திட்டன். நிற்கப்போறன். இப்பதிலைக் கேட்டதும் கமலத்திற்கு தூக்கிவாரிப் போட்டது.

மெதுவாக தன்படுக்கையை விட்டு நிலாவைநோக்கி விரைந்தாள்.ஓர் சிறிய மூலையில் யாருமற்ற அநாதரவற்ற நிலையில் ஓர் ஊத்தையான தலையணையுடன் நிலா படுத்திருந்தாள். தலையணை முழுவதும் கண்ணீரால் தோய்ந்திருந்தது. சித்தி வருவதைக் கண்டதும் மறுபக்கம் திரும்பிப் படுத்துக் கொண்டாள். இவ்விரவிலும் எனக்கு அடிதானா கடவுளே, உனக்கு கண் இல்லையா? என்றெல்லாம் நிலா தனக்குள் எண்ணிக்கொண்டாள்.

கொடுமையே உருவான கமலம் நிலாவின் அருகில் வந்து நிலாஎழும்பு பள்ளிக்கூடத்திற்கு நேரம் போகுது எழும்பிப்படி எனக் கூறி நிலாவை மிகவும்கனிவுடன் எழுப்பினாள். "பள்ளிக்கூடமா? என்ற கேள்வியோடு நிலா விரைவாக தன்படுக்கையை விட்டெழுந்தாள். நீ இண்டைக்கு எதுவும் செய்யத்தேவையில்லை பள்ளிக்கூடத்திற்கு போயிட்டு வா அம்மா சமைத்து வைக்கிறன் என்ற அன்பான வார்த்தைகளை கமலம் பொழிந்தாள். ஒரு கணம் நிலா அதிர்ந்தே போய் விட்டாள். தன் சித்தியா இவ்வாறு கதைப்பது என ஒரு கணம் சிந்தித்துப் பார்த்தாள். சிலிர்த்துப்போய் அம்மா என அழைத்தாள். பாதகி பாசம் காட்டுவது போல நிலாவின் முதுகைத்தட்டிக் கொடுத்து பாசாங்கு செய்தாள். அதற்குள் நேரம் 6.00 மணியாகிவிட்டது.

நிலா விரைவாகக் குளித்துவிட்டு சீருடையை அணிந்து கொண்டாள். கமலம் விரைவாக உணவைத் தயார் செய்து நிலா ஆயத்தப்படும்போதேஉணவை ஊட்டினாள். நிலாவிற்கு கனவா? நனவா, என மிக ஆச்சரியமாக இருந்தது. உணவை ஊட்டிவிட்டு நல்லாப்படிச்சு ஸ்கொலசிப் பாஸ் பண்ண வேணும்மா. செல்லமாக கமலம்நிலாவின் நெற்றியில் முத்தமிட்டாள்.

இதையனைத்தைதும் பார்த்துக் கொண்டிருந்த நிலாவின்தந்தையார். என்ன பாசமிது இப்படியும் ஒரு அம்மாவா? என்றவாறு சிரித்துக்கொண்டு தன் அறையினுள் சென்று விட்டார்.அவ்வளவு நேரமும் அன்பே ஊற்றாய் இருந்தகமலம் மறுபடியும் இராட்சசியாய் மாறிவிட்டாள். ஏன் தெரியுமா? உன்னை இண்டைக்கு பள்ளிக்கூடம் அனுப்புறன் உன்ர கொப்பர் வேலைக்குப் போகேல்ல. நீ நிண்டா அந்த மனுசன் என்னத்தான் கேட்கும். இரண்டுமாசத்தால கொலசிப்பாம் நீ நிக்கிறதெண்டா என்ர மனுசன் என்னை துலச்சிக்கட்டிப்போடும் உன்மேல் எனக்கு சொட்டு இரக்கமும் வராது போய்துல கெதியா என்றவாறு கமலம் உள்ளே சென்று விட்டாள்.

தனது சித்தியின் வஞ்சகத்தை அறிந்த நிலாகண்ணீரோடுபாடசாலையை நோக்கிநடந்தாள். வாழ்க்கையே பாதாளமாய் இருந்தது. பாடசாலையை அடைந்ததும். அதிபர் வாசற்படியில் நின்று நிலாவை புன்முறுவலுடன் வரவேற்றார். தனது அதிபரறைக்கு அழைத்துச் சென்றார். அங்கு நிலாவின் வகுப்பாசிரியர் சுமதிதன் வேலையில் அமர்ந்திருந்தார். அதிபரைக் கண்டதும் மரியாதையுடன் எழுந்தவராக. என்ன நிலா கனநாளைக்குப்பிறகு இந்தப்பக்கம் ஒருகணம் அவளைப் பார்த்துவிட்டு ஒன்றும் செய்யேலாதம்மா கடவுள் தான் கண்திறக்க வேணும் என்று சுமதிமிஸ் சொல்லி முடிப்பதற்குள் நிலாவின் கண்ணிலிருந்து கண்ணீர் ஊற்றெடுத்தது. சுமதிமிஸ் மெல்ல நிலாவை அணைத்துக் கொண்டார்.

அதிபர், என்னம்மா நிலா நடந்தது? என கேட்கத் தொடங்கியதும் நிலா தன் மனதில் இருந்த அனைத்தையும் கொட்டித்தீர்த்தாள். அவளின் கதையைக் கேட்ட சுமதிமிஸ்சும் அழுதுவிட்டார். அதிபரும் அதிர்ச்சியடைந்து, அவளை எவ்வாறு ஆற்றுவதெனத் தெரியாமல் அதிபரும் ஆசிரியரும் திண்டாடினார் இறுதியில் நீ அப்பாவிற்குச் சொல்லலாம்தானே சொல்லன்" என சுமதிமிஸ் அறிவுரை கூறினார். அப்பாவிடம் சொன்னால் சித்தியடிப்பா என நிலாவிடம் இருந்து பதில் வந்தது. செய்வதறியாது அதிபரும் ஆசிரியரும் திகைத்து நின்றனர். எவ்வளவோ ஆறுதல் கூறியும் நிலாவின் பிஞ்சு மனதை அவர்களால் சுகப்படுத்த முடியவில்லை. இறுதியாக வகுப்பிற்குப் போம்மா என அனுப்பி விட்டார். கண்ணீரோடு சுமதி வகுப்பறைக்குச் சென்றாள். எல்லாச் சிறார்களின் கண்களும் நிலாவையே மொய்த்து நின்றன. கண்ணீரோடு அன்றைய தினத்தை நிலா கழித்தாள். பாடசாலை முடிவுற்றது. பாடசாலைக் கீதம் இசைக்கப் பட்டது. மாணவர்கள் எல்லோரும் பேரிரைச்சலுடன் வகுப்பறையை விட்டு வெளியேறினர். எல்லோரிலும் இறுதியாக நிலா வகுப்பறையை விட்டு மெல்ல வெளியேறினாள். கால்போனபோக்கில் மெதுவாக நடந்து கொண்டேசென்றாள். வீட்டிற்குச் செல்வதை அவளது கால்கள் தடுத்தன. திசையை கால்கள் மாற்றிக் கொண்டன. பாதை அவளிற்குத் தெரியவில்லை இறுதியாக ஒருகிணற்றடியை அடைந்தாள்.

சுற்றும் முற்றும் திருப்பிப்பார்த்தாள். ஒருவரையும் காணவில்லை. மிகவும் நிசப்தமாக அப்பகுதி காணப்பட்டது. சிறிது தூரத்தில் ஒரு வீடு அவளின் கண்களில் தென்பட்டது. கிணறை மெதுவாக எட்டிப் பார்த்தாள். அது மிகவும் ஆழமாக இருந்தது. மனதை பயம் ஆட்டிக்கொண்டது. மெதுவாகப் புத்தகப்பையை கழற்றிவைத்தாள்.

கால்களில் அணிந்திருந்த சப்பாத்துக்களையும் மெதுவாகக் கழற்றினாள். திடீரென வீட்டிலுள்ள பெண்மணி நீர் அள்ளுவதற்காக கிணற்றடியை நோக்கி விரைந்து கொண்டிருந்தாள். அவளை அந்தச் சின்ன நிலா காணவில்லை. கிணற்றில் பாய்வதற்காக நிலா எத்தனித்தாள். அதற்குள் அப்பெண்மணி தடுத்து நிறுத்திவிட்டாள்.

பெண்மணி ஒரு கணம்பதறிப்போய் விட்டாள்.அழகின் வடிவான நிலாஅங்கு நின்றாள். சிமிட்டும்சின்னவிழிகள். அழகியசின்ன கைகள். அழகியகால்கள் எல்லாவற்றையும் பெண்மணி பார்த்துவிட்டு அவளது முகத்தை உற்று நோக்கினாள் சோகக்களை நிலாவின் முகத்திலிருந்து வீசியது "ஏதோ பிரச்சினை என தனக்குள் கூறிக்கொண்டவளாக என்னம்மா என்ன நடந்தது" ஏன் இப்படிச் செய்யப்போனாய்? என்றெல்லாம் அப்பெண்மணி வினாவினாள்.

"வாழப்பிடிக்கவில்லை சாவது ஒன்றுதான்வழிஎன்னை விடுங்கள் நான் சாகப்போறன்" என்ற நிலாவை மறுபடியும் அப்பெண்மணி தடுத்து நிறுத்தினாள். நிலா தன் மனதிலிருந்து ஏக்கத்தையும் கவலைகளையும் கொட்டித்தீர்த்தாள், கண்ணீர் சொரிந்தாள். கதறினாள் தாயன்பிற்காக ஏங்கினாள்.

அப்பெண்மணி அவளது கதையை கேட்டதும் அழுது விட்டாள். கண்ணீருடன் நீ என்னுடன் வா நான் உன்னை வைத்துப் பார்ப்பன் என்று கூற அவளது முகத்தைநிலா ஏறிட்டுப்பார்த்தாள். அவளதுசித்தியின் முகமும் அப் பெண்மணியின் முகமும் மாறி மாறி அவள் முன் வந்து போயின. தன்னை அடக்கிக் கொண்டு நீங்களும் சித்தி மாதிரி அடிப்பீங்களா? நிலாவின் கேள்விக்கு பெண்மணி, உன் அம்மாவாக நான் இல்லாவிட்டாலும் அம்மா மாதிரிவைத்துப் பார்க்கிறன். நீ இங்கிருந்து பள்ளிக்கூடம் போகலாம், படிக்கலாம், எல்லாம் செய்யலாம், சந்தேகப்படாம என்னோடவா என அப்பெண்மணிநிலாவை வாரியணைத்தாள்.

நிலா தன்னையறியாமல் வாய்விட்டுச் சிரித்தாள். வண்ணாத்திப்பூச்சி போன்று வட்டமடித்துப் பறந்தாள். ஆடினாள், பாடினாள் சந்தோஷ மிகுதியால் அப்பெண்மணியை கட்டிக்கொண்டாள். பெண்மணியும் நிலாவைக் கட்டியணைத்து முத்தமிட்டாள். உண்மைத்தாய் நிலாவுடன் இல்லாவிடினும் தாயைப் போன்ற ஒரு பெண்ணை நிலாவிற்கு இறைவன் அருளினான். கரங்களைப் பிடித்தவளாக பெண்மணியுடன் தன் எதிர்காலச் சந்தோஷத்துடனுன் கனவுகளுடனுன் விரைந்தாள் நிலா.

மு. கீர்த்தனா
13 (விஞ்ஞானபிரிவு)






2009 ம் ஆண்டு பரிசளிப்பு விழா நிகழ்வின் போது



2010ம் ஆண்டு இல்ல மெய்வல்லுநர்
போட்டியின் போது




ஒளிவிழா - 2010





2011 ம் ஆண்டு தமிழ் விழாவின் போது

# பழமொழிகள் (Proverbs)

| | |
|---|---|
| மின்னுவதெல்லாம் பொன்னல்ல | All that glitters is not gold. |
| கல்வி கரையில கற்பவை நாட்சில | Art is not long and life is short. |
| தான் ஆடாது விட்டாலும் தன் தசை ஆடும் | Blood is thicker than water. |
| சூடுகண்ட பூனை அடுப்பங்கரை நாடாது | A burnt child dreads the fire. |
| கைக்கு வரும் முன்னே நெய்க்கு விலை பேசேல் | Don't count your chickens before they are hatched. |
| நிறைகுடம் தளும்பாது | Empty vessels make the most sound. |
| போதுமென்ற மனமே பொன் செய்யும் மருந்து | Enough is a good as a feast. |
| இக்கரை மாட்டுக்கு அக்கரைப் பச்சை | The grass is always greener on the other side. |
| தாரமும் குருவும் தலை விதிப்பயன் | Hanging and wiving go by destiny. |
| பதறாத காரியம் சிதறாது | Well begun is half done. |
| ஆனைக்கும் அடி சறுக்கும் | Homer sometimes nods. |
| பசி வந்தால் பத்தும் பறக்கும் | Hunger is the best sauce. |
| புத்திமான் பலவான் | Knowledge is power. |
| ஆழமறியாமல் காலை விடாதே | Look before you leap. |
| அரசன் அன்றறுப்பான் தெய்வம் நின்றறுக்கும் | King proposes God disposes. |
| அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு | Many hands make light work. |
| நெருப்பில்லாமல் புகையில்லை | No smoke without fire. |
| காலம் பொன்னானது | Time is gold. |
| ஒன்று பட்டால் உண்டு வாழ்வு, ஒற்றுமை நீங்கின் அனைவர்க்கும் தாழ்வு | United we stand divided we fall. |
| சுவருக்கும் காதுண்டு | Walls have ears. |

ஜி. சந்தியா
12A (கலை)

# மனிதன் மனிதனாக வாழப் பதினெட்டு (18) அம்சங்கள்

| | | | |
|---|---|---|---|
| 01. | மிகவும் மதிக்கப்பட வேண்டியவர்கள் | - | தாய், தந்தை |
| 02. | மிக நல்ல நாள் | - | இன்று |
| 03. | செய்யக்கூடாதது | - | நம்பிக்கைத்துரோகம் |
| 04. | மிகப் பெரிய வெகுமதி | - | மன்னிப்பு |
| 05. | மிகவும் வேண்டியது | - | பணிவு |
| 06. | மிகவும் வேண்டாதது | - | வெறுப்பு |
| 07. | மிகவும் பெரிய தேவை | - | நம்பிக்கை |
| 08. | மிகப் பெரிய நோய் | - | சந்தேகம் |
| 09. | மிகவும் சுலபமானது | - | குற்றங்காணல் |
| 10. | கீழ்தரமான விடயம் | - | பொறாமை |
| 11. | நம்பக் கூடாதது | - | வதந்தி |
| 12. | ஆபத்தை விளைவிப்பது | - | அதிக பேச்சு |
| 13. | செய்யக்கூடியது | - | உதவி |
| 14. | விலக்க வேண்டியது | - | சோம்பேறித்தனம் |
| 15. | உயர்வுக்கு வழி | - | உழைப்பு |
| 16. | நழுவ விடக்கூடாதது | - | வாய்ப்பு |
| 17. | பிரியக் கூடாதது | - | நட்பு |
| 18. | மறக்கக் கூடாதது | - | நன்றி |

டெ. மேரிகிம்சம்
12B (கலை)

## விந்தை பற்றி அறியுங்கள்

✦ காலில் காதுள்ள உயிரினம் எது?
வெட்டுக்கிளி

✦ நீர் அருந்தாத ஜீவராசி எது?
பல்லி

✦ ஈசலின் ஆயுட்காலம் எது?
ஒரே ஒரு நாள்

✦ கற்களைத் திண்ணும் பறவை எது?
நெருப்புக்கோழி

✦ பச்சையம் இல்லாத தாவரம் எது?
காளான்

✦ தாரிலிருந்து தயாரிக்கும் மருந்து எது?
அஸ்பிரின்

✦ மாட்டுக்கு எத்தனை இரைப்பைகள் உள்ளன?
நான்கு

✦ நீந்தத்தெரியாத இரண்டு விலங்குகள் எவை?
ஒட்டகம், பன்றி

✦ உலகிலே வேகமாக வளரும் தாவரம் எது?
மூங்கில்




2008ம் ஆண்டு பரசளிப்பு விழாவின் போது




2009ம் ஆண்டு இல்ல மெய்வல்லுநர் போட்டியின் போது




2010ம் ஆண்டு தமிழ் விழாவின் போது

# மஹாகவி சுப்பிரமணிய பாரதியார்

தமிழ் இலக்கிய வரலாற்றில் சுடர்விட்டுப் பிரகாசிக்கின்ற பெரியார்களுள் மகாகவி என்று உலகத்தவர்களால் போற்றப்படும் சுப்பிரமணிய பாரதியாரும் ஒருவர்.

மகாகவி சுப்பிரமணிய பாரதியார் தமிழ் நாட்டில் உள்ள எட்டயபுரத்தில் சின்னச்சாமி ஐயருக்கும் லட்சுமி அம்மையாருக்கும் மகனாக 1882ம் ஆண்டு டிசம்பர் மாதம் 11ம் திகதி பிறந்தார். இவர் செல்லமாக சுப்பையா என அழைக்கப்பட்டார். பாரதியார் தமது ஐந்தாவது வயதில் தாயாரை இழந்தார். தனது ஆரம்பக் கல்வியைத் தமது தந்தையிடமே கற்று வந்தார்.

பாரதியார் தமிழ், ஆங்கிலம், சமஸ்கிருதம் எனப் பல மொழிகளிலும் பாண்டித்தியம் பெற்றவராக விளங்கினார். இவர் நிமிர்ந்த நடையும் நேர்கொண்ட பார்வையும் உடையவராகக் காணப்பட்டார். இவர் எப்பொழுதும் தலைப் பாகையுடனும், வேட்டியுடனும், சால்வையுடனும் தோற்றமளிப்பார்.

எட்டயபுரத்தில் உள்ள சமஸ்தான வித்துவான்கள் இவருடைய கவிதை வல்லமையைக் கண்டு, இவருக்குப் பாரதி எனும் பட்டத்தை வழங்கினர். பாரதியின் வாழ்க்கைத் துணையின் பெயர் செல்லம்மாள் பாரதி தந்தையை இழந்த பின் தனது அத்தையின் அரவணைப்பில் காசி என்ற இடத்திலுள்ள கலாசாலையில் கல்வி பயின்று வந்தார்.

பாரதியார் பல்வேறு வகையான இலக்கியங்களை எழுதியுள்ளார். அந்த வகையில் கண்ணன் பாட்டு, குயில்பாட்டு, பாஞ்சாலி சபதம் என்பன குறிப்பிடத்தக்கன. பாரதி வாழ்ந்த காலத்தில் பாரத நாடு அன்னியர்களினால் அடிமைப்படுத்தப்பட்ட ஒரு சமூகமாகக் காணப்பட்டது. பாரத மக்களை இவ்வடிமைத்தனத்தில் இருந்து மீட்டெடுப்பதற்குப் பல விடுதலை பற்றிய தேசியப் பாடல்களைப் பாடியுள்ளார்.

பாரதியார் குழந்தைகள் விரும்பும் வகையில் பல பாடல்களினைப் பாடியுள்ளார். அந்த வகையில் "ஓடி விளையாடு பாப்பா" எனும் பாடல் குறிப்பிடத்தக்கது.

பாரதியாரைப் புதுமைக்கவி, புரட்சிக்கவி, வரகவி முதலிய பல பெயர்களால் அழைப்பர். அதனால் "பாட்டுக்கொரு புலவன் பாரதி" எனப் புகழப்பட்டார். சுப்பிரமணிய பாரதியார் இந்திய நாட்டின் சுதந்திரத்திற்காக அரும்பாடுபட்ட ஒருவராகக் காணப்படுகின்றார். இவர் 1921 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 11ஆம் திகதி இவ்வுலகத்திதை விட்டு நீங்கி இறைவனடி சேர்ந்தார்.

ச. யசோதா

தரம் -8A

# இயற்கை அன்னை

இறைவன் கொடுத்த கொடை இயற்கை. இயற்கையின் விந்தைகளுக்கான விடைகளோ பற்பல. விடைகளின் விளக்கம் சொல்கின்றேன் சற்றுக்காது கொடுப்பீரா?

வெளிச்சம் தந்ததால் இயற்கை சூரியக் கடவுளானது.
தண்ணீரின் உயிர்ப்பினால் இயற்கை கடல்தாய் ஆனது.
பூமியின் இருப்பினால் இயற்கை பூமித்தாய் ஆனது.

இவ்வாறு வாழ வைத்த இயற்கைக்கு நன்றி சொன்னால் கேடுகள் தீருமென நம்பினோம் நம்பிக்கை பக்தியானது

இவ்வளவும் ஏன்? இயற்கைக்கு சொல் வடிக்க எழுதுகோல் எடுத்தேன் என் எழுத்துக்கூட கவிதையாய் உதித்தது.
இயற்கையை நம்பிக்கையோடு வணங்குவோம் நம்பிக்கையுள்ள மனதில் தெய்வீகம் இயற்கையாகவே பிறக்கும்
உள்ளதை உள்ளபடி வைத்து உன்னதவாழ்க்கை வாழ்வோமே...

சி. இசைநிலா
10A

# (Organizations)

| | | |
|---|---|---|
| UNO | :- | United Nations Organization |
| NATO | :- | North Atlantic Treaty Organization |
| WTO | :- | World Trade Organization |
| BBC | :- | British Broadcasting Co-operation |
| ICC | :- | International Cricket Committee |
| ICRC | :- | International Committee of the Red Cross |
| IOC | :- | International Olympic Committee |
| IAEA | :- | International Atomic Energy Agency |
| PLO | :- | Plastine Liberation Organization |
| NGO | :- | Non Government Organization |
| CIA | :- | Central Intelligence Agency |
| WHO | :- | World Health Organization |
| FAO | :- | Food and Agricultural Organization |
| ADB | :- | Asian Development Bank |

**R. Dusikka**
*10A*

# நல்லார்க்கு மேன்மை நன்றாகும்.

"நல்லாரைக் காண்பதுவும் நன்றே நலம்மிக்க நல்லார் சொல் கேட்பதுவும் நன்றே அவரோடு இணங்கி நடப்பதும் நன்றே"

என்ற ஔவைப்பிராட்டியின் நீதிப்பாடல் கூறும் பிரதான கருத்து நாம் நல்லவர்களோடு இணைந்து செயற்பட வேண்டும் அவர்களோடு நட்புக் கொள்ள வேண்டும் என்பதாகும்.

நல்லவர் எனக் கருதப்படுபவர் யாவர்? இவ்வினாவிற்கு விடை காண்பது இங்கு அவசியமாகின்றது. பணமும், பெருமையும் படைத்தவரோ, பொறாமையுடன் செருக்கும் படைத்தவரோ நல்லவர் எனக் கூறப்படமாட்டார். ஆழ்ந்த நுண்ணறிவுபெற்று விளங்கும் ஒரு ஏழை கூட இவர்கள் அனைவரையும் விட மேலானவராகக் காணப்படுகின்றார்.

மேலே குறிப்பிட்ட சிலரது நட்பு எமக்குப் போலியானதாக இருக்கும். ஆனால் எத்துன்பம் நேர்ந்த போதும் எம்மை விட்டு ஒரு போதும் நீங்காத நட்புள்ளம் படைத்தவர்களின் நட்பே சிறந்ததாகும்.

நல்லார் ஒருவருடன் நாம் நட்புக் கொண்டோமேயானால் எமக்கு எத்தனையோ ஆயிரம் நன்மைகள் கிடைக்கும் என வள்ளுவர் பெருமானும், நாலடியாரைத் தொகுத்த பதுமனாரும் குறிப்பிட்டிருக்கின்றனர். அத்தகைய ஒரு நட்பு சிந்திக்கக் தூண்டுகின்றது அல்லவா?

"பாலோடளாய நீர்..." என்ற நாலடியார் பாடலிலே தேரில் சிறியார் சிறுமையும் தோன்றாதாம் நல்ல பெரியார் பெருமையைச் சார்ந்து" என்ற வரிகள் நாம் நல்ல பெரியவர் ஒருவருடன் சேர்ந்து நடந்தோமாயின் எம்மில் காணப்படும் குறைகள் கூட நீங்கிப் பெருமை பெற்றவர்களாகக் கருதப்படுவோம் என்பதை எமக்கு உணர்த்துகின்றது.

வள்ளுவர் பெருமான் நாம் எவ்வாறு நல்லவர் ஒருவரின் நட்பைத் தெரிந்து கொள்வது என்பதை "நட்பு ஆராய்தல்" என்ற அதிகாரத்திலே குறிப்பிட்டிருக்கின்றார். ஆதிகாலம் தொடக்கம் நாம் நல்ல நட்பின் பெருமையைப் பல்வேறு கதைகள் மூலமாகவோ, அல்லது நூலாதாரங்கள் மூலமாகவோ அறியக்கூடியதாகவுள்ளது.

மகாபாரதத்திலே குந்திதேவியின் மூத்த புதல்வனான கர்ணன் குந்தி தன் தாய் பாண்டவர்கள் தன் சகோதரர்கள் எனத் தெரிந்தும் தான் துரியோதனன் மீது கொண்ட அந்த உண்மையான நட்பின் காரணமாக போர்க்களத்திலே தன் உயிரை மாய்த்துக் கொண்டான். விட நல்ல நட்பு துரியோதனனுக்குக் கிடைக்குமா?

இதனால் தான் "உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே இடுக்கண்களைவதாம் நட்பு" என்று வள்ளுவன் குறளும் வலியுறுத்தி நிற்கின்றது.

ஆனால் நாம் இவற்றுக்கெல்லாம் மாறாக நாம் விரும்பிய வகையில் நட்பைத் தேர்ந்தெடுப்போமாயின் எம் வாழ்வில் வளம், மகிழ்ச்சி என்பவற்றை இழக்க நேரிடும்.

"பேற்றிலே மிகுமொருவன் புல்லரிடம்
அகப்பட்டு பிழைகள் செய்வான்"

என்று அச்சுவேலி தம்பிமுத்துப்புலவர் அவர்கள் தம் பழமொழிப் போதனையிலே குறிப்பிட்டிருக்கின்றார். எவ்வளவு தான் பெரிய அறிவு படைத்தவனாகவோ, மகாவீரனாகவோ இருந்தும் தீயவரோடு அவன் நட்பு கொண்டால் அவன் தீயவழியில் சென்று தீயவனாகி விடுவான்.

ஆனால் நல்லவனொருவனிடம் சேர்வானாயின் அவனது வாழ்வு சிறக்கும். எனவே நல்லார் கேண்மையினைத் தேடிப் பெற்று நாமும் மேம்பட்டு ஏனையோரையும் வாழ வைப்போம்.

த. நிதர்சனா
12B (கலை)

# அதிக தடவைகள் 2 மட்டும் விடையாக வருமாறு கூட்டுத்தொகை பெறுதல்

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 |
| | 9 | 8 | 7 | 6 | 5 | 4 | 3 | 2 | 1 |
| | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 |
| | 9 | 8 | 7 | 6 | 5 | 4 | 3 | 2 | 1 |
| | | | | | | | | | 2 |
| 2 | 2 | 2 | 2 | 2 | 2 | 2 | 2 | 2 | 2 |

த. விதுசன்
9B

# திறனாய்வு (ஒற்றுமை எங்கே?)

விந்தை உலகிலே நடக்கும் சுவாரசியமான சம்பவங்கள், வாழ்க்கை முறைகள், என்பவற்றை மிகவும் அழகாகப் படைப்பதற்காக உருவாக்கப்பட்ட ஒரு உத்தி கவிதை வடிவமாகும். இது ஒரு அழகியல் உணர்வின் வெளிப்பாடு ஆகும். மக்கள் மத்தியிலே ஏற்படும் பிரச்சினைகளைப் பற்றிய ஒரு கவிதையினைத் தான் நான் இப்போது நயக்கலாம் என நினைக்கின்றேன். ஆசிரியர் தந்த "ஒற்றுமை எங்கே?" என்ற கவிதையினை கருப்பொருள், கருத்து வெளிப்பாடு, ஆசிரியரின் உணர்ச்சி வெளிப்பாடு, மொழிநடை, கூறும் செய்தி போன்றனவற்றின் அடிப்படையில் திறனாய்வு செய்வது பொருத்தமானது என நினைக்கின்றேன்.

## கவிதைக் கரு:

மக்களிடையே ஒற்றுமை இல்லாத தன்மையினை இந்தக் கவிதை சுட்டிநிற்கின்றது. அதாவது மக்கள் மத்தியிலே ஏற்படுகின்ற பிரச்சினைகளில் ஒன்றாக இது காணப்படுகின்றது. இதனை "ஒற்றுமை எங்கே?" என்ற கவிதைத் தலைப்பு கேள்விக்குறியோடு பிரச்சினையை வெளிப்படுத்தி நிற்கின்றது. ஆசிரியர் தனது முதலாவது கவிதை வரியிலே மக்களின் ஒற்றுமை இல்லாத தன்மையைக் கூறுகின்றார். ஒற்றுமை இன்மையால் ஏற்படும் விபரீதங்களை "பிடியுங்கள் சண்டை உடையுங்கள் மண்டை பித்தரைப் பேயரைப் போல..." என்ற வரி உணர்த்தி நிற்கின்றது.

## கருத்து வெளிப்பாடு:

மக்கள் மத்தியிலே ஏற்படும் பிணக்குகளைச் சுமுகமாகப் பேசித் தீர்த்துக் கொள்ளாமல் அடிபடுவதனையும் அதனால் நம்மவர்களே அழிகின்றனர் என்பதையும் சுட்டிக்காட்டுகின்றார் ஆசிரியர் வி. கந்தவனம் அவர்கள். இதனை,

"ஒடியுங்கள் உள்ள ஒற்றுமை தன்னை
ஓவென நம்மவர் வீழ்வார்"

என்ற வரி புலப்படுத்துகின்றது. இது நகைச்சுவைப் பாங்காக இருப்பதனைக் காணலாம். அடுத்து ஒற்றுமை அற்ற சமூகத்தினால் நம் அனைவரின் பெறுமதிமிக்க தமிழ் மானமும் சேர்ந்து போவதாகக் கூறுகின்றார். அது மட்டுமல்லாமல் ஒற்றுமை இல்லாது இந்த உலகத்தில் யாரும் தனித்து இயங்க முடியாது என்ற கருத்தினை மூன்றாவது பந்தியின்கடைசி இரு வரிகளான

"..... சாற்றுக சான்று தாரணி மீதில்
தழைத்தவர் யார் தனி நின்று ...." என்ற வரிகளின் ஊடாகக் குறிப்பிடுகின்றார். அடுத்து இறுதிப் பந்தியிலே முதல் இருவரிகளான

"ஒற்றுமை எங்கே ஒற்றுமை எங்கே
ஒற்றுமை விட்டவர் கெட்டார்" என்ற வரியிலே ஒற்றுமை இல்லாதவர் எப்படி இருப்பார். என்பதனைச் சமூகப் பார்வையின் போக்கினூடாகச் காட்டியுள்ளார். பிறரது

துன்பத்திலே துயரினைத் துடைத்து துணிவுடன் இருந்த ஒரு காலம் போய் இப்போது ஒற்றுமை இல்லாமல் எம் தலையில் நாமே கொள்ளியை வைத்து அள்ளி எம் கண்ணிலே மண்ணைக் கொட்டுவது என்ன கொடுமை என்று தனது இரண்டாவது பந்தியில் கடைசி நான்கு வரிகளிலும் கூறுகின்றார்.

இவ்வாறு ஒற்றுமை இன்மையால் ஏற்படும் விபரீதங்களை தனது கருத்து வெளிப்பாட்டின் மூலம் ஆசிரியர் வி. கந்தவனம் அவர்கள் தன் கவித்துவத்தை வெளிப்படுத்துகின்றார்.

## ஆசிரியரின் உணர்ச்சி வெளிப்பாடு:

ஆசிரியர் இந்தச் சமூகத்தில் ஒற்றுமை இன்மையால் ஏற்படும் விளைவுகளைக் கண்களால் பார்த்திருக்கின்றார் போலும் அதனால் தான் தன் கவிதைத் தொடக்கத்திலே "பிடியுங்கள் சண்டை உடையுங்கள் மண்டை" என்று தொடங்கி இருக்கின்றார். அடுத்த வரியான

"கடியுங்கள் கையை அடியுங்கள் மண்டை
கட்டழும் துடித்திடும் வேளை
ஒடியுங்கள் உள்ள ஒற்றுமை தன்னை
ஓவென நம்மவர் வீழ்வார்
குடியினி என்ன குன்றிடும் நாளை
கூத்திவர் ஆடுவதாலே"

என்ற வரிகளின் மூலம் ஒற்றுமை சீர்குலைந்து செல்வதனை தனது உணர்ச்சி வெளிப்பாட்டின் மூலம் குறிப்பிடுகின்றார். அடுத்து தனது தமிழ்த்தாய் மானம் இந்தப் பாவிகளின் ஒற்றுமை இல்லாத தன்மையால் மானத்தோடு சேர்ந்து புகழும் போகிறதே எனத் தனது ஆதங்கத்தை வெளிப்படுத்துகின்றார். அடுத்து ஆசிரியரின் உச்சக் கட்ட உணர்ச்சி வெளிப்பாடு

"கற்றது மென்ன கற்றதும் என்ன
கண்டதைக் கொண்டிடவாமோ"

என்ற வரியில் மிகவும் அழகாகக் காட்டியுள்ளார். நாம் கற்றுக் கொண்டது எதற்கு கண்டதை எல்லாம் பார்த்துக் கொண்டிருப்பதற்காகவா? என்று அங்கலாய்கின்றார். இதன் மூலம் ஆசிரியரின் உணர்ச்சி வெளிக்காட்டப் படுவதனை அவதானிக்கலாம்.

## மொழிநடை:

ஆசிரியர் தான் கூறவந்த விடயத்தை இலகுவாகப் புரிந்து கொள்ளும் விதத்தில் அமைத்துள்ளமை குறிப்பிடத்தக்க ஒன்றாகும். அதாவது தான் கூறவந்த விடயத்தினை

கடினமான மொழிநடையில் கையாளாமல் பாமர மக்களும் படித்துச் சுவைத்துக் கொள்ளும் வகையில் ஸி. கந்தவனம் ஆசிரியர் மிகவும் தெளிவாகக் கூறியுள்ளார்.

"கண்ணுக்கு மையழகு
கவிதைக்கு பொய்யழகு"

என்று ஒரு பாடல்வரி கூறுகின்றது. அந்தப் பாடலின் கூற்றை நிராகரித்து சமூகத்தோடு ஒன்றிப் போய் சமூகத்தில் நடக்கும் பிரச்சினைகளைப் பார்த்து அதன் யதார்த்தத் தன்மையினைப் பேச்சு வழக்குச் சொற்கள் மூலம் தந்தமை மற்றுமொரு சிறப்பம்சமாகும்.

"ஒற்றுமை எங்கே" என்ற கவிதையில் அணிச்சிறப்பு முக்கிய இடம் பெறுகின்றது அதாவது எதுகை, மோனைச் சிறப்பினை வெளிப்படுத்தி உள்ளார் ஆசிரியர்.

"பிடியுங்கள் சண்டை
பித்தரைப் பேயரைப் போல
கடியுங்கள் கையை
கட்டமும் துடித்திடும் வேளை
ஒடியுங்கள் உள்ள ஒற்றுமை தன்னை
ஓவென நம்மவர் வீழ்வார்"

என்ற பாடல் வரிகளில் நாம் கண்டு இன்புறலாம்.

## கூறும் செய்தி:

ஆசிரியர். சி. கந்தவனம் அவர்கள் தாம் கூற வந்த செய்தியாக ஒற்றுமை இல்லாத தன்மையினையும் அதனால் நம்மவர்கள் தான் அழிகின்றனர் என்பதனையும், நம் தமிழ் மானம் போகிறது என்பதனையும். ஒற்றுமை இன்மையால் பட வேண்டிய துன்பத்தினையும் நாம் எம்மவர்களையே ஒற்றுமை இன்மையால் அழிக்கின்றோம் என்ற உண்மையையும் "ஒற்றுமை எங்கே?" என்ற கவிதையின் ஊடாக மிகவும் அழகாக நயக்கத்தந்துள்ளார். இதனை நாம் மனக்கண்முன்னே ஒரு படமாக பார்க்கும் போது இதனால் ஏற்படும் விபரீதங்களை அறிவது கண்கூடு.

இ. ஜெயப்பிரியா
12A (கலை)

# தர்மத்தின் வாழ்வுதனை சூதுகவ்வும் ஆனாலும் தர்மம் இறுதியில் வெல்லும்

நாடக மாந்தர்கள்

| | | |
|---|---|---|
| 1. | தியாகு | - பிரதான பாத்திரம் |
| 2. | ரவி | - தியாகுவின் நண்பர்கள் |
| 3. | சந்திரன் | |
| 4. | மாலா | - தியாகுவின் மனைவி |
| 5. | அபி, தினேஸ் | - தியாகுவின் பிள்ளைகள் |
| 6. | இராசதுரை | - ஊர்ப்பெரியவர் |
| 7. | டொக்டர் | |

## காட்சி - 01

திரை மெதுவாகத் திறக்கப்படுகின்றது. படச்சட்ட மேடையின் DCயில் தியாகு, ரவி, சந்திரன் ஆகியோர் உறை நிலையில் நிற்கின்றனர் மாலை நேரம். பின்னணியாக கோயில் வளாகம் காட்சிப்படுத்தப்படுகின்றது. மந்திர ஒலிகள், மென்மையான இசை காற்றில் கலந்து இசைக்கப்படுகின்றது. பின்வரும் பாடல் இசைக்கப்படுகின்றது. இதற்கேற்ப நண்பர்கள் அசைகின்றனர்.

"இராப்பகலாய் நாள்முழுவதும் கஷ்டப்பட்டு உழைத்தாலும்
கையில் எஞ்சுவது சிறுபணமே (02)
உயிரைக்குடிக்கும் மனிதர்கள் வாழ்க்கையில்
உணர்வேது உறக்கமேது
நம்மையே நமக்குத்துணை முயற்சி செய்து உயர்ந்திடுவோமே!"

**தியாகு** :- ரவி மற்றவேன்ர பொருளுக்கு ஆசைப்படாதய் உழைச்சு வாங்கு நிலைத்து நிற்கும்.

**ரவி** :- ம்... ம் இப்பிடி சொல்லிச் சொல்லியே எங்களையும் வாழவிடாத நீயும் வாழாதை.

**தியாகு** :- நீ அப்பிடியெல்லாம் சொல்லக் கூடாது. தர்மத்தின்படி வாழ வேண்டும். மனச்சாட்சிக்குத் துரோகம் செய்யக்கூடாது.

**சந்திரன்** :- ரவி, இவனிட்டை உனக்கென்ன பேச்சு. இந்தக் காலத்தில உலகத்திலயார்தான் தர்மம், மனசாட்சி எண்டு பேசுறது எங்கட வாழ்க்கை எங்கட கையில் நாங்கள் தனியாக்களில்லை. எங்கள நம்பி ஒரு குடும்பம் இருக்கு. இவனோட பேசி நேரத்தைவீணடிக்காதை.

**ரவி** :- நீ சொல்லுறது தான் சரி நானும் உன்னோடையே வாறன். (சில நாட்களுக்குப் பிறகு தியாகுவின் வீடு)

மாலா :- குழந்தையளுக்கு ஒரு "மா கூட இல்லை தர்மம், நீதி நேர்மை எண்டு சொல்லி வாழ்க்கையைச் சீரழிச்சுக் கொண்டு ....

தியாகு :- மாலா எதையும் யோசிச்சு கதைக்க வேண்டும் புராணக்கதைகளை நீ படிக்கேலையா? அதர்மம் செய்பவரைத் தெய்வம் ஏதாவது ஒரு வடிவில் வந்து தண்டிக்கும்

மாலா :- தண்டிக்கும் தண்டிக்கும் ஏதோ ஊரில நடக்காததைச் செய்யச் சொன்னது மாதிரி

அபி :- அப்பா தீபாளி வருகுதெல்லோ எனக்கு புதுச்சட்டை

தினேஸ் :- ஓமப்பா எனக்கும் புதுஉடுப்பு, சப்பாத்து எல்லாம்

தியாகு :- நாளைக்கு வரேக்க பிள்ளையளுக்கு எல்லாம் வாங்கியாறன்

அபி, தினேஸ் :- நீங்கள் எப்பவும் இப்படித்தானப்பா சொல்லுவீங்கள். ஆனால் (சோகமாக) வாங்கியர மாட்டீங்கள்

மாலா :- தினேஸ், அபி போய் விளையாடுங்கோ அம்மா வாறன்

தியாகு :- சீ என்ர வாழ்க்கையில மட்டும் ஏன் இப்படி நடக்கும் இந்தப் பிஞ்சு மனசுக்குள்ள என்னப்பற்றி எப்படியெல்லாம் எண்ணம் இருக்கும்.

மாலா :- அது தான் நான் சொல்லுறன் உலகத்தோட ஒத்து வாழப் பழக வேணும்

தியாகு :- அதுக்காக என்னைப் பாவம் செய்யச் சொல்லுறியா?

மாலா :- நீங்கள் ஏன் பாவம் எண்டு நினைக்கிறீங்கள் ரவியின்ர சந்திரன்ர குடும்பத்தை பாருங்கோ? எவ்வளவு சந்தோசமாய் குழந்தையளோட விளையாடுகினம்.

தியாகு :- ஏதோ திருட்டு செய்யிறானாம் எண்டு கேள்விப் பட்டன்.

மாலா :- ம்ம்... பேருக்குத்தான் திருட்டு. நீங்கள் ஏன் திருட்டு எண்டு நினைக்கிறீங்கள் செய்யிற வேலைக்கு ஒழுங்காக கூலி தாறதில்லை. அது தான் அதிகமாக கிடக்கிறவனிட்ட போய் தனக்கு தேவையான அளவு எடுக்கின்றான்.

தியாகு :- திருட்டு எவ்வளவு பெரிய குற்றம். உழைச்சு முன்னேற வேண்டும். மற்றவேன்ர பொருளுக்கு ஆசைப்பட்டு அபகரிக்கிற வேன்ர வாழ்க்கை இறுதியில் சீரழிஞ்சு தான் போகும்.

மாலா :- உங்களைத் திருத்த ஏலாது. ஏதாவது போய்ச் செய்யுங்கோ, ஆனால் நானும் பிள்ளையளும் உயிரோட தான் இருக்கிறம் எண்டதை மறந்திடாதேயுங்கோ.
(தியாகு வீட்டை விட்டு வேகமாக வெளியே செல்கின்றான்.)

## காட்சி - 02

(வேலை செய்யும் இடம் நண்பர்கள் கூடுகின்றனர்)

சந்திரன் :- தியாகு நாங்கள் இப்பவொரு புதுத் தொழில் ஆரம்பிச்சிருக்கம். முதல் இல்லை, ஆனால் வருமானம் அதிகம்.

ரகு :- ஓம் தியாகு நீ கஸ்ரப்படுறதை எங்களால பார்க்க முடியாது. நீயும் எங்களோட வா

தியாகு :- ரகு நீங்கள் இப்ப புரியாத வயசில இளமைத்துடிப்பில செய்யிறீங்கள் கொஞ்ச காலம் போக என்ன நிலை வரும் எண்டு தெரியும் தானே.

சந்திரன் :- நீ திருந்த மாட்டாய் சொன்னா கேட்கமாட்டாய் இப்பதான் என்ர குடும்பத்தில மகிழ்ச்சி. நிம்மதி எல்லாமே.

ரகு :- சரிதான் சந்திரன். கனவருசமாய் பிரிஞ்சிருந்த என்ர குடும்பம் கூட சேந்திட்டுது தெரியுமா?

தியாகு :- நீங்கள் செய்யிறதிப்ப சரியாய்த் தான் தெரியும் ஒரு காலத்தில யோசிப்பியள்

ரகு :- சரி தியாகு களைப்பா இருக்குது உங்காலிப்பக்கம் போய் வருவம். (சாராயக்கடை திசையைக் காட்டி)

தியாகு :- சாராயம் குடிக்கவா? நான் வரேல

சந்திரன் :- சரிவா. தியாகு எப்பதான் வாழ்க்கையை அனுபவிக்கப்போறானோ? (நண்பர்கள் இருவரும் பாடிக் கொண்டே மேடையை விட்டு வெளியேறுகின்றனர். தியாகு கலக்கத்துடன் பார்வையாளரை நோக்கியாறு நிற்கிறார். அந்த வழியே ஊர்ப்பெரியவர் வருகிறார் தியாகுவைப் பார்த்து..)

இராசதுரை :- என்ன தியாகு தனியா நிண்டு யோசிக்கிறாய்.

தியாகு :- ஒன்றும் இல்லை ஐயா. மனிசன்ர வாழ்க்கையை நினைச்சுப் பார்த்தனான்

இராசதுரை :- நீ ஏன் மற்றவேன்ர குடும்பத்தை பற்றி கவலைப்படுறாய் உன்ர குடும்பத்தை நினை

தியாகு :- இல்லை ஐயா! நேர்மையாக வாழுறது தப்பா. பிறருக்கு உதவி செய்ய நினைக்கிறது தப்பா? கொலை , களவு, கள்ளுண்ணாமை இருப்பது தவறா?

இராசதுரை :- நீ செய்யிறது எதுவும்தவறில்லை. ஆனால் கொஞ்சம் மாறவேணும் நீ தனி மனிசனில்லை. உனக்கெண்டொரு மனைவி குடும்பம் இருக்குது. (தூரத்தில் குழந்தைகள் விளையாடிக் கொண்டிருக்கின்றார்கள் குழந்தைகளைக் காட்டி)

தியாகு :- எங்கட வாழ்க்கை இப்படி சூது, களவு, கள் எண்டு போனால் அதுகளை எப்படித் திருத்திறது.

இராசதுரை :- நீ சொல்லுறதும் சரிதான். ஆனால் நடைமுறை வாழ்க்கைக்கு சரிவரது

தியாகு :- கொஞ்ச நாளைக்குத் தர்மத்தின் படி வாழ்ந்தால் எல்லாம் பழகிப்போய் வாழ்கையே சந்தோசமாய் இருக்கும்.

இராசதுரை :- நீ பெயருக்கேத்தமாதிரி எல்லோருக்கும் உதவி செயவே வாழ்க்கையை தியாகம் செய்திட்டாய். உன்னை நினைக்க எனக்குப் பெருமையாய் இருக்கு.

(உரையாடியவாறே மேடையை விட்டு வெளியேறுகின்றனர்.)

## அங்கம் - 03

*(தியாகுவின் வீடு, அபி விபத்துக்குள்ளாகி வைத்தியசாலையில் அனுமதிக் கப்பட்டிருக்கிறாள்)*

மாலா :- *கடவுளே! என்ர மகளை நீ தான் காப்பாத்த வேணும்*

தியாகு :- *கவலைப்படாதை மாலா. அவளுக்கு ஒன்றுமாகாது.*

மாலா :- *அபிக்கு ரத்தம் நல்லாப்போட்டுதாம். ரத்தம் ஏத்த வேணுமாம் அவ்வளவுக்குக் காசில்லை ஆரிட்டையாவது போய் கேட்டுப் பாருங்கோவன்.*

தியாகு :- *ஆரிட்டை எண்டு நான் போவன்.*

மாலா :- *எத்தினை பேருக்கு உதவி செய்திருப்பீங்கள். ராஜா, விமல், காந்தன், சுரேஸ் எண்டு எத்தனை பேரைச் சொல்லலாம்.*

தியாகு :- *என்னண்டு போய்க்கேட்கிறது*
*(பார்வையாளர் பக்கம் காட்டி அட அங்க ரவியும், சந்திரனும் வருகினம் கேட்டுப்பாப்பம்*

சந்திரன் :- *தியாகு நடந்ததெல்லாம் கேள்விப்பட்டம் கவலைப் படாதை உன்ர நல்ல மனசுக்கு எதுவும் நடக்காது.*

தியாகு :- *அதில்லை சந்திரன் கொஞ்சம் பணம் தேவைப்படுகிறது*

ரவி :- *தியாகு எங்கள மன்னிச்சிடடா நாங்கள் பொலிசில குற்றப்பணம் கட்டினாங்கள்.*

தியாகு :- *ஏன் என்ன நடந்தது.*

சந்திரன் :- *நாங்கள் செய்தது மன்னிக்க முடியாத தப்பல்லோ?*

மாலா :- *இப்ப எங்க போய் என்ன செய்யிறது ஒண்டுமே தெரியேலை*
*(தூரத்தில் இராசதுரை வருகிறார்)*

இராசதுரை :- *தியாகு உனக்கு எவ்வளவு பணம் தேவையெண்டாலும் நான் தாறன் முதல்ல பிள்ளையின்ர வைத்தியத்தைப்பார்ப்பம்.*

மாலா :- *இராசதுரையண்ணை உங்களுக்கு என்னெண்டு நன்றி சொல்லுறதெண்டே தெரியேலை. எத்தின பேற்றை வீடு வீடாய் போய்க் கேட்டிருப்பன் எவ்வளவு அலைஞ்சன் தெரியுமா?*

தியாகு :- *சரி சரி வாங்கோ வைத்திய சாலைக்குப்போவம். (எல்லோரும் வைத்தியசாலைக்குச் செல்கின்றனர்).*

## அங்கம் 04

*(வைத்தியசாலை)*

தியாகு :- *டொக்டர் டொக்டர் அபிக்கு என்னமாதிரி.*

டொக்டர் :- *கவலைப் படத் தேவையில்லை 1/2 மணித்தியாலத்துக்கு பிறகு போய்ப் பார்க்கலாம்.*

மாலா :- *ரத்தம் ஏத்த பணம் கொண்டந்தனாங்கள் டொக்டர். நீங்கள் ஒப்ரேசனுக்குரிய ஆயத்தங்களைச் செய்யலாம்.*

டொக்டர் :- அதுக்கு அவசியமில்லை. யாரோ உங்களுக்குத் தெரிஞ்சவை யெண்டு சொல்லி ரத்ததானம் செய்தவை. அவங்க மட்டும் சரியான நேரத்திற்கு உதவி செய்யேலை எண்டால் உங்கட மகளையே உயிரோட பார்க்க முடியாது (வைத்தியர் செல்கிறார்)

மாலா :- யாராய் இருக்கும்? கடவுளே அனுப்பி வைச்சிட்டார். (இரத்த தானம் செய்தவர்கள் இவர்களுக்கு அருகிலே வந்து)

உதவியாளர் :- தியாகு அண்ணை நாங்கள் தான் அபிக்கு உதவி செய்தனாங்கள்

தியாகு :- ரொம்ப நன்றி நீங்கள் இல்லை யெண்டால் நாங்கள் இப்ப உயிரோடையே இருக்க மாட்டோம்.

உதவியாளர் :- அப்படி யெல்லாம் நீங்கள் சொல்லக்கூடாது (நீங்கள் அண்ணைக்கு எங்களுக்கு உதவி செய்ததால தான் நாங்கள் இப்படித் தலைநிமிர்ந்து நிற்கிறம். பலபேருக்கு எங்களாலான உதவி செய்யிறம்.

மாலா :- நீங்கள் பிறருக்கு உதவி செய்தபோதெல்லாம் நான் எதிர்த்து சண்டை போட்டனான், ஆனால் தர்மம் தலைகாக்கும் எண்டது போல் என்ர அபியின்ர உயிரையும் காப்பாத்திட்டுது

ரவி :- நாங்களும் எவ்வளவோ முறை உன்னை மனம்மாத்தப் பாத்தம் ஆனால் நீ எவ்வளவு எதிர்ப்புக்கள் வந்தாலும் தர்மத்தின் வழி நின்றாய்.

சந்திரன் :- இனி நாங்களும் பிறருக்கு உதவி செய்யப்போறம் எங்கள மாதிரி இருக்கிற ஒவ்வொருத்தரையும் மாத்தப் போறம். எல்லோருக்கும் முன் மாதிரியாய் இருக்கப்போறம்

தியாகு :- எனக்கு ரொம்பச் சந்தோசமாய் இருக்குது. இனி உலகத்தில ஒவ்வொருத்தரும் எல்லோருக்கும் உதவி செய்து அன்பாய் இருக்கப் போகினம்.
(பார்வையாளரைப் பார்த்து) நீங்களும் உலகத்தவர்களுக்கு உதவி செய்வீங்களெல்லோ?

(நாடக ஆரம்பத்தில் இசைக்கப்பட்ட இசையுடன் திரைமெல்ல மெல்ல மூடுகிறது)

ஜெ. ஜெயஸ்ரிக்கா
12A (கலை)





2011 ம் ஆண்டு பரிசளிப்பு விழாவின் போது





2012ம் ஆண்டு நடைபெற்ற இல்ல மெய்வல்லுநர் போட்டி நிகழ்வின் போது



2012ம் ஆண்டு
இணையத்தள ஆரம்ப நிகழ்வின் போது



2012ம் ஆண்டு
பரிசளிப்பு விழாவின் போது

# உலகின் முக்கிய தினங்கள்

## ஜனவரி
10 உலக சிரிப்பு தினம்
12 உலக இளைஞர் தினம்
31 உலக தொழுநோயாளர் தினம்

## பெப்ரவரி
21 உலக தாய் மொழித் தினம்
22 உலக சாரணிய தினம்
25 காசநோய் தடுப்பு தினம்

## மார்ச்
8 உலக மகளிர் தினம்
11 பொது நலவாய தினம்
15 ஊனமுற்றோர் தினம்
22 உலக குடிநீர் தினம்
23 உலக வளிமண்டல தினம்

## ஏப்ரல்
01 உலக முட்டாள் தினம்
07 உலக சுகாதார தினம்
12 உலக விண்வெளி தினம்
15 உலக நூலக தினம்
23 உலக புத்தக தினம்

## மே
01 உலக தொழிலாளர் தினம்
12 உலக தாதியர் தினம்
17 உலக தொடர்பாடல் தினம்
31 உலக புகைத்தல் எதிர்ப்பு தினம்

## யூன்
01 உலக குழந்தைகள் தினம்
05 உலக சூழற் பாதுகாப்புதினம்
26 உலக போதைப் பொருள் தடுப்பு தினம்

## யூலை
01 உலக சனத்தொகை தினம்
17 உலக வறுமை ஒழிப்பு தினம்
28 உலக அகதிகள் தினம்

## செப்ரெம்பர்
8 உலக எழுத்தறிவு தினம்
13 உலக தாத்தா, பாட்டி தினம்
16 உலக ஓசோன் தினம்
25 உலக செவிப்புலன் அற்றோர் தினம்
27 உலக சுற்றுலா தினம்

## ஒக்டோபர்
01 உலக சிறுவர் தினம்
01 உலக முதியோர் தினம்
06 உலக ஆசிரியர் தினம்
09 உலக தபால் தினம்
15 உலக வெள்ளைப் பிரம்பு தினம்
16 உலக உணவு தினம்
23 உலக இரத்ததான தினம்
24 உலக ஐக்கிய நாடுகளின் தினம்
26 உலக சமாதான தினம்

## நவம்பர்
14 உலக குழந்தைகள் தினம்
17 உலக மாணவர் தினம்
20 உலக சிறுவர் உரிமைகள் தினம்

## டிசம்பர்
01 உலக எயிட்ஸ் தினம்
03 உலக வலது குறைந்தோர் தினம்
10 உலக மனித உரிமைகள் தினம்
23 உலக விவசாயிகள் தினம்

# சிறுவர் உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும்

எதிர்கால சந்ததி வளமாக நேரிய வழியில் வாழ வழியமைக்கும் சிந்தனையே கொண்டு, வளர்ந்தோர் மத்தியில் ஏற்படுத்துவதற்கும் இளையோர் தமக்குரிய உரிமை எவை என தெரிந்து கொள்வதற்கும் இன்றைய கால உலக சிறுவர் தினம் வழி வகுத்துள்ளது. ஐக்கிய நாடுகள் சபையின் தீர்மானத்திற்கமைய ஒவ்வொரு ஆண்டும் அக்டோபர் மாதம் 01ம் திகதி உலகளாவிய ரீதியில் சிறுவர் தினம் கொண்டாடப்படுகின்றது.

சிறுவர்களது உரிமைகள் தொடர்பாக முதன் முதலில் 1959 இல் கொள்கையொன்று வெளியிடப்பட்டது. அதன் பின்னர் 1959 இல் ஐக்கிய நாடுகள் சபையால் 1924ஆம் ஆண்டின் கொள்கையை அடியொற்றி சிறுவர் உரிமைகள் தொடர்பான தெளிவான கொள்கை ஒன்று வெளியிடப்பட்டது. 1979ஆம் ஆண்டு உலக சிறுவர் ஆண்டாக பிரகடனப்படுத்தப்பட்டது. சர்வதேச தொழிலாளர் சம்மேளனம் 1969ஆம் ஆண்டு சிறுவர் பற்றிய கொள்கையை அங்கீகரித்தது.

இவ்வாறு சிறுவரது அடிப்படை உரிமைகள் தொடர்பில் உலக அரங்கில் கொடுக்கப்பட்ட முக்கியத்துவத்தையும் அதன் மூலம் ஏற்றுக் கொள்ளப்பட்ட கொள்கை விதிகளை இலங்கை 1992இல் ஏற்றுக் கொண்டது. சிறுவர் உரிமைகளாக ஏற்றுக் கொள்ளப்பட்ட விதிகள் பின்வருமாறு.

01. பிறப்பின் போது பெயரொன்றையும் இன அடையாளத்தையும் பெற்றுக் கொள்ளும் உரிமை
2. பெற்றோரை மதித்த தன்மை தனிமைப் படுத்தப்பட்டிருப்பதான உரிமை
3. பெற்றோரிடமிருந்து தம்மை தெரிந்து கொள்வதற்கு அவர்களது பாதுகாப்பை பெறுவதற்கான உரிமை
4. வழங்குவதற்கும். முன்னேற்றுவதற்கும் உரிமை வெளிப்பட வேண்டும்.
5. கருத்தை வெளிப்படுத்தும் உரிமை
6. சிந்திப்பதற்கும் மனச்சாட்சி படி நடப்பதற்கும் உள்ள உரிமை
7. போதிய கல்வி பெறும் உரிமை
8 ஓய்வெடுக்கவும் விளையாடவும் வேண்டும் சமாதான உரிமை
9. வல்லுறவு, பாலியல் துன்புறுத்தல்களிலிருந்து பாதுகாத்து கொள்ளும் உரிமை
10. சுதந்திரத்துடன் வாழ்வதற்கு பாதுகாப்பான உரிமை

இவ்வாறாக பல்வேறு உரிமைகள் சிறுவர்களுக்கு உண்டெனக் கூறப்படுகின்றது. பதினான்கு வயது வரையான வர்களை சிறுவர்களாக கணிப்பது நடைமுறையில் உள்ளது. பதினான்கு வயதிற்குப்பட்ட சகல பிள்ளைகளுக்கும் கட்டாயக் கல்வி வழங்கப்பட வேண்டும். இவ் வயதிற்குற்பட்டவரை வேலைக்கு அமர்த்தக் கூடாது. அவ்வாறு வேலைக்கு அமர்த்தினால் அது சட்டப்படி குற்றம்என வலியுறுத்தப்பட்டிருந்தது.

நமது நாட்டில் வளர்ந்து வரும் இளந் தலைமுறைக்காக வகுக்கப்பட்ட உரிமை தொடர்பாக கொள்கைகள் எந்தளவு நடைமுறையில் பேணப்படுகின்றது என்பதை ஆய்வு செய்யும் போது மிஞ்சுவது வேதனை மட்டுமே. கொள்கைகள் விதிமுறைகள் ஏடுகளில் மட்டுமே பேணப்படுகின்றனவே யன்றி செயல் முறையில் எதுவும் முழுமையாக

அமைவதில்லை. அதைப்பற்றி எவரும் சிந்திப்பதாயுமில்லை. பெற்றோர்களிடமிருந்து தம்மை தனிமைப் படுத்தாமல் இருப்பதற்கான எளிமை பற்றி சர்வதேசம் ஏற்றுக் கொண்ட கொள்கையுள்ளது. இன்று எம் நாட்டை எடுத்துக் கொண்டால் பெற்றோரை இழந்து அகதிகளாக, அநாதைகளாக பசி பட்டினியுடன் அகதி முகாம்களில் அநாதை விடுதிகளில் பலர் அல்லல்படுகின்றனர். கடத்தப்பட்டுக் காணமற் போன தமது தந்தையை தாயை மீட்டுத் தருமாறு கதறி ஏங்கும் பாலகர்களாக எத்தனை சிறுவர்கள் தமது கண்களில் கண்ணீரை சிந்தி கவலையுடன் வாழ்கின்றார்கள்.

குண்டுகளிலும் அடாவடித்தனங்களிலும் அகப்பட்டு உயிர் இழக்கும், உடலுறுப்புக்கள் இழக்கும் பெற்றோர்கள், சகோதரர்கள். உற்றார், உறவினர்களை இழக்கும் சிறு வயதினர் எத்தனை பேர்.

நிம்மதியான சொந்த வீடுகளில் வாழ முடியாத சிறுவர்கள் எத்தனை பேர்? குற்றவாளிகளாக பயங்கரவாதிகளாக சித்தரிக்கப்படும் பாலகர்கள் எத்தனைபேர்? பாலியல் வல்லுறவுகளுக்கும் வேறு வன்செயல்களுக்கும், ஆளாகும் இளம் வயதினர் எத்தனை பேர்? போதிய கல்வி வழங்காமல் தடுக்கப்படும் சிறார்களாக சித்தரிக்கப்படுபவர்கள் எத்தனை பேர்?

இது பற்றி ஆய்வை மேற்கொண்டு சிறுவர் உரிமைகள் தொடர்பாக கவனம் செலுத்த வேண்டும். இன்று உலகில் குறிப்பாக இலங்கையில் நடப்பதென்ன? இன, மத, மொழி வேறு பாடுகளுக்கு உரமூட்டி சிறுவர் மத்தியில் வேறுபாடுகள் துவேஷங்கள் வளர்க்கப்படுகின்றன. வளர்ந்து வரும் எம் நாட்டையும் சமுதாயத்தையும் உருவாக்க வேண்டியவர்கள் இன, மத, மொழி வெறியுடன் பல்வேறு துறைகளில் பொறுப்புக்கள் கொண்டோர் மக்களிடையே குரோதங்களை வளர்ப்பதில் முன்னணியாகச் செயற்படுகின்றர்கள்.

ஒற்றுமையாக பண்பை அகிம்சையை போதிக்க வேண்டிய குருமார்களே போதிக்க வேண்டியதற்கு எதிராக செயற்படுகின்றார்கள் இன்று வளர்ந்தோராகவும் வயோதிபராகவும் கணிக்கப்படுபவர்களின் சிந்தனையும் செயற்பாடும் இன்றைய தலைமுறையின் எதிர்கால நலனை சீர்குலைய வைப்பதாக அமைகின்றது.

நாளைய சந்ததியின் வளமான எதிர்காலத்திற்கும், நாட்டின் நலனுக்கும் மாறாக தடம்புரண்டும், வழிதவறியும் செயற்படுகின்றவர்களின் மூத்தோரின் சிந்தனையை மாற்ற வேண்டும்.

இதுவே சிறுவர் உரிமையை பேணவும் அவர்களின் எதிர்காலத்தை வளம் படுத்தவும் ஊன்று கோலாக இருக்கும். எனவே சிறுவர் உரிமையை பறிக்காது அவர்களை வளம்படுத்தவும் நாளைய தலைவர்களாக மாற்றுவோம் என்று கூறி எமது எதிர்கால வாழ்க்கையில் இலங்கை நாட்டின் நல்ல பழக்க வழக்க முள்ள மாணவர்களாக வாழ்வோம் என்று கூறி நிறைவு செய்கின்றேன்.

"இன்றைய சிறுவர்களே நாளைய தலைவர்கள்"

லோ. கஸ்தூரி
13B (கலை)

# விண்வெளித் தகவல்கள்

- 1957ம் ஆண்டு விண்வெளிக்கு லைகா என்ற உயிரினம் (நாய்) முதலாவதாக சென்றது
- விண்வெளியை முதலில் வலம் வந்தவர் யூரிககாரின்
- விண்வெளிக்குச் சென்ற முதலாவது பெண்மணி வலன்டீனா தெரஸ்கோவா
- ஞாயிற்றுத்தொகுதியின் மிகப்பெரிய கோள் வியாழன் இக் கோளுடன் 1994ம். ஆண்டு சூமேக்கர் செலவி - 9 எனும் வால் வெள்ளி மோதி 21 துண்டுகளாக உடைந்தது.

## புளுட்டோ பற்றிய சில தகவல்கள்

- புளுட்டோவைகக்வில்லியம் பிம்பாக் 1930 இல் கண்டுபிடித்தார்
- புளுட்டோ சூரிய குடும்பத்தின் வெளிவட்டக்கிரகமாகும்
- புளுட்டோ சூரியனை ஒருசுற்று சுற்றி வர 248.54 வருடங்கள் ஆகும்.
- இது 300 கீ. மீ விட்டமுடையது
- புளுட்டோவின் நிறை பூமியின் 1/500 மடங்கு ஆகும்
- புளுட்டோவின் மேல் மட்ட வெப்பநிலை 260 பரனைட் ஆகும்.
- சூரியனிலிருந்து புளுட்டோவின் சராசரி தூரம் 5970 மில்லியன் கிலோமீற்றர் ஆகும்.

## சந்திரனில் எப்படி ஒளி வீசுகின்றது

சந்திரன் பூமிக்கு மிகவும் அருகிலுள்ள ஓர் உபகோளாகும். பூமியானது தன்னைத்தானே சுற்றிக் கொண்டு சூரியனை வலம் வருவது போன்றே, சந்திரனும் பூமியை வலம் வந்து கொண்டிருக்கின்றது. எனினும் பூமிக்கும் சந்திரனுக்குமிடையே பாரிய வித்தியாச மொன்று உள்ளது. அதாவது பூமியைப் போன்று சந்திரனின் "ஓசோன்படலம்" இல்லாதிருப்பதே இந்த வித்தியாசமாகும். இதனால் தான் சந்திரனில் ஜீவராசிகள் குடியிருக்க கூடிய பாதுகாப்பான சூழ்நிலை இல்லை யெனக் கருதப்படுகின்றது.

பூமியிலிருந்து பார்க்கும் போது சந்திரனானது ஒளி வீசிக் கொண்டிருப்பதாகவே நமக்கு தெரிகின்றது. ஆனால் உண்மை அது வல்ல. சந்திரன், எந்த வொரு கட்டத்திலும்

ஒளி வீசுவதில்லை மாறாகச் சூரியனிலிருந்து கிடைக்கின்ற ஒளியானது. சந்திரனில் பட்டு அதன் ஒளித்தெறிப்பே சந்திரனிலிருந்து ஒளியாகப் பூமிக்கு வெளிப்படுகின்றது. பகலிலும் இந்த ஒளி நமக்குக் கிடைக்கவே செய்கின்றது. ஆனால் பகல் நேரங்களில் பூமிக்குச் சூரியனின் ஒளி நேரடியாகக் கிடைப்பதால் சூரிய ஒளியில் சந்திரன்ஒளி நமது கண்களுக்குப் புலப்படுவதில்லை.

## விண்கற்களின் பருமன்

விண்கற்களில் இருந்து வீசுகின்ற ஒளியினைக் கொண்டு அவற்றின் பருமனை கண்டறிய முடியும் என விஞ்ஞானிகள் தெரிவிக்கின்றனர். அவ்வாறே பூமியிலிருந்து குறித்த விண்கல் காணப்படும் தொலைவினைக் கொண்டும், நட்சத்திரத்தின் அருகாக இவை நகரும் போதும் இவற்றின் பருமனை கண்டறிய முடியும் எனவும் கருதப்படுகின்றது.

இதன்படி தற்போதைய கனியுப்புக்களின் படி சிரஸ் என்ற விண்கல்லே பாரிய விண்கல்லாக கண்டறியப்பட்டுள்ளது. இது 933 Km அதிகமான பருமனைக் கொண்ட விண்கல்லாக கருதப்படுகின்றது.

## வெள்ளிக்கோள்

- புவிக்கு மிக அண்மையிலுள்ள இக் கோளினை விடிவெள்ளி, மாலை வெள்ளி எனவும் அழைப்பர்
- வெள்ளி மிக மெதுவாக தன்னைத் தானே சுற்றும்
- ஒருமுறை தன்னைத்தானே சுற்றுவதற்கு 243 நாட்கள் எடுக்கின்றது
- சூரியன் அஸ்தமிப்பதற்கு முன்/ உதிப்பதற்கு முன் இதனைப்பார்க்கலாம்
- வெள்ளிக்கு அடர்த்தியான வளிமண்டலம் உண்டு
- பெருமளவு காபனீரொட்சைட் வாயுவைக் கொண்டுள்ள போதும் சிறிய அளவு பிராண வாயுவும், நைதரசனும் காணப்படுகின்றன.
- சோவியத் யூனியனும், ஐக்கிய அமெரிக்காவும் மனிதரில்லா விண் கலங்கள் பலவற்றை வெள்ளிக்கு அனுப்பி வருகின்றன.

## செவ்வாய்

சூரிய மண்டலத்தில் நான்காவதாக அமைந்துள்ள கோள் பூமிக்கு அருகிலுள்ள இதனால் சில இயல்புகள் பூமியை ஒத்துள்ளன. இதனை மார்ஸ் என ஆங்கிலத்தில்

அழைக்கின்றனர். யுரேனியர்களின் காலத்தில் யுத்தத்திற்குரிய தேவதையாக மார்ஸ் கருதப்பட்டது. இந்தத் தெய்வத்தை வணங்கினால் தங்களுக்கு பிரச்சினைகள் அற்ற நல்வாழ்வு கிடைக்கும் என்று அவர்கள் நம்பினார்கள். நைதரசன், காபனீர் ஒக்சைட் (பெருமளவில்) ஒட்சிசன் (சிறிதளவு) ஆகன் போன்ற மூலகங்களைக் கொண்டது. இக் கோளிலும் உயிரினங்கள் வாழக்கூடிய சூழ்நிலைகள் இல்லை. அதற்குக் காரணம் மிகவும் குறைந்த வெப்பநிலையும் அதிகளவு காபனீரொட்சைட்டும் காணப்படுகின்றமையே ஆகும்.

## சந்திரன் பற்றிய தகவல்கள்

- ✫ சந்திரன் பூமியின் ஒரேயொரு துணைக்கோள் ஆகும். சந்திரனில் முதன் முதலில் காலடி வைத்தவர் நீல் ஆம்ஸ்ரோங்
- ✫ 1969 - 07 - 20 அன்று நீல் ஆம்ஸ்ரோங் சந்திரனின் தரையில் கால் பதித்தார்.
- ✫ சந்திரனது திணிவு புவியின் திணிவில் 1/81 பங்கு ஆகும். சந்திரனால் புவிக்கு ஏற்படும் நன்மைகள் - வற்றுப்பெருக்கு சூரியகிரகணம். சந்திரகிரகணம் என்பனவாகும்
- ✫ சந்திரனின் சுழற்சிக்காலமும்,சுற்றுகைக் காலமும் சம அளவானது என்பதால் புவியை நோக்கி ஒரே தோற்றத்தில் காணப்படும்.

## மாறி வரும் உண்மைகள்

நமது கோள் மண்டலத்திற்கு அருகாமையிலுள்ள நட்சத்திரங்களைச்சுற்றி வர எந்தவொரு உபகோளோ, விண்கலமோ இல்லையென்றே நீண்டகாலமாக விண்வெளி ஆராய்ச்சியாளர்கள் கருதி வந்தனர். எனினும் இது தவறான கணிப்பு என்பது தற்போது உறுதியாகிவருகின்றது. நமது கோள் மண்டலத்திற்கு அருகாமையிலுள்ள வயதில் குறைந்த நட்சத்திரமாகக் கருதப்படும் "Au- mic" என்ற நட்சத்திரத்தைச் சுற்றி வரக் கோள்கள் சுற்றி வருவதாக விஞ்ஞானிகள் தற்போது கண்டுபிடித்துள்ளனர். இதன்படி அங்கு வியாழனைப் போன்று பாரிய அளவிலான கோள்களும் புளூட்டோவைப் போன்று அளவில் சிறிய தான கோள்களும் காணப்படுவதாகத் தெரியவந்துள்ளது.

எனவே இந்த ஆராய்ச்சிகளின் எதிர்காலப் பெறுபேறுகளின் போது நமது கோள் மண்டலத்தின் ஆரம்பம்குறித்த சில உண்மைகளையும் அறிந்து கொள்ளக் கூடிய வாய்ப்புக்கிட்டும் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

சா. கம்ஷியா
11A



2010 ம் ஆண்டு பரிசளிப்பு வி ழாவின் போது



2011ம் ஆண்டு இல்ல மெய்வல்லுநர் போட்டி நிகழ்வின்போது



2012ம் ஆண்டு தமிழ் விழாவின் போது

# தேடல் இயந்திரத்தின் வகைகளும் அதன் முக்கியத்துவமும்

தேடல் இயந்திரங்கள் வழிகாட்டும் நண்பனாக எமக்கு உதவிபுரிகின்றது. எந்த விடயங்கள் எமக்கு தேவையோ அந்த விடயங்களை முழுமையாகவும் பூரண விளக்கத்துடனும் உரிய பாதைகளையும் இவைகாட்டுகினறன. தேடல் இயந்திரங்களை நோக்கின்...

| | |
|---|---|
| Google | yahoo |
| Ask | Altavista |
| dog pile | Duck Duck go |
| bing | webopedia |
| yippy | lycos |

## Google

இது எளிமையான ஒரு தேடல் வகையாக காணப்படும். உலகளாவிய ரீதியில் எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டதும் முதல் இடத்திலும் எல்லோராலும் மிகவும் சுலபமாக பாவிக்கப்படுகின்றது. வேகம் கூடிய தேடல் இயந்திரமாக தொழிற்படுகிறது. கல்வி, புகைப்படம், புவியியல் திசைகள், பாடல்கள், கதைகள், வரலாறுகள், சமையல் முறைகள் அனைத்தும் தேடி வழங்கும் ஒன்றாக காணப்படுகின்றது.

| | |
|---|---|
| E- Mail | Google Chrome |
| Google Image | Google Video |

என்றவாறு பல்வகைப்படுத்தி தேடி எமக்கு தருகின்றது. 80% ஆனோர் இவ் தேடல் இயந்திரத்தை அதிகளவில் பயன்படுத்துகின்றனர்.

Google Sri Lanka

## Yahoo

இவ் தேடல் இயந்திரமானது இரண்டாவதாக காணப்படுகிறது. இது இணையத் தளம் புதியவர்களுக்கு மிகவும் பயனுள்ள தளம் உள்ளது. yahoo ஆனது செய்தித் தொகுப்பு. மின்னஞ்சல் பயண அடைவு மற்றும் பல விளையாட்டுக்கள் கல்வி தொடர்பான விடயங்களை எமக்கு தந்து உதவுகிறது.

YAHOO!

## Ask

இத் தேடல் இயந்திரமானது உலகில் அனைவராலும் ஏற்றுக் கொள்ளப் பட்டதாகவும் எளிதாகவும் பிறதேடல் இயந்திரத்தை விட நல்லதாக காணப்படுகின்றன.

Face Book | twitter
Youtube | Mail

என்பன இதில் அடங்குபவையாக காணப்படுகின்றது.

## Dog pile

இத் தேடல் இயந்திரமானது வேறு தேடல் இயந்திரங்கள் போல் சில ஆண்டுகளுக்கு முன்பு நல்லதாக இருந்தாலும் தெளிவற்றதாகக் காணப்பட்டதால் தற்போது பின்னோக்கி செல்கின்றது.

## Yippy

இத் தேடல் இயந்திரமானது சிலந்தி திட்டங்கள் மூலம் பழைய முறையில் காணபட்டமையும் கையாள்வது கடினமாகவும் காணப்படுகிறது 1.8% விதமானோர் இத் தேடல் இயந்திரத்தை பயன்படுத்துகின்றனர்.

## Alta Vista

இத் தேடல் இயந்திரமானது 1995ஆம் ஆண்டில் இணையத்தில் இணைக்கப்பட்டுள்ளது. Alta Vista உலகலாவிய வலை ஒரு பெரிய பகுதியாகவும் ஒரு முழு வகை தரவுக்கான தேடு பொறியாகவும் காணப்படுகின்றது. இது வாழ்க்கைக்கு இலவசமாக மின்னஞ்சல் வசதிகளை தரும் முதல் தேடல் இயந்திரம் ஆகும்.

**தேடல் இயந்திரத்தின் தரமானதை தவிர்ந்த வேறு தேடல் இயந்திரம்**

Ao1
blekko
wikipedia
search com
Good Search

My web Search
we crower
infor
Excite

A. ஜெனிஸ்ரன்
11A





**வடமாகாண டெங்கு ஒழிப்பு சிரமதான ஆரம்ப நிகழ்வு**





**மலேசியா பொம்சோ நிறுவன அதிகாரிகள்**
**கணனி அன்பளிப்பு செய்த போது**



**2012ம் ஆண்டு**
**ஒன்று கூடல் நிகழ்வு**




**2013ம் ஆண்டு**
**ஒன்றுகூடல் நிகழ்வு**

# தேசிய அடையாள அட்டையிலுள்ள ஒன்பது இலக்கங்களையும் கொண்டு பிறந்த திகதியைக் கணிக்கும் முறை

தேசிய அடையாள அட்டை இலக்கம்

**963430680** ஆண்

1. எண்களின் முதல் இரு இலக்கங்களும் பிறந்த ஆண்டினைக்குறிக்கும்

   உ.ம் :- 96

2. முதல் இரு இலக்கங்கள் தவிர்ந்த அதற்குப் பின்னால் உள்ள மூன்று இலக்கங்களும் பிறந்த மாதம் திகதியைக் குறிப்பனவாகும்

   உ.ம் :- 343

   343 எனும் எண்ணை 30 எனும் எண்ணால் வகுத்து பெறப்படும் ஈவு மீதியை நோக்குதல் வேண்டும் மீதி ஏற்படும் போது ஈவுடன் 1ஐக் கூட்டினால் பெறப்படுவது பிறந்த மாதம் ஆகும்

```
      11
  30| 343
      30
        43
        30
        13
```

   மீதி கிடைப்பதனால் ஈவுடன் 1ஐக் கூட்டும் போது (11+ 1) = 12 பெறப்படும் ஆகவே இந்நபர் மார்கழி மாதம் பிறந்துள்ளார்.

3. ஈவு மாதங்களைக் குறிப்பதனால் மாதங்களில் நாட்களைக் கூட்டி பெறப்படும் விடையை மாதம் கணிக்கும் மூன்று இலக்கங்களிலிருக்து (உ.ம் :- 343 ) கழிக்க வரும் விடை திகதி ஆகும்

| | |
|---|---|
| தை | 31 |
| மாசி | 29 |
| பங்குனி | 31 |
| சித்திரை | 30 |
| வைகாசி | 31 |

| | |
|---|---|
| ஆனி | 30 |
| ஆடி | 31 |
| ஆவணி | 31 |
| புரட்டாதி | 30 |
| ஐப்பசி | 31 |
| கார்த்திகை | 30 |
| | 335 |

=343 - 335
=8

இந் நபர் 8 ம் திகதி பிறந்துள்ளார்
இவரின் பிறந்த திகதி
08.12.1996

உ ம் :-

தேசிய அடையாள அட்டை இலக்கம்
975150410 பெண்
பிறந்த ஆண்டு :- 97
பிறந்த மாதம் காணல் :- 515
இம் மூன்று இலக்கங்களும் பெண்களிற்கு மட்டும் 500 ற்கு மேலாக அமையும்

உ ம் :- 515-500 :- 015

$$30\overline{)015}\quad 0$$

0 + 1 :- 01ம் மாதம்
திகதி :- 15ம் திகதி
பிறந்த திகதி :- 1997.01.15

சு. ரேமிஜா
10D

# ஒருவரின் வயதை உடனடியாக கண்டுபிடிக்கும் முறை

இந்த அட்டவணை முறை மூலம் கண்டுபிடிக்கலாம் அதாவது ஒருவர் தனது வயதை இவ் அட்டவணையிலுள்ள ஆறு நிரல்களிலும் உள்ளது எனக்கூற வேண்டும் அவவளவு தான் உடனே வயதைக்கண்டுபிடிக்க முடியும்

உ ம் :-

| 1 | 2 | 4 | 8 | 16 | 32 |
|---|---|---|---|---|---|
| 3 | 3 | 5 | 9 | 17 | 33 |
| 5 | 6 | 6 | 10 | 18 | 34 |
| 7 | 7 | 7 | 11 | (19) | 35 |
| 9 | 10 | 12 | 12 | 20 | 36 |
| 11 | 11 | 13 | 13 | 21 | 37 |
| 13 | 14 | 14 | 14 | 22 | 38 |
| 15 | 15 | 15 | 15 | 23 | 39 |
| 17 | 18 | 20 | 24 | 24 | 40 |
| (19) | (19) | 21 | 25 | 25 | 41 |
| 21 | 22 | 22 | 26 | 26 | 42 |
| 23 | 23 | 23 | 27 | 27 | 43 |
| 25 | 26 | 28 | 28 | 28 | 44 |
| 27 | 27 | 29 | 29 | 29 | 45 |
| 29 | 30 | 30 | 30 | 30 | 46 |
| 31 | 31 | 31 | 31 | 31 | 47 |
| 33 | 34 | 36 | 40 | 48 | 48 |
| 35 | 35 | 37 | 41 | 49 | 49 |
| 37 | 38 | 38 | 42 | 50 | 50 |
| 39 | 39 | 39 | 43 | 51 | 51 |
| 41 | 42 | 44 | 44 | 52 | 52 |
| 43 | 43 | 45 | 45 | 53 | 53 |
| 45 | 46 | 46 | 46 | 54 | 54 |
| 47 | 47 | 47 | 47 | 55 | 55 |
| 49 | 50 | 52 | 56 | 56 | 56 |
| 51 | 51 | 53 | 57 | 57 | 57 |
| 53 | 54 | 54 | 58 | 58 | 58 |
| 55 | 55 | 55 | 59 | 59 | 59 |
| 57 | 58 | 60 | 60 | 60 | 60 |
| 59 | 59 | 61 | 61 | 61 | 61 |
| 61 | 62 | 62 | 62 | 62 | 62 |
| 63 | 63 | 63 | 63 | 63 | 63 |

A என்பவரின் வயது 19 என வைத்துக் கொள்வோம் அவர் தனது வயதை வெளியில் எவருக்கும் கூறக்கூடாது A தனது வயதை எந்தெந்த நிரல்களுக்குள்ளே இருக்கின்றது என்பதை மட்டும் B என்பவருக்கு கூறவேண்டும்

பின்னர் B என்பவர் 1வது நிரையிலுள்ள A கூறும் நிரல்களின் எண்களை மட்டும் கூட்டி வயதைப் பெறலாம்

கணிக்கும்முறை :-

| | | |
|---|---|---|
| 1வது நிரலின் முதல் எண் | 1 | 19 என்ற எண் உள்ள நிரல்கள் |
| 2வது நிரலின் முதல் எண் | 2 | |
| 5வது நிரலின் முதல் எண் | 16 | |
| | 19 | |

இந் நிரைகளின் இலக்கங்களை கூட்ட $(1+2+16)$ 19 என்ற வயது பெறப்படும்.

இ. டெலக்சன்
11D

# ஆரம்பித்த எண்ணை மீண்டும் கிடையாகப் பெறல்

உ+ம் :-

1. மூவிலக்க எண் ஒன்றைப் எழுதுக
   உ+ம் :- 275

உ+ம் :-

2. இவ் எண்ணை மீள எழுதுவதன் மூலம் 6 இலக்க எண்ஒன்றை ஆக்குக
   275 275
3. இவ் எண்ணை 7ஆல் வகுக்க 275275÷ 7 =39325
4. வரும் எண்ணை 11 ஆல் வகுக்க 39325 ÷11= 3575
5. வரும் எண்ணை 13 ஆல் வகுக்க 3575÷ 13 = 275
   ஆரம்பித்த **275** என்ற எண் மீண்டும் வருகின்றது

உ+ம் :- a. 374

b. 374374

c. $\frac{374374}{7} = \frac{53482}{11} = \frac{4862}{13} = 374$

ர. சஞ்சீவன்
6A

# எண்களுக்கிடையில் உள்ள பெருக்கல் தொடர்பு

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 12 | x | 8 | + | 2 | = | 98 |
| 123 | x | 8 | + | 3 | = | 987 |
| 1234 | x | 8 | + | 4 | = | 9876 |
| 12345 | x | 8 | + | 5 | = | 98765 |
| 123456 | x | 8 | + | 6 | = | 987654 |
| 1234567 | x | 8 | + | 7 | = | 9876543 |
| 12345678 | x | 8 | + | 8 | = | 98765432 |

ர. ருசிக்கா
10A

# நிரைகள் 3ஐயும் நிரல்கள் 3ஐயும் சேர்க்கும் போது பெறப்படும் சதுரத்தின் கூட்டுத் தொகை கூட்டாமற் பெறும் முறை

| M | T | W | T | F | S | S |
|---|---|---|---|---|---|---|
| | | 1 | 2 | 3 | 4 | 5 |
| 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 |
| 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 |
| 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 |
| 27 | 28 | 29 | 30 | 31 | | |

A
B

*இந் நாட்காட்டிச் சதுரக் கோடிட்ட எண்களைக் கூட்டாமலே விடை* ***144*** *பெறப்படும் A கூட்டில் அதாவது கூட்டின் 1வது எண்ணுடன் 8ஐ கூட்டி வரும் எண்ணால் 9ஐப் பெருக்க வேண்டும்.*

(8 + 8) x 9 = 144

கூட்டும் போது 8 + 9 + 10 + 15 + 16 + 17 + 22 + 23 + 24 + = 144

B. கூட்டில் (13 + 18) x 9 = 189

உ+ம் :- கூட்டும் போது 13 + 14 + 15 + 20 + 21 + 22 + 27 + 28 + 29 = 189

கி. பவிந்தா
11A

# Importance of English Language

Language plays and important role in human life. Out of all languages in the world English is considered as the international language. There are some reasons why English is so important and many people attempt to learn it . I'd like to share the reasons in my point view. Sri Lanka is a developing country and everyone has to learn English because today everything seems to be English. When we consider about education in Sri Lanka, children are forced to learn English. Starting at pre school in order to make their English better.

English is added as a Compulsory Subject in O/Level examination and in A/Level examination. In Sri Lanka universities conduct almost all the studies through English medium. After completing a university degree it's time to take up a professional course and of course those professional courses are in English medium. So I think you must have a very good Knowledge of English to be educated and shine in the society.

The next fact I'm showing with you is finding a job in this competitive society. Every boss is looking for qualified, talented, smart and confident employees. For example, if you apply for a high class job and when you go for interviews, do you know what kind of employees are going to be hired up? Obviously as I mentioned above, qualified, talented, smart and confident employees with fluent English.

Why English is important to find a job? Because we already know that people deal with others in English language, especially in the business world. So what my point here is that you can't get a pretty good job or a promotion without knowing proper English. How do we communicate with other people in foreign countries? Who do not speak our mother tongue? The answer in using English because everyone at least a little English helps to raise up tourism because it is easy to communicate with the foreigners.

Just think about how hard world it be to keep tourism in each country. If tourist guides and the tourists didn't know at least a little English. English language makes the things go easier that's what I think Book! A massive quantity of books are written in English language so you must know the English language to gain some knowledge. So

that foreigners can read and enjoy and on the other hand foreign book which are not written in English are translated to English language. So that anyone who knows English well can read those books too.

The final reason is internet. All most all the information are stored on the internet is in English. So you must know better English to understand what is it all about and also to communicate other people via internet. In conclusion , I must tell this, if you want to go ahead in your life and in your stream you should learn English so that it would be easier to reach your achievements. That is how English plays a major role in our life.

**Miss. P.Kunarasa**
*12A 2013 (Arts)*

A child becomes an adult when he realizes that he right not only to right but also to be wrong.

Thomas Szasa

We read that we ought to forgive our enemies; but we do not that we ought to forgive our friends.

Cosimo de Medici

Love is strong as death; jealously as the grave.

Bible

It is better that guilty persons escape than one innocent suffer.

William Blackstone

It is better to die on your feet than to live on your knees

Dolores Ibarruri

We all labour against our cure, for death is the cure of all diseases

Thomas Browne

On earth there is nothing great but man; in man there is nothing great but mind.

William Hamilton

Education is the acquisition of the art of utilizing knowledge.

Alfred North Whitehead

# ஜான் நேப்பியர்

ஸ்காட்லாந்து நாட்டிலுள்ள எடின்பார்க் நகரின் அருகே அமைந்துள்ள "மெரிசிஸ்டன் காஸில்" எனும் இடத்தில் 1550 ஆண்டு பிறந்தார். இவர் ஒரு கணித மேதை ஆவார். ஜான்நேப்பியர் 13 வயதில் ஆண்ட்ரூஸ் எனும் பல்கலைக்கழகத்தில் சேர்ந்து அங்கு பட்டம் எதுவும் பெறாமலே அக் கல்லூரியை விட்டு விலகினார். இவருக்கு 1572இல் திருமணம் நடைபெற்றது.

நேப்பியர் ரோம் நகரிலுள்ள தேவாலயம் பற்றிய நூல் ஒன்றை எழுதியுள்ளார். இவர் கிறிஸ்தவ சமயத்தில் அதிக நம்பிக்கை கொண்டிருந்தார். இவர் தன்னுடைய பெரும்பாலான வாழ்க்கைக் காலத்தைக் கணித ஆராய்ச்சியிலே செலுத்தினார். அதன் பயனாக கூட்டல், கழித்தல், வர்க்கமூலத்தைக் கண்டறிதல் போன்றவற்றிற்கு பயன்படும் கருவி ஒன்றை கண்டுபிடித்தார். அக்கருவியானது அவரது பெயரிலேயே "நேப்பியர்ராடு" என அழைக்கப்படுகிறது.

கணித உலகின் முக்கியமான ஒரு பிரிவாக கருதப்படும் மடக்கையை கண்டு பிடித்தார். மடக்கையின் மூலம் மடக்கை விதிகளையும் மடக்கை அட்டவணையையும் நேப்பியர் உலகிற்கு அறிமுகப்படுத்தினார். நேப்பியர் தான் அறிமுகப்படுத்திய மடக்கை விதிகளை பின்ன எண்கள், அதிக இலக்க எண்கள் போன்றவற்றை பெருக்குவதற்கும் வகுப்பதற்கும் பயன்படுத்தினார். அதன் மூலம் கணித்தல்களை விரைவாகவும் எளிதாகவும் கண்டறிந்தார்.

நேப்பியரின் மடக்கை அட்டவணை பெரும்பாலான கணக்கு வழக்குகளில் பயன்படுத்தப்பட்டது. குறிப்பாக கணிப்பொறி அறியப்படுவதற்கு முன்னராக உலகில் பயன்படுத்தப்பட்டது. இன்றும் உலகெங்கிலுமுள்ள பாடசாலைகளில் மடக்கை விதிகளும், மடக்கை அட்டவணைகளும் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. ஏனெனில் மடக்கை அட்டவணையைப் பயன்படுத்தி கணித்தல்களில் பெறுபேறுகளை காண்பது மிக இலகுவாக காணப்படுகின்றதோடு சிக்கனமானதாகவும் காணப்படுகின்றது.

கணித உலகிலே ஒரு திருப்பத்தை ஏற்படுத்திய பெருமை நேப்பியருக்கே உரியதாகும். நேப்பியரால் கண்டுபிடிக்கப்பட்ட மடக்கை விதி அவரது பெயரிலேயே அழைக்கப்படுகின்றது.

க. பபிதா
11A






2013 ஆண்டு மாகாண மட்டத்திற்கு
தெரிவு செய்யப்பட்ட மெய்வல்லுநர் அணி

பாடசாலை பாண்ட்வாத்திய அணி





இல்ல மெய்வல்லுநர் போட்டியை முன்னிட்டு
வீதியோட்ட, சைக்கிளோட்ட நிகழ்வுகள்






2009 ஆண்டு
ஆங்கில தின நிகழ்வுகளில் ஒரு காட்சி

வாணிவிழா நிகழ்வு

# Unity is Strength

'Unity is Strength' Unity means oneness or togetherness. When there is oneness there is likely to be more strength in opinion, more strength in action, and more strength in character. For example, if you take a stick it could break easily but when you take a bundle of sticks it is hard to break. This is the unique power of unity. One very good example is this 'Elocution Contest' .All the Rotarians are united in their stand they work hard to make this elocution a success.

Let us first discuss the smallest unit of our society. A family indicates oneness they live together, they work together they enjoy together, they share their woes together, and this is the basis strength of the unity. Parents encourage their children to mix freely with their peers of other races and religions. Let us move on to the position of the county . Malaysia is a multiracial country. They live in relative racial harmony. Unity among the various races is vital for the progress of the nation as the saying goes, 'United we stand divided we fall'.

Races of Malaysia holding their hands together. All of them Malays, Chinese, Indians and other ethnic groups. Everyone of us must have heard the well known proverb 'Unity is strength'. No country which is run by internal dimensions and divisions can stand against enemies. Division and lack of unity always ends in disaster. Every body knows perfectly well that one thread is easily broken and when threads are united into a rope, they cannot be broken easily . It is correct to say that we cannot face our enemies single handed as successfully as we can when we are the members of a group or an association. For example, the workers association, the clerks association and the motor driver's association etc.

What is true in the case of kings and states is also true in the case of an ordinary man. Everybody knows well the famous story of on old man whose sons could not break a bundle of sticks but were successful in breaking the sticks when they were separated. This clearly proves that 'Unity is strength' and ' united we stand and divided we fall'.

**Suganiya**
*13A 2014 (Arts)*

# வர்த்தகத் துறையில் தகவல் தொழில் நுட்பத்தின் ஆதிக்கமும் அதன் நன்மைகளும்

இன்றைய நமது பிரபஞ்சத்தினைத் தகவல் தொழினுட்பமானது மிக விரைவாக ஆக்கிரமித்துக் கொண்டுவருகின்றது. இத் தகவல் தொழினுட்பம் காரணமாக உலகமானது இலக்கமுறைக் காலகட்டத்தினை அடைந்து வருகின்றது. இந் நிலையில் எந்தத் துறையினை எடுப்பினும் அவை இத் தொழில் நுட்பமின்றி இயங்குவது கடினமாகவேயுள்ளது. அந்தளவுக்கு சமூகத்திற்குப் பல்வேறுபட்ட சேவைகளை இத் தகவல் தொழினுட்பமானது வழங்கி வருகின்றது. இவற்றுள் சமூகத்தின் மிகவும் முக்கியமான துறைகளான விவசாயம், கைத்தொழில், அரசு, மருத்துவம். சுகாதாரம், கல்வி, வர்த்தகம் போன்ற துறைகளிற்கு தகவல் தொழினுட்பம் வழங்கும் சேவை அளப்பரியது.

இருப்பினும் வர்த்தகத்துறையினரைப் போன்று தகவல் தொழினுட்பத்தினைப் பயன்படுத்துவோர் வேறொருவரும் இல்லை என்றே குறிப்பிடலாம். அந்தளவுக்கு வர்த்தகமும், தகவல் தொழினுட்பமும் பின்னிணப்பிணைந்து காணப்படகின்றது. இந்நவீனயுகத்தின் பொருட்கள், சேவைகளை உற்பத்தி செய்வதிலிருந்து கொள்வனவு செய்வது வரையான சகல நடவடிக்கைகளினையும் தகவல் தொழிநுட்பத்தின் உதவி கொண்டே வர்த்தகர் கட்டுப்படுத்துகின்றனர். இதனையே இலத்திரனியல் வர்த்தகம் என (E - Commerce) அழைப்பர். தற்போதைய காலகட்டத்தில் பொருட்கள், சேவைகளின் கொள்வனவு, விற்பனை போன்றன நடைபெறும் இடம், சந்தை இடம் (Market place) என்ற நிலை மாறி சந்தை வெளி (Market space) என்ற நிலைமைக்கு மாறி வருகின்றது. இத்தகைய மாற்றங்களிற்கான காரணம் வர்த்தகத்தில் தகவல் தொழினுட்பத்தின் ஆதிக்கமே ஆகும்.

இத்தகைய ஆதிக்கத்தின் மூலம் இன்றைய வர்த்தக உலகமே துரித கதியில் வளர்ச்சியடைந்து கொண்டு வருகின்றது. இணையத்தைப் பயன்படுத்தி வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடுவதனால் வர்த்தகர்கள் பல்வேறுபட்ட நன்மைகளினைப் பெற்றுக் கொள்கின்றார்கள்.

இவ்வாறான நன்மைகளினை நோக்குவோமேயானால் தகவல் தொழினுட்பத்தினூடாக வர்த்தகர்கள் இருந்த இடத்திலிருந்து சர்வதேச ரீதியில் பொருட்களின் விலைகளினை ஒப்பீடு செய்து, அவ்விலைகளிற்கேற்ப பொருட்களின் கொள்வனவு, விற்பனை நடவடிக்கைகளில் ஈடுபடலாம். அதுமட்டுமல்லாமல் தமது உற்பத்திகளினை விற்பனை செய்வதற்காக தமக்கென ஒரு இணையத் தளத்தினை அமைத்துக் கொண்டு அதன் மூலம் தமது பொருட்கள், சேவைகளினை விற்பனை செய்யவும், அவற்றிற்கான விளம்பரப்படுத்தல்களினை மேற்கொள்ளவும் முடியும்.



DSI கரப்பந்தாட்ட சுற்று போட்டிக்கு
தேசிய மட்டத்தில் இரு முறை பங்கு பற்றிய அணி



2012ம் ஆண்டு மாகாணமட்டத்திற்கு
தெரிவு செய்யப்பட்ட மெய்வல்லுநர் அணி





விஞ்ஞான தின நிகழ்வு - 2012




Interact கழகத்தின்
இறுவட்டு வெளியீட்டு நிகழ்வு



கோட்ட மட்ட பரிசளிப்பு விழா

இணையத்தினூடாக வியாபாரக் கொடுக்கல் வாங்கல்களினை மேற்கொள்வது மிகவும் பாதுகாப்பானதும், இலகுவானதுமான ஒரு வழிமுறையாகும். எந்த நேரத்திலும் இணைய வர்த்தக சேவை வழங்கப்படுவதால் வர்த்தகர்கள் எந்தவொரு நேரத்திலும் வியாபாரத் தகவல்களைத் தேடல் செய்யவும், கருத்துக்களைப் பரிமாறிக் கொள்ளவும், பொருட்களிற்கான கொள்வனவுக் கட்டளையினை இடவும் முடியுமாயுள்ளது. அது மட்டுமல்லாமல் கொள்வனவுக் கட்டளை பிறப்பிக்கப்பட்ட பொருட்களிற்கான கொடுப்பனவுகளினை இலத்திரனியல் பணத்தினைப் (E - money) பயன்படுத்தி மேற்கொள்ளக் கூடியதாகவும் உள்ளது.

இவ்வாறாகவே வர்த்தகத் துறையில் தகவல் தொழினுட்பம் ஆதிக்கம் செலுத்தி பலதரப்பட்ட அனுகூலங்களினை ஏற்படுத்திக் கொண்டிருக்கின்றது. இத்தகைய நன்மைகளினை நாமும் அனுபவித்து சிறப்புற வாழ்வோமாக.....

சி. தேனுஷா
12 (வர்த்தகம்)

## சமுதாயச் சிற்பிகள்

மானிட விடியலுக்காய்
மெழுகு வர்த்தி போல
உருகி உருகி ஒளியேற்றிக்
கொண்டிருக்கும் தீபங்களே!

மாணவர்களின் எதிர்கால
வாழ்விற்காய் ஏணிப்படிகளாகிய
ஆசிரியப் பெருந்தகைகளே!

சமுதாயச் சிற்பிகளே
உங்கள் செயல் சிறக்க
வாழ்த்துகிறோம்
உங்கள் செயல்களுக்கு
தலைவணங்குகிறோம்

வாழி உன் பணி
வாழி உன் புகழ்
என்றென்றுமே.

நா. ஜீவந்திகா
13B (கலை)

# தொலை தூரத்துக் கனவுகள்

போதாது இரத்தம்
இன்னும் கொஞ்சம் கொண்டுவா
பூர்த்தி செய்ய வேண்டும்
பூமியின் வரைபடத்தை
இது கொள்கை வாசகம்
ஆனால் மாறும் தமிழர்
உணர்வின் மரண யாசகம்.

பல பௌர்ணமிகளைச் சேமித்தோம்
ஒரு விடிவெள்ளி படைக்கவென்று
ஆனால் தேசத்தின் சோகக் கொடி பறக்க
எமக்கே தெரியாமல் இன்று நாம்
அமாவாசைகளையல்லவா சேமித்துக்
கொண்டிருக்கின்றோம்.

வேரில் தீப்பற்ற
பூக்களை எதிர்பார்ப்புடன் தேடும்
வண்டுகளாய் இன்று நாம்
ஏக்கங்களுடனேயே
இறந்து கொண்டிருக்கிறோம்
விடுதலை இல்லாத கைதிகளாய்

காலத்துடன் தீயாய் எரியும் கனவுகளை
நனவாக்க எம்மால் முடியவில்லை
இன்று புதைக்கும் தீயை சுவாசித்தபடி
வெளியே ரணம் தெரியாமல்
புன்னகை பூசிக் கொண்டல்லவா இருக்கிறோம்.

தலைகீழாய் பிறந்தவன் தான் மனிதன்
ஆனால் இன்று எம் விதியும்
எம்முடன் தலைகீழாகவே;
"சரித்திரம் என்றோ ஒருநாள்
மீளவும் திரும்பும்"- சொல்வார்கள்
ஆனால் ஒரு பக்கமல்லவா அது
திரும்பிக் கொண்டிருக்கிறது

ஏனோ தெரியவில்லை
தொலை தூரக் கனவுகளுடன்
மடிந்தும் மடியாமல் நம் பூமி
விடிந்தும் விடியாமல் நம் வானம்!
எம் கனவுகள் நனவாக
நாட்கள் தேவையில்லை!
ஏக்கத்துடன் தீப்பிடித்தெரியும்
எம் தொலைதூரக் கனவுகளை
நிஜங்களாக்கி நாமும்
நிழல்களின் மத்தியில்
வரலாறு செய்வோம்.

ச. தனுசியா
13 (விஞ்ஞானம்)

# உழைப்பின் மகத்துவம்

மேகத்தின் வியர்வை
கடல்சிப்பிக்குள் விழுந்து
முத்தாகிறது
உழைப்பாளியின் வியர்வை
காலச் சிப்பிக்குள் விழுந்து
வாழ்வாகிறது

கல்லையும் கரைப்பாள் பெண் ஆனால் - தோழனே
சிறுதுகளையும் மாமலையாக வடிக்கும் வல்லமை பெற்றவன் நீ
உன்னை உறங்காமல் உழைக்கச் சொல்லவில்லை
உழைப்பில் உறங்கிவிடாதே என்று உரைக்கின்றேன்

நீ உழைப்பில் உயர முதலீடாக
அந்தக் கலைவாணியும் வீணையை
அடகு வைப்பாள்

உழைப்பின் மகத்துவத்தை
உலகறியச் செய்ய
ஊன்றுகோலாய் இருப்பவன்
உன்னதமான உழைப்பாளியே......

க. பதுர்ஷா
10A

# காலத்தால் அழியாத கல்வி

காலம் பார்த்து வயலில் விதைத்த பின்பு
பச்சைப் பசுமையான இயற்கையை தோற்றுவிப்பது போல்
இங்கிதம் பார்த்து சிறுபிள்ளை மனதில் விதைத்த கல்வி
மனதை எத்தனை கூறுபோட்டாலும் காலத்தால் அழியாது

உளி கொண்டு செதுக்கிய சிற்பம் நிலைத்து நிற்பது போல்
எழுத்தாணி கொண்டு எழுதிக் கற்கும் கல்வி காலத்தால் அழியாது
கடும் காற்றிலும் பறக்காது கடும் மழையிலும் கரையாது
நெடுந்தீயிலும் எரியாது நீகற்ற கல்வி காலத்தாலும் அழியாது.

கு. விதுஷா
10A

# நட்பு

*நட்பெனும் பூங்காவில் நாம் நடந்த*
*நாட்கள் மட்டுமல்ல*
*நாழிகைகள் கூட இனிமையானவை*
*காலத் தடயங்கள் அழியலாம்*
*காலத்தால் அழிக்கப்படாத*
*இனிய காவியம் நட்பு*

நட்பெனும் குழந்தை
நடைபழகி, உடையணிந்து, அழகாய்
உலாவருவது பள்ளியிலே
மதில்களும் மரங்களும் மைதானம் மட்டுமல்ல
கைத்தொலைபேசியும் சொல்லும் நம்நட்பின் ஆழத்தை

*நல்ல நண்பர்களாய் நாமிருந்தோம்*
*கல்லூரிச்சாலையில் கதைகள் கூறி நடை பழகினோம்*
*கைத்தொலைபேசி கூட என்னோடு சேர்ந்து*
*உறக்கம் கலைந்தது உனக்காக*

*அன்னியரின் அர்த்தமற்ற வார்த்தைகளில்*
*அர்த்தம் கண்டாய் நீ - பிரிந்து சென்றாய்*
*நீ மட்டுமல்ல உன் தொலைபேசி கூட*
*என் அழைப்பை ஏற்க மறுத்தது*
*நினைவுகள் உள்ளவரை*
*நிலையற்றவை பிரிவுகள்*
*நட்பின் அர்த்தம் அறிந்து*
*அழைப்பாய் என ஏங்கும்*
*ஒரு நண்பன்.*

வி. சஞ்சீவன்
13A (கலை)

# வாழ்வோம்

தாயின் வயிற்றில் இருந்து தரணியில்
பிறந்தோம் - வாழவென வடிவெடுத்தோம்
துன்பங்கள் பல கண்டும் சோராது
போராடி தமிழுக்காய் வாழ்வோம்

எதிரிகள் படை சூழ்ந்தபோதும்
தலைநிமிர்ந்து போராடினோம்
நாடெல்லாம் தமிழர் வாழ
தமிழ் நாட்டில் தமிழ் சாய்வதா

தமிழ் தலை தூக்க தமிழருக்காய்
போராடி விண்மேகம் இடிமுழங்க
தமிழ் முரசு கொட்டிடுவோம்
தமிழை வாழ வைத்திடுவோம்

ஆண்டாண்டு காலமாய் அரசர்
காத்த அருமொழி அழியாது அண்டமெல்லாம்
அழகுக் கோலமிட்டு ஆடித்திரிய ஆணையிட்டு
ஆண்டிடுவோம் - தமிழ் மக்களாய் வாழ்வோம்.

ஜெ. ஜெயலஷ்மி
13A (கலை)


# சிந்தனை விருந்து

| | |
|---|---|
| அடக்க முடியாதது | ஆசையும் தூக்கமும் |
| அழிவைத்தருவது | பொறாமையும் கோபமும் |
| அழிக்க முடியாதது | கல்வியும் ஞானமும் |
| இருக்க வேண்டியது | அமைதியும் நிதானமும் |
| உடன் வருவது | பாவமும் புண்ணியமும் |
| எல்லோருக்கும் சமமானது | பிறப்பும் இறப்பும் |
| கடைத்தேற வழி | பக்தியும் தியானமும் |
| வணங்கத்தக்கவர்கள் | தாய், தந்தை, குரு |
| மிக மிகப் பெரிய வெகுமதி | மன்னிப்பு |
| மிக்க கொடிய நோய் | பேராசை |
| ஆபத்தை விளைவிப்பது | அதிக கோபம் |
| உயர்வுக்கு வழி | உழைப்பு |

## கல்லூரி தாயே........

அழியாச் செல்வமதை
அள்ளி வழங்குகின்ற
அருமறையே
என்றென்றும் அன்பாய்
நின்மடியில்
அரவணைக்கும் அருள் விளக்கே
மூவுலகும் போற்றி நிற்கும்
முக்கனியின் சாறே
தேனே! என்றும் அழியாத
அறிவுச் சுடரேற்றும்
அருங்கலையின் இருப்பிடமே
நினைத் தொழுதேன்
உன் பாதம்
பணிந்தேன்
அறிவுப் பசியோடு
அடைக்கலமானவரை
அன்பால் அரவணைத்தாய்
கல்விச் சுடரேற்றிக்காத்தாய்
கவின் கலைகள் பற்பலவும்
கொடுத்தாய் குவலயத்தில்
குன்றிலிட்ட தீபமாய்
ஒளிர்ந்தாய் - என்றும்
கீர்த்தியால் உயர்ந்தாய்
கிறிஸ்தவ கல்லூரியே
உன் புகழை பாட வார்த்தையில்லை
முடிவில்லை உந்தன்
மூட்டும் திருப்பணிக்கு
கலையே கல்லூரித்தீபமே
கலங்கரை விளக்கே
காலமெல்லாம் நினைத்தொழுதேன்
நின்புகழைப் பாடி பரவுகின்றேன் தினம்

துர்ஷிகா
13 (விஞ்ஞானம்)



## ஒழுக்கத்தைப் பேணிப் பாதுகாப்போம்

ஒழுக்கத்தின் மறுபக்கம் என்ன?
பாதுகாப்பின் அடையாளம் தான் என்ன?
ஒழுக்கமாய் இருப்பவரே
உமது பக்கங்களின் சாயலை
எமக்கும் காட்டுங்கள்

யாழ்பாடி வென்ற நகர் யாழ்ப்பாணம்
இங்கே ஒழுக்கங்கள்
முகாரி பாடி ஊர்வலம் போகுதெங்கே?

பெற்றெடுத்தவளே தன் சிசுவைப்
புதைத்து வைத்தால்
ஒழுக்கந்தான் எங்ஙனம்
பாதுகாக்கப்படும்?
பாதுகாப்புத்தான் எங்ஙனம்
உயிர் வாழும் இம்மண்ணில்

மாணவர் தம் ஒழுக்கத்தை மார்பினிலே
சுமந்திட்டால் மாலைகள்
அவர் தோள் சேரும்

ஒழுக்கத்தைப் பேணி
பாதுகாப்பை உறுதிப்படுத்தி
பாரினிலே உயர்ந்திடுவோம் வாரீர்.

சி. அஜிதா
13A (கலை)




விஞ்ஞான தின நிகழ்வு



சாயி நிறுவன உதவிபெறும்
மாணவர்கள்



கோப்பாய் பிரதேச செயலக முதியோர்
தின நிகழ்வில் எமது மாணவர்கள்



சித்திரபோட்டியில் 1ம் இடம் பெற்ற சித்திரம்



கால்கோள்விழா - 2013



ஆசிரியர் தின பட்டி மன்றம் - 2012

# பொது அறிவு

| | |
|---|---|
| மனிதனால் முதன் முதலில் கண்டுபிடிக்கப்பட்ட உலோகம் | - தாமிரம் |
| செயற்கை கண்களை அதிகம் தயாரிக்கும் நாடு | - ரஷ்யா |
| ஒஸ்கார் விருதைப் பெற்ற பொம்மை | - மிக்கிமவுஸ் |
| பி.பி.ஜி தடுப்பூசி எதற்கு எதிரானது | - காசநோய் |
| பத்திரிகையில் வெளிவந்த முதல் தொடர்கதை | - டேவிட் காப்பர் பீட் |
| மனிதனுக்கு அடுத்தபடியாக அறிவுத்திறன் கூடிய விலங்கு | - சிம்பன்சி |
| உலகிலே அதிகளவு மக்களால் சாப்பிடப்படும் பழம் | - திராட்சை |
| உலகிலே உள்ள அனைத்து மக்களும் சாப்பிடும் பொதுவான முதல் உணவு | - பாண் |
| உலகிலே சிலந்திப் பூச்சிகள் அதிகம் உள்ள நாடு | - லியானா |
| உலகிலேயே இரத்ததானத்தை முதலில் தொடங்கிய நாடு? | - இங்கிலாந்து |
| உலகில் முதல் தொலைபேசி மையம் எங்கு நிறுவப்பட்டது? | - அமெரிக்கா |
| உலகில் தேங்காய் எந்த நாட்டில் அதிகளவு உற்பத்தியாகிறது? | - பிலிப்பைன்ஸ் |
| வெட்டுக்கிளியை வேட்டையாடும் பறவை எது? | - மைனா |
| ஒரே சமயத்தில் நூற்றுக்கு மேற்பட்ட முட்டைகளை இடும் பறவை? | - நெருப்புக்கோழி |
| நீரை உறிஞ்சிக் குடிக்கும் பறவை எது? | - புறா |
| மனித மூளையின் நினைவாற்றலுக்காகப் பயன்படும் செல்கள் எத்தனை? | - பத்தாயிரம் கோடி |
| எறும்புகள் எத்தனை நாட்கள் இரையில்லாமல் உயிர் வாழும் | - நூறுநாட்கள் |
| தந்தையர் நாடு என அழைக்கப்படும் நாடு எது? | - ஜேர்மனி |
| உப்பினால் ஆன நகரம் எங்குள்ளது | - போலந்து |
| கறுப்புக் கோயில் எங்கு கட்டப்பட்டது | - கோனார்க் |

கி. பவித்றா
11A

# இலங்கையின் கல்வித்துறை சார்பான விடயங்கள்

*1945* :- இலங்கையில் இலவசக் கல்வித்திட்டம்
*1952* :- புலமைப் பரிசில் திட்டம்
*1966* :- பாடசாலைகள் தேசிய மயமாக்கப்பட்டது
*1980* :- இலவசப் பாடநூல் வழங்கப்பட்டது
*1986* :- மகாபொல புலமைப்பரிசில் நம்பிக்கை நிதியம்
*1987* :- தேசிய பாடசாலை உருவாக்கம்
*1989* :- இலவச மதிய உணவுத்திட்டம்
*1993* :- இலவச சீருடை விநியோகம்
*1999* :- பாடசாலை மட்டக் கணிப்பீடு
*2000* :- பாடசாலைக்கல்வி அமைச்சு உருவாக்கம்

ப. கீர்த்தனா
10A

☆ பரிசுத்தமான மனம் உடைய ஒருவன் எல்லாவற்றையும் பரிசுத்தமாகவே காண்கின்றான்.

☆ மனிதன் எந்தளவுக்கு உயர்ந்தவனாகிறானோ அந்த அளவுக்குக் கடுமையான சோதனைகளைக் கடந்து சென்றாக வேண்டும்

☆ மேகத்தைக் காற்று கலைப்பதைப் போல ஆண்டவன் நாமம் உலகப் பற்றாகிய மேகத்தைக் கலைத்து விடும்.

☆ நண்பனுக்கு உயிரைக் கொடுப்பது என்பது சுலபம் ஆனால் உயிரைக் கொடுப்பதற்கான நண்பன் கிடைப்பது தான் கடினம்

☆ கல்வி என்பது ஒருவன் அறியாத பொருளை அறிய வைப்பதில்லை ஒருவனுக்குத் தெரியாத பண்புகளைத் தெரிய வைப்பது

☆ நட்பு ஒரு நளினமான கலை ஒரு சிலரே அந்த வரப்பிரசாதத்துடன் பிறந்திருக்கின்றார்கள்

☆ ஒய்வு ஒர் அழகான உடைதான் அதை எப்போது அணிந்திருப்பது அழகல்ல



பாடசாலை சாரணி அணி - 2009



பிரியா விடை நிகழ்வு - 2012





ஒளிவிழா நிகழ்வுகள்




பரிசளிப்பு விழா - 2011



இல்ல மெய்வல்லுநர் போட்டி நிகழ்வு
2013

# மனிதனும் சூழலும்

நாம் வாழும் இப் பூமியானது இற்றைக்கு 4.5 பில்லியன் வருடங்களிற்கு முன்னரே தோற்றம் பெற்றது. படிப்படியாக ஒவ்வொரு உயிரினமும் தோன்றியது. எனினும் கூர்ப்பில் மிக முன்னேற்றமான அங்கியாகக் கருதப்படும் மனிதன் 500,000 ஆண்டுகளிற்கு முன்புதான் தோன்றினான் எனினும் இன்றைய காலத்தில் புவியையே ஆட்டிப்படைக்கும் அங்கியாக விளங்குகின்றான். இப்புவியில் ஏராளமான உயிரினங்கள் காணப்படுகின்றன. எனினும் சுயநலம் கொண்ட மனித நடவடிக்கைகள் காரணமாக அவற்றின் இருப்பும் சூழல் கொண்டிருக்கும் இயற்கை வளங்களும் சுரண்டப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

எம்முன்னோர்கள் இயற்கையோடு ஒன்றிய வாழ்க்கையையே மேற்கொண்டனர். மனிதன் சூழலுடன் தொடர்புற்ற காலம் முதல் சூழல் பற்றி பல்வேறு விதங்களில் ஆராய்ந்து அறிந்து கொண்டான் புராதன மனிதன் தான் வாழ்ந்த சூழலைப் பற்றிய நல்ல அறிவினைப் பெற்றிருந்தான். இதன் மூலம் நாம் அறிந்து கொள்ளக் கூடியது என்னவெனில் சூழல் அழிந்து விடாத படி தமது தேவைகளை நிறைவேற்றிக் கொள்ள அவர்கள் பழக்கப்பட்டிருந்த விதமாகும். "மனிதனின் பௌதிக தேவைகள் அனைத்தையும் இயற்கை வழங்கியது. மனிதன் இயற்கையின் உரிமையாளன் அல்லன்" அதன் பங்காளன் ஆவான் ஆனால் இன்றைய மனிதனின் கண்மூடித்தனமான செயற்பாடுகளினால் எதிர்கால சந்ததியினரின் நிலை அச்சப்படும்படியாக. சவாலாக அமையப் போகிறது.

பகுத்தறிவு கொண்டவனாக மனிதன் கணிக்கப்படினும் அவனின் செயற்பாடுகள் அவ்வாறாக இல்லை. தமக்கு வாழ்வளிக்கும் சூழலையே அழிக்கும், மாசுபடுத்தும் செயற்பாடுகளில் சிறிதும் சிந்தியாது ஈடுபடுகிறான். இன்றைய காலங்களில், ஏற்பட்டிருக்கும் இயற்கை அனர்த்தங்கள், காலநிலை மாற்றங்கள், கடல் மட்ட அதிகரிப்பு என்பன மனிதனின் சூழலிற்கு விளைவிக்கப்பட்ட தீங்கின் எதிரொலியே. நாம்நன்மை செய்தால் சூழல் நமக்கு அதை திருப்பித்தரும். ஆயினும் நாம் செய்யும் அழிவுகள் காரணமாக இன்று இத்தகைய பேரிடர்களை சந்திக்க வேண்டியுள்ளது.

மனிதனின் தொழில்நுட்பச் சிந்தனையினாலும் ஆக்கத்திறனினாலும் எண்ணற்ற கண்டுபிடிப்புக்கள் உருவாகியுள்ளன. ஆயினும் அவற்றில் பல சூழலிற்கு தீங்கு விளைவிப்பனவாக உள்ளன. உதாரணமாக அணுஆயுதங்கள் பரிசோதனைகள், நவீன ஆயுதங்கள், விண்வெளி ஆராய்ச்சிகள் என்பவற்றைக் குறிப்பிடலாம். மேலும் சனத் தொகை துரிதமாகப் பெருகியதால் அவர்களது தேவைகளான உறைவிடம் வேறு நுகர்வுகள் என்பவற்றை நிறைவேற்றிக் கொள்ள பெருமளவு கேள்வி ஏற்பட்டது இதனால் சூழல் எமக்கு இயற்கையாக வழங்கியதை விட மேலதிகமாக சூழலில் இருந்துபெற முயன்றதால் சூழல் சமநஜலை சீர்குழைந்தது. சூழல் வளங்களை அதிக அளவு பயன்படுத்துவதால் தற்போது மிகச் சிக்கலான சூழல் பிரச்சினைகள் பல எழுந்துள்ளன. உதாரணமாக சூழல் பிரச்சினைகளாக, என பவளப் பாறைகள் அழிதல். வளி மண்டலம்

வெப்பமடைதல், வளி மாசடைதல். நீர் மாசடைதல் நீர்ப் பற்றாக்குறை, வெள்ளப்பெருக்கு, சூழல் தொகுதி அழிவுக்குள்ளாதல், மண்ணரிப்பு, காட்டுத்தீ, பாலைவனம் உருவாதல். கரையோர அரிப்பு என்பவற்றைக் கூறலாம்.

மேலும் மனித செயற்பாட்டினால் இயற்கைச் சமநிலையைப் பேணி வாழும் உயிரங்கிகள் யாவற்றிற்கும் உணவு வழங்கும் பச்சைத் தாவரங்கள் அழிவுறுகின்றன. மனிதர்களால் மேற்கொள்ளப்படும் பாரிய கைத்தொழில் நடவடிக்கைகளால் வெளியேற்றப்படும் நச்சுவாயுக்கள் எண்ணெய்க் கழிவுகள், நச்சு உலோகக் கழிவுகள் மற்றும் விவசாயத் தொழில் நுட்பத்தில் பயன்படுத்தப்படும் இரசாயன வளமாக்கிகள் பீடைகொல்லி என்பவற்றின் பாவனை உயிர்ப்பல்வகைமையை பாரிய அளவில் பாதித்துள்ளது. புவியில் வாழும் ஒவ்வோர் அங்கியும் மற்றைய அங்கியுடன் நேரடியாகவோ அன்றி மறைமுகமாகவோ தங்கி வாழ்கின்றன. ஒரு இன அங்கி மட்டும் தனித்து வாழ முடியாது. எனவே இவ்வாறு உயிர்ப்பல்வகைமையில் ஏற்படும் பாதிப்பு பூமியில் மனிதனின் நிலவுகையையே கேள்விக்குறியாக்குகின்றது எனில் இந்த நிலைமைக்கு காரணம் நாமே என்பது வருந்தத் தக்கது.

எனவே இப்பூமியில் நிலைபெற்று வாழ்வதற்கு மனிதன் தன்னாலான முயற்சிகளைச் செய்ய வேண்டும். பூமி நம் தாய் என்ற உணர்வோடு உயிர்ப்பல்வகைமையையும் சூழலையும் பாதிக்காது, புவியின் வளங்களைத் திட்டமிட்டுப்பயன்படுத்திக் கொள்ள வேண்டும். சுயநலமாக புவியில் உள்ள வளங்களைச் சுரண்டாது ஏனைய அங்கிகளின் நலனைப் பற்றியும் சிந்தித்துச் செயற்படுதல் வேண்டும். நாம் சூழலைப் பாதுகாத்தால் நிச்சயமாக அது நம்மைப் பாதுகாக்கும். இவ்வாறு பாதுகாப்பதன் மூலம் பூமி ஆரோக்கியமாக வாழ்விற்கு உகந்ததாய் மீண்டும் மாறும். எனவே இயற்கை அன்னை நமக்களித்த கொடையை என்றும் இயற்கையாகவே இருக்க ஒத்துழைத்தால் நாமும் வாழ்ந்து எதிர்காலச் சந்ததியையும் சிறப்புற வாழவைத்து ஆரோக்கியமான வாழ்வை என்றும் நிலை பெறச் செய்யலாம்.

> "இந்தப் பூமியில் காணப்படுகின்ற ஒவ்வொரு அங்குல
> நிலமும் அதன் பகுதியும் எங்கள் மக்களுக்கு அர்ப்
> பணிக்கப்படுகிறது. சூரிய ஒளியினால் சக்தியி
> னால் பெறும் தேவதாரு மரங்கள் வெள்ளைமண
> லால் சூழப்பட்ட கடற்கரைகள், திறந்த வெளிகள்
> நுண்ணுயிர்கள் அனைத்தும் எமது சொத்தாகும்"
> (செவ்விந்தியத் தலைவன் சியட்டல்)

ச. யசோதரா

# Famous Quotations

Liberty:

Man was born free, and everywhere he is chains.

Jean Jacques Rousseau 1712 - 1778: Du Contract Social (1762)

Ignorance:

Ignorance is not innocence but sin

Robert Browning 1812 - 1889: The Inn Album (1875)

Democracy:

It' not the voting that's democracy, it's counting.

Woodrow Wilson 1856 - 1924 : speech of Congress, 2 April 1917

Comedy:

Comedy is tragedy that happens to other people

Angela Carter 1940 - 1992: Wise Children (1991)

Change:

Change is inevitable in a progressive country. Change is constant.

Benjamin Disraell 1804 - 1881 speech at Edinburgh: 29 October 1867

Books:

Some books are to be tasted, others to be swallowed, and some few to be chewed and digested.

Francis Bacon 1561 - 1626: Essays (1625) 'Of Studies'

Teaching:

A teacher affects eternity; he can never tell where his influence stops.

Henry Brooks Adams 1838 - 1918: The Education of Henry Adams. (1907)

Success:

Success makes life easier. It doesn't make living easier.

Bruce Springsteen 1949 : in Q Magazine August 1992

**S.Pakeerathan**

*11A*

# THE RIGHT TIME WHEN DREAMS GET COLOURED

The day that my mother says
I am proud of my child
The moment of which my father says
I am happy about my child
The minute when everyone expresses
Would not she be my child.

The second when a teacher feels
Because of me she received it
That is the real time which I am dreaming about.

Wearing a white coat
Roaming round the hospital
Wiping the tears of the disabled
Helping the injured
Running here and there
With a stethoscope round my neck
Feeling very proud
When some one calls me 'Doctor'.

Won't my dreams come true?
Or will it be only a dream?
I'm hoping for the day
When my dreams get coloured.

**S. Thanusiya**
*2013 A/L Bio*

# THE WIND IN A FROLIC

Hey! Look here
The sky is very cloudy
The clouds are very dark and
It is very windy
Why? What's the matter?
The Wind is in a Frolic

The trees are dancing like
Performing on a stage
The waves in the sea are
Playing sea saw up and down'
The leaves are asking the trees
To let them fly in the air

Look at that
A bird is falling down
Like a crashing aircraft
And the fallen leaves on the ground
Are bouncing about like kinds
Yoh! It is nice to be watching them once in a way

See the papers flying out
Through the window of my house
I turn in to my house
Oh my God! Where are my note papers?
There are not on my table

So I begin to scold the wind
'what man? What made you do
This? It's enough
Do please stop your pranks and
Change my mood
So that we can have some peace.

**Thursika**
*2013 A/L (Bio)*

# இந்துக் கலை மரபில் சிற்பக்கலை

கலை என்பது கருத்தின் உறைவிடம். இன்பம் அதன் பயன். மனிதனைப் பழிபாவங்கள் நிறைந்த இந்த நிஜ உலகை விட்டு வேறோர் உலகிற்கு அழைத்துச் செல்லும் ஆற்றல் கலைகளுக்கு உண்டு. இந்தியக் கலைகள் அமைப்பு முறையிலும் நோக்கத்திலும் மேல் நாட்டுக் கலைகளைப் போன்றனவல்ல. மேல் நாட்டுக் கலைகள் யாவும் உலகியல் சார்ந்ததாக அமைய இந்திய கலைகள் யாவும் ஆன்மஞானத்தையும், கடவுள் பக்தியையும் வளர்க்கும் பொருட்டு அமைந்தவையாகும்.

மனித இனம் தோற்றுவித்த கலைகளுள் தலையாயதும், அற்புதமானதுமாகிய கலை சிற்பக்கலையாகும். இது ஒரு தெய்வீகக் கலை. இது காண்பவரின் உள்ளத்தில் அமைதி, மகிழ்ச்சி, வியப்பு, ஆன்ம திருப்தி ஆகிய நான்கினையும் வெளிப்படுத்துவதாக அமைகின்றது. தொன்று தொட்டு இக் கலை வளர்ந்து வருகின்றது. நிலையா யாக்கை கொண்ட சிற்பிகளின் கைத்திறத்தால் சமைக்கப்பட்ட சிற்பங்கள் பன்னெடுங்காலமாக நிலைத்து மானிட இனம் போற்றும் மகோன்னத நாகரிகச் சின்னமாக, கலைக் கருவூலகமாக, எல்லோராலும் போற்றப்பட்டு வருகின்றன.

கற்பனைத் திறத்தின் வடிவாக்கமாக முனிவர்கள் தெய்வீகச் சிற்பிகள்வகுத்துத் தந்த நெறிமுறைகளுக்குட்பட்டுப் பல கவின் மிகு சிற்பங்களை உருவாக்கி அழியாக் கருவூலங்களாகப் பாதுகாத்து வந்த பெருமை தமிழ் கூறும் நல்லுலகின் தனிச்சிறப்பாகும். சிற்பங்கள் சமுதாயத்தின் உயர்ந்த இலட்சிய வாழ்க்கையை, பண்பாட்டுச் சிறப்புகளை, கலை நுட்பங்களைப் புலனாக்குகின்றன. ஒவ்வொரு கலைச்சின்னமும் அதன் ஒவ்வோர் எடுத்துக் காட்டாக அமைகின்றது. திருக்கோயில்களில் காணும் சிற்பங்கள் யாவும் காலத்தால் அழியாத கல், உலோகம், மரம் ஆகியவற்றால் செய்யப்பட்டவையாகும். இவற்றை இன்றும் நாம் வழிபட்டு வருகின்றோம். இவை நமது முன்னோர்களின் நிலையைப் போற்றும் சின்னங்களாகவும் அவர்களின் வாழ்க்கை வளத்தைச் சித்திரிப்பவையாகவும் அமைந்துள்ளன. மேலும் அவை ஒவ்வொன்றும் தமிழகத்தில் செங்கோலோச்சிய பண்டைப் பேரரசர்களின் வரலாற்றைக் கூறும் காலப் பெட்டகங்களாகவும் விளங்குகின்றன. இத்தகைய அரிய கலைச் செல்வத்தை இத் தாய்த் திருநாட்டுக்கு வழங்கியவர்கள் இத் தமிழ் மண்ணிலே தோன்றிய மதிநுட்பமும் செயலாற்றும் திறனும் வாய்க்கப் பெற்ற சிற்பக் கலைஞர்களாவர். இச் சிற்பக்கலை பண்டைத் தமிழ்ப் பேரரசர்களின் அரவணைப்பில் செழித்தோங்கி இருந்தது.

தமிழ் நாட்டில் சிற்பக்கலை வளர்ச்சி, வழிபாட்டுக்குரிய திருவாலயங்களை ஒட்டி வளர்ந்ததாகும். சிற்பிகளை கற்கவி என்றும் பெயர்சூட்டி அழைத்தனர். சிற்பி என்பவர் அறிவுணர்வு மிக்கவராகவும் ஆன்மத்தூய்மையுடையவராகவும், கைதேர்ந்த கை வினைஞராகவும் ,கணித அறிவு பெற்றவராகவும் , அளவிலக்கணம் அறிந்தவராகவும், கலைவளம் தெரிந்தவராகவும், உண்மை பேசுபவராகவும் இருத்தல் வேண்டுமெனப் பல்வேறு பண்டைய நூல்கள் கூறுகின்றன.

யோகிகள் மனம்போல் சிற்பிகளுடைய மனமும் அசைவற்றுத் திட்ட மிட்ட வடிவத்தை, படிவத்தைத் தன்னகத்தே பதிய வைத்துக் கொள்ள வேண்டும். இந்நிலைக்குச் சமாதி என்று பெயர். நில்பம் என்னும் சொல்லும் இதையே உணர்த்தும். சிற்பி எனப்படுவன் அவ்வாறான பக்குவமான மனத்தையுடையவனாக இருக்க வேண்டும் என சில்பரத்தினம் என்ற நூல் கூறுகின்றது.

வழிபாட்டிற்குரிய தெய்வத் திருவுருவங்கள் அமைப்பதற்கு 10 மூலப் பொருட்கள் பயன்படுத்தப்பட்டன. கல், உலோகம், செங்கல், மரம், மண், சுதை, தந்தம், வண்ணம், சர்க்கரை, மெழுகு என்பன சிற்பம் செய்வதற்குரிய மூலப் பொருட்களாகப் பயன்பட்டன. இதே மூலப் பொருள்கள் ஏனைய சிற்பங்களை வடிப்பதற்கும் பயன்படுத்தப்பட்டன.

சிற்பங்கள் அமைக்கப்படும் நோக்கம் அவற்றின் தன்மை என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு சிற்பங்களை வகைப்படுத்தும் மரபு தோற்றம் பெறுகின்றது. வடிவங்களை இருத்தும் நிலையை அடிப்படையாகக் கொண்டு அவற்றை மூன்றாக வகைப்படுத்தலாம்.

1. சல வடிவங்கள் - இடத்துக்கிடம் நகர்த்தக் கூடிய வடிவங்கள்
2. அசலவடிவங்கள் - ஓரிடத்தில் நிலையாக நிறுவப்படுகின்ற வடிவங்கள்
3. சலாசல வடிவங்கள் - இடத்துக்கிடம்நகர்த்தக் கூடியனவாக இருப்பினும் அவ்வாறு நகர்த்தக்கூடாது என்ற நோக்கத்தில் நிறுவப்படுகின்ற வடிவங்கள்.

சிற்பங்கள் செதுக்கப்பட்டுள்ள விதத்தை அடிப்படையாகக் கொண்டும் சிற்பங்களை வகைப்படுத்துவர். வடிவத்தின் முழு அங்கங்களும் வெளியே தெரியும்படியாக அமைக்கப்படும் வடிவங்கள் முழுவடிவச் சிற்பங்கள் என அழைக்கப்படுகின்றன. வடிவத்தின் அங்கங்களின் ஒரு பகுதி மட்டும் தெரியும் படியாகச் செதுக்கப்படும் சிற்பங்கள் புடைப்புச் சிற்பங்கள் என அழைக்கப்படுகின்றன.

இந்திய வரலாற்றில் சிற்பக்கலையானது சிந்து வெளிக்காலப்பழமையுடையது . சிந்து வெளிப் பிரதேசத்தில் கிடைக்கப்பெற்ற நடனமாதின் வெண்கலப் படிமம் ஆணின் வடிவம், குட்டிகளுடன் கூடிய குரங்கின் வடிவம் போன்ற சிற்பங்கள் இதற்குச் சான்றாக அமைகின்றன. சிந்து நதிக்கரையில் உற்பத்தியாகிய சிற்பமே பிற்காலத்தில் மகத நாட்டிலும் காந்தார நாட்டிலும் விருத்தியடைந்ததென்பதே கனம் ஹெரஸ் என்பவருடைய கருத்தாகும்.

சிந்து நதிக்கரையில் எடுக்கப்பட்ட ஓர் உருவம் தன் கண்ணிமைகளைச் சிறிது மூடியதாகவும். உடல் முழுமையும் மூடிய ஆடையை இடது தோளில் சார்த்தியதாகவும் காணப்படுகின்றது. இவ்வுருவத்தின் உடைபிற்காலத்தில் காந்தார நாட்டிலும் வேறு இடங்களிலும் காணப்படும் புத்த உருவங்களின் உடையைச் சிறிது ஒத்திருக்கின்றது

மொஹொஞ்சதாரோவில் கண்டெடுக்கப்பட்ட முத்திரைகளிற் காணப்படும் மிருக உருவங்களுக்கும், அசோக அரசன் காலத்தில் அமைக்கப்பட்ட மிருக

உருவங்களுக்கும் மிக நெருங்கிய ஒற்றுமைகள் காணப்படுகின்றன. அசோகன் காலத்து எருதின் சிற்ப அமைதியானது சிந்து நதிக்கரையின் எருதுருவத்தை ஒத்திருக்கின்றது.

குஷாண அரச பரம்பரை காந்தார நாட்டில் ஆதிக்கம் பெற்றிருந்த காலத்தில் மத்துராவிலும், ஆந்திர நாட்டிலுள்ள அமராவதி என்னும் நகரத்திலும் பௌத்த சிற்ப உருவங்கள் மிகவும் அழகு பெற அமைக்கப்பட்டன. கி.பி நாலாம் நூற்றாண்டு தொடங்கம் குப்த அரசர்கள் மகத நாட்டில் ஆதிக்கம் பெற்றனர். குப்த அரசர்கள் காலத்தில் இயற்கையை சிறிது தழுவியும் பெரும்பான்மை, மனவுணர்ச்சிகளையும், ஆன்மவியல்புகளையும் உருவகப்படுத்தும் முறையினால் சிறப்படைந்தது இக்கொள்கைகளுக்கு அமையவே தெய்வத் திருவடிவங்கள் வடிவமைக்கப்பட்டன.

பல்லவ அரசர்களும், அவர்களுக்குப் பின்வந்த சோழ அரசர்களும், கோயில்களைச் சிற்பமுறையிற் கட்டியமை போலவே இந்தியாவின் ஏனைய பகுதிகளிலும் இருந்த பல அரசர்களாலும் ஆலயங்களும் சிற்ப உருவங்களும் வகுக்கப்பட்டு வந்தன. சாளுக்கிய அரசர்களாலும், ராஷ்டிர கூட அரசர்களாலும் அழகிய சிற்ப வடிவங்கள் நிறைந்து திகழும் ஆலயங்கள் பல அமைக்கப்பட்டன. பட்டக்கல் என்னும்இடத்தில் உள்ள விருபாஷகர் ஆலயம் இரண்டாம் சாளுக்கிய விக்கிரமாதித்த அரசனால் அமைக்கப்பட்டது. வாதாபி, எல்லோரா முதலிய இடங்களிலுள்ள கோயில்களின் சுவர்களிற் சிவபிரான் சம்பந்தமான புராணக்கதைகள் அழகிய சித்திர உருவங்களோடு செதுக்கப்பட்டுள்ளன.

கல்யாணிச் சாளுக்கியர்களின்சிற்பங்களை குக்கனூர் கல்லேஸ்வரம். சௌத்தம்பூர், முத்தேஸ்வரம் போன்ற இடங்களில் காணலாம். கொய்சல ஈஸ்வரத்தின் தூண்களில் நர்த்தன விநாயகர் நடன சரஸ்வதி, நரசிம்மா என்போரின் வடிவங்கள் காணப்படுகின்றன.

தமிழகத்தில் கி.பி 5ஆம் நூற்றாண்டிலிருந்தே சிற்பக்கலை தொடர்பான புதை பொருட் சான்றுகள் கிடைக்கப் பெறுகின்றன. பல்லவர் ,சோழர், விஜயநகநாயக்கர் முதலான மன்னர்களின் ஆட்சிக் காலங்களில் சிற்ப சாத்திர விதிகளுக்கமைவான சிற்பங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

பல்லவர்காலச் சிற்பங்களை கட்டடக் கலையின் அடிப்படையில் குடை தளிச் சிற்பங்கள் கட்டுத் தளிச் சிற்பங்கள் என வகைப்படுத்துவர். விஜய நகர நாயக்க மன்னர்களால் செதுக்கப்பட்ட சிற்பங்களுள் இறைவடிவங்கள் முக்கியமான இடத்தைப் பெறுகின்றன.

தமிழ்நாட்டில் சங்கம் மருவிய காலத்தில் அரண்மனை வாயில்களிலும், தூண்களிலும் உருவங்கள் சுதையினாற் செய்யப்பட்டிருந்ததுடன் கோயில்களிலும் தெய்வ உருவங்கள் மண்ணினாலும், கல்லினாலும், மரத்தினாலும் அமைத்துக்கடவுள் மங்கலஞ் செய்யப்பட்டுமிருந்தன.

பல்லவர்காலத்தில் மகேந்திர்வரமனால் தொடக்கப் பெற்ற சிற்பமுறைகள் திருச்சிராப் பள்ளி, தளவானூர் பல்லாவரம் முதலிய இடங்களில் காணப்படும்

குகைக்கோயில்கள் மகேந்திர முறையைச் சேர்ந்தனவாகும். முதலாம்நரசிம்ம வர்மனால் அமைக்கப்பெற்ற குகைக் கோயில்களும், ஒற்றைக்கல் கோயில்களும் மாமல்ல சிற்ப முறையைச் சார்ந்தனவாகும். மிருக உருவங்கள் அமைப்பதில் இச்சிற்ப முறை மற்றைய முறைகளிலும் பார்க்கச் சிறப்படைந்திருந்தது. இராஜசிம்மனால் அமைக்கப்பெற்ற கோயில்கள் கல்லினால் கட்டப்பட்டவை காஞ்சி கைலாச நாதர் கோயிலும் மாமல்லபுரம் கடற்கரைக் கோயிலும் சிற்பக் கலையின் உன்னத நிலையைக் காட்டுவனவாகும்.

அபராஜித சிற்பமுறை சோழசிற்பமுறைக்கும், பல்லவ முறைக்கும் இடையேயுள்ள முறைகளைக் குறிப்பதாகும். புதுக் கோட்டை சமஸ்தானத்திலுள்ள நார்த்தாமலை என்னும் கிராமத்தில் காணப்படும் விஜயாலய சோழீசுவரம் என்னும் சிவாலயக் கட்டடம் அபராஜித சிற்ப முறையைச் சேர்ந்ததாகும்.

பல்லவ அரசர்களுக்குப் பின் சிற்பக்கலையானது சோழ அரசர்களால் சிறப்புடன் ஓம்பப் பெற்றது. இராஜராஜ சோழனால்தஞ்சாவூர் இராஜராஜேஸ்வரம் (தஞ்சைப் பெருவுடையார்) கோயில் கட்டுவிக்கப்பட்டது. அவன் மகன் இராஜேந்திரச் சோழனால் கங்கை கொண்ட சோழேஸ்வரம் கட்டுவிக்கப்பட்டது. அக்காலத்திலும் அதற்குப் பின் வந்த சோழ அரசர் காலத்திலும் சிறந்த உருவங்கள் செப்பினாலும் செய்யப்பட்டன.

பாண்டிய மன்னர் காலத்தில் சிறந்த சிற்ப வேலைப்பாடுகள் நிறைந்த ஆலயங்கள் அமைக்கப்பட்டன. ஸ்ரீரங்கம், சிதம்பரம். கும்பகோணம், திருவண்ணாமலை போன்ற இடங்களில் உள்ள கோயில்கள் சிற்பக்கலையின் உன்னத வளர்ச்சியைக் காட்டி நிற்கின்றன.

விஜய நகர மன்னர் காலத்தில் காஞ்சிபுரம், விஜய நகரம், ஆவுடையார் கோயில், மதுரை மீனாட்சி அம்மன் கோயில் ஆகியவற்றின் அழகிய சிற்பவேலைப்பாடுகளைக் கண்டு இன்புறலாம்.

சிற்பக் கலைபற்றிக் கூறும் நூல்களாக சகளாதிகாரம், காசியபம், மயமதம். மாநசாரம். சில்பரத்தினம் என்பவை குறிப்பிடுகின்றன. ஆலயங்களை மையமாகக் கொண்டு எழுந்த சிற்பக்கலை இந்து நாகரிகத்தின் கலை வளர்ச்சிக்கு எடுத்துக் காட்டாக விளங்குகின்றதெனலாம்.

**உசாத்துணை நூல்கள்**

*தென்இந்திய சிற்பவடிவங்கள் - கலைப்புலவர் க. நவரத்தினம்*
*தமிழாராட்சி மாநாட்டு மலர்*
*இந்து நாகரிக அறிவுரைப்பு வழிகாட்டி*

திருமதி. இ. சிவலிங்கம்
ஆசிரியர்

# Studying literature and the purpose of learning literature

Studying literature is analysis of literary texts such as novels, plays, short stories and poetry. It is so much more than just reading something which can be compared to a casual walk in the park. In this case, there is not much effort and no real desire to go beyond the text. When we study literature, it is akin to training every part of our bodies for the world Olympics. We do everything deliberately and with intention. We seek to dissect every inch for text, leaving nothing unnoticed. When we study literature we dont just settle for our own interpretations. We find out about other possible ways in which the text could be read. We analyse every word and action to give a range of possible meanings. We look at how the text is structured to give support to these meanings, and observe how meaning can change with slight alteations in form and structure. To study literature means to play not just with words, but with ideas, thoughts and images. Students are trained to detect the devices which make up literature, just as doctors train to detect symptoms. Metaphors, similes, irony are just some of the techniques that are used to analyse a literary a work. By understanding a play or a poem in this way, students are able to enjoy to a greater extent the text, as they can recognize and appreciate the effort and artistry that went into its construction. This is one reason we study this subject. Other reasons include a greater understanding of the human condition and the power of imagination. As humans, we are gifted with a mind that can dream and create. Subjects such as maths and physics explain how and why the world works, but artistic subjects such as literature offers us the power to see beyond numbers and equation, and value the natural beauty of this world. Furthermore, liteature teaches us about culture, and the differences in culture. It teaches us about history, and the differences that exist between people in different areas and different times, As well as this, it explores how people can also be the same, united regardless of context. Ultimately, literature teaches us about ourselves, others and the world in which we live.

**E.J. Leslie**
*Teacher*

# சிறந்த கணித வல்லுநர் பிரெடெரிக் காஸ்

கார்ல் ப்ரெடெரிக் காஸ் கணித உலகத்திலேயே எல்லாக் காலத்திலும் அறிமுகமாகிய கணிதவியலாளர்களுக்கும் மேற்படியில் வைக்கப்படும் சிறந்த கணித வல்லுநர். அவர் கணிதம், இயற்பியல், வானியல், புவிப்பரப்பு ஆகிய நான்கு துறைகளிலும் கணிசமாகப் பங்களித்தவர்.

கணிதத்தில் எண் கோட்பாடு, பகுவியல், வகையீட்டு வடிவியல் ஆகிய மூன்றிலும் பற்பல விதங்களில் அடிக்கல் நாட்டி அவர் காலத்திலேயே கோபுரம் எழுப்பியவர். கணிப்புகளில் அபார வல்லமை பொருந்தியவராக இருந்தமையால் வானியல், புவிப்பரப்பு, எண்கோட்பாடு போன்றவற்றில் இன்றியமையாத நீண்ட கணிப்புகளைச் செய்து சாதனை படைத்துள்ளார்.

இவரின் தந்தை கெப்பார்ட், ஒரு சாதாரண ஏழைத் தொழிலாளி. தாய் டொரொத்தியா கெப்பார்ட்டுக்கு இரண்டாவது மனைவியாவார். வீடுகள் தோறும் சுத்தம் செய்யும் வேலையில் தாயார் ஈடுபட்டிருந்தவர். மூன்று வயதிலேயே காஸ் தன் தந்தை கூலியாட்களுக்குச் சம்பளம் கொடுக்கும் போது அவர் கணிப்பில் தவறு ஒன்றைக் கண்டுபிடித்தவர்.

காஸ் தனது ஏழாவது வயதில் ஒரு நாள் வகுப்பில் நுழைந்ததும், மாணவர்கள் எல்லோரையும் பேசாமல் இருக்கச் செய்வதற்காக ஆசிரியர் கொடுத்திருந்த ஒரு கணக்கினை நொடியில் முடித்து ஆசிரியரை அசர வைத்தான்.

அதாவது 1 இலிருந்து 100 வரையுள்ள முழு எண்களின் கூட்டுத் தொகையைக் கணக்கிடும் கணிப்புத்தான் அது. காஸின் மூளையில் இக் கணக்கின் செய்கை முறை இவ்வாறே தோன்றியது.

1முதல் 100 வரையில் உள்ள எண்களில் 50 சோடி கள் உள்ளன. அதாவது 1 - 100, 2 - 99, 3 - 98, 4 - 97 , 5 - 96, 6 - 95................ முதலியவை ஒவ்வொரு சோடிகளினதும் கூட்டுத்தொகை 101 ஆகும். 50சோடி எண்களினதும் கூட்டுத்தொகை 5050 ஆகும். $(101 X 50 = 5050)$

இதனைக் கூறிய போது ஆசிரியருக்கு மாணவன் மேல் உவகை பொங்கியது. பையனைப் பாடசாலை நேரங்களுக்கு அப்பாலும் கணிதத்தின் மற்றைய நெளிவு சுழிவுகளைக் கற்றுத் தருவதற்காக அனுமதி கேட்க அவரின் பெற்றோர்களை ஆசிரியர் அணுகினார்.

பதினோராவது வயதிலிருந்து நான்கு ஆண்டுகளுக்கு, தொல்நூல்களில் காஸ்க்கு நல்ல கல்வி கிட்டியது. நியூட்டனுடைய “ப்ரின்ஸிபியா” பெர்னொவிலியினுடைய

"ஆர்ஸ்கந் ஜெக்டாண்டி" போன்ற சிறந்த நூல்களைக் கற்கும் பேறு கிட்டியது. 15 வயதிற்குள் அவனுடைய கல்வியின் உயர்ந்த தரத்தைப் பார்த்து மெச்சிய பிரன்ஸ்விக் பிரபு பெர்டிணைட் என்பவர் அவருக்கு கல்லூரியில் படிக்க உபகாரச் சம்பளம் கொடுத்து உதவினார்.

மேலும் பல்கலைக்கழகக் காலத்தில் பெர்மா பகாதனிகளைப் பற்றியும், ஆய்வர் 5 என்ற ஆறாவது பெர்மா எண் பகா எண்ணல்ல என்று கொடுத்த தீர்வைப் பற்றியும் தெரிந்து கொண்டதும், இதர பெர்மா எண்கள் பகாதனிகளாக இருக்கமுடியாது. என்ற ஊகத்திற்கு காஸ் வந்தார். இதன் பிறகு தன்னுடைய எதிர்காலம் கணிதத்தில் தான் என்றொரு முடிவெடுத்தார். "முனைவர்" பட்டத்திற்காக, தனது நாடான பிரான்சிக்கோ திரும்பிவந்து ஆய்வுக் கட்டுரை எழுதத் தொடங்கினார். அதற்கு அவர் தேர்ந்து எடுததுக் கொண்ட விடயப் பொருள்

"இயற்கணிதத்தின் அடிப்படைத் தேற்றம்" ஆகும்

தனது 17 வயதிலிருந்தே தன் மனதில் எண்களைப் பற்றித் தோன்றியதை யெல்லாம் ஒரு நூலாக வடிக்க வேண்டுமென்ற ஆசை 1798 இல் உருவெடுத்து 1801 இல் 24 வது வயதில் கணித உலகத்துக்கும் எண்கோட்பாட்டிற்கும் அவர் அளித்த மாபெரும் பொக்கிஷமாக மிளிர்ந்தது. உண்மையில் அதற்கு முன்னர் எண் கோட்பாடு என்ற கோட்பாடே இருந்ததாகச் சொல்ல முடியாது.

ஏனெனில் கிரேக்க காலத்திலிருந்து இன்றைய வரையில் எண்களைப் பற்றித் தெரிந்ததெல்லாம் தனித்தனியே நின்ற பல தேற்றங்கள் ஆகும். அவைகளை இணைத்து ஒரு கோட்பாடாக்கக்கூடிய நிலையில் பெர்மா, ஆயிலர் லக்ராஞ்ஜி, லெஜாண்டர் போன்ற கணிதவியலாளர்கள் கண்டு கொள்ளவில்லை. காஸினுடைய சமானம் மாகுலோ என்ற கருத்துக்கள், அவர்களின் கருத்துக்களுடன் ஒன்று சேர்க்கப் பெரிதும் உதவின.

திருமதி து. நவரத்தினராசா
ஆசிரியர்

# வாழ்வில் கற்றலின் முக்கியத்துவம்

கற்றல் என்பது மனித நடத்தையில் ஏற்படும் மாற்றமாகும். மனிதனாகப் பிறந்த நாம் ஏதோ ஒரு வகையில் அனுபவத்தின் மூலமோ அல்லது வேறுவழியில் கற்பதன் மூலமோ வாழ்வில் அனைத்துப் பாகங்களையும் கற்கின்றோம். இதனையே நாம் "வாழ்நாட்கல்வி" என்கின்றோம். அதாவது மனிதன் பிறந்து இறக்கும் வரை ஏதோ ஒரு வகையில் கற்றுக் கொண்டேயிருக்கிறான். அவனது ஒவ்வொரு செயற்பாடும் அவனுக்கு கற்றலாகவே அமைகின்றது. கல்வி கரையில, கற்பவர் நாட்சில என்ற நாலடியார் பாடலுக்கமைவாககல்வி என்பது வாழ் நாள் முழுவதும் கற்றாலும் அதன் எல்லையைக் காண முடியாது. ஆனால் சிலர் தாம் கல்வியின் உச்சத்தை அடைந்து விட்டதாகக் கூறி இறுமாப்புக் கொள்கின்றனர். கல்வி கற்காதவனை, கற்றவர்கள் ஏளனம் செய்கின்றனர். இவ்வாறான உணர்ச்சி வெளிப்பாடுகள், உணர்ச்சி பிறழ்வுகள் உருவாகக் காரணம் கற்றலேயாகும். இதன் மூலம் மனித வாழ்வில் கற்றல் ஏன் அவசியம்? கல்வியை ஏன் நாம் கற்க வேண்டும்? என்பவற்றின் முக்கியத்துவம் விளங்குகின்றது.

கற்றலில் சூழலையும், சமுதாயத்தையும் பற்றிய அறிவைப் பெற்றுக் கொள்ளல் முக்கிய இடம் வகிக்கிறது. மனிதராகப் பிறந்த எமக்கு எம்மைச் சூழ்ந்துள்ள சூழலைப் பற்றிய அறிவு முக்கியமானது. ஏனெனில் சூழலில்த் தான் ஒரு மனிதனின் ஆரோக்கியம் தங்கியுள்ளது. எனவே தான் மனிதன் சூழலைப் பற்றி அறியத் துடிக்கின்றான். அதிக பிரயத்தனங்கள் செய்கின்றான். இங்கு சூழலை விளங்கிக் கொண்டால்த் தான் அச்சூழலில் இருக்கும் சமூகத்தையும் விளங்கிக் கொள்ள முடியும். உதாரணமாக வேடுவர் சமூகத்தை எடுத்துக் கொண்டால் அவர்களது மொழி, பண்பாடு, கலாசாரம், நடை, உடை, பாவனை அனைத்தையும் அறிய கற்றல் அவசியம். எனவே ஒரு சமூகத்தைப் பற்றி நாம் அறிய விரும்பினாலோ அல்லது சூழலைப் பற்றி அறிய விரும்பினாலோ கற்றல் என்பது அவசியமாகக் கருதப்படுகிறது எனலாம்.

ஒரு மனிதன் இன்னொரு மனிதனோடு தொடர்புகளைப் பேண வேண்டுமாயின் அதற்கு அம்மனிதனுக்கு மொழி அவசியம். அம்மொழி சமூகத்திற்கும் இனத்திற்கும் ஏற்ப மாறுபடும். குறிப்பாக பேச்சுமொழி, எழுத்துமொழி என வகைப்படினும் இந்த மொழி பற்றிய அறிவு கற்றலினூடாகவே சாத்தியமாகும். எனவே வாழ்வில் மொழியாற்றலை வளர்த்துக் கொள்வதற்கு கற்றல் அவசியமாகின்றது.

மனிதப் பண்புகள் வளர்ச்சி பெறுவதற்குக் கற்றலானது வாழ்வில் மிகமுக்கிய பங்கு வகிக்கின்றது. நன்மை, தீமை எனவும் நல்லவை, கெட்டவை எனவும் பிரித்தறிகின்றோம் என்றால் அவை எமது எண்ணங்களின் உள்ளத்து உந்துதலேயாகும். இவ்வாறான மனப்பாங்குகள் உருவாவதற்கு கற்றலே தூண்டுகோலாகும். இதுவே மனிதனை மனிதனாக வாழ்வாங்கு வாழ வழி செய்கிறது.

நவீன யுகத்தில் வேலைவாய்ப்புக்களைப் பெற்றுக் கொள்வதற்கும் கற்றல் உறுதுணையாயிருக்கின்றது. பண்டைய காலத்தில் மூதாதையர் திண்ணைப்பள்ளிக் கூடங்களை நடத்தியபோது அறிவு பெறுவதே நோக்கமாக இருந்தது. "கல்வி கல்விக்காக"

என்பதே அன்றைய கோட்பாடு. இன்று வளர்முக நாடுகளான எமது நாடுகளில் வாழ்க்கைக்கான வழியொன்றை அமைத்துக் கொள்வதே கல்வியின் பிரதான குறிக்கோளாகும். இன்றைய உலகில் நிரந்தரமான சமூகப் பொறுப்புள்ள உன்னதமான வேலை வாய்ப்பினைப் பெற்றுக் கொள்ள வேண்டுமெனில் தொழில் சார் விடயங்களைக் கற்றுத் தேறியிருக்க வேண்டும். குறிப்பிட்ட தொழிலில் அவருக்கு இருக்கும் கற்றல்த் தேர்ச்சியைக் கருத்திற் கொண்டே வேலைவாய்ப்பு வழங்கப்படுகின்றது.

அடுத்து நல்ல நினைவாற்றல் இருக்க வேண்டுமெனில் திறம்படக் கற்றல் அவசியமாகிறது. பூரணவிளக்கமில்லாமல் "நுனிப்புல் மேய்தல் போல" மேலோட்டமாகக் கற்ற விடயங்கள் நினைவில் வைத்திருக்க முடியாது. கற்றதை எம் மனதில் உள்வாங்கி அதனைத் திரும்பத் திரும்ப நினைவுக்குக் கொண்டு வருவதால் எமது நினைவாற்றல் வளர்க்கப்படுகிறது. ஆகவே நினைவாற்றலை வளர்த்துக் கொள்ள ஒவ்வொரு மனிதனும் கற்றல் வேண்டும்.

கல்வியின் பிரதான நோக்கம் யாதெனில் கல்வி கற்பதன் மூலம் சிறந்த ஆளுமையுடைய சமூகச் சிற்பியாகத் தன்னை உருவாக்கிக் கொள்வதே எனலாம். மனிதனாகப் பிறந்த நாம் எத்தனையோ எண்ணங்களையும் நோக்கங்களையும் அடி மனதில் ஆழப்புதைத்து விட்டு அதன்படிகற்க முயல்கின்றோம். ஆனால் நாம் கற்கும் கல்வியின் இறுதி இலக்கு நல்ல ஒழுக்கத்தையும், நல்ல பண்புகளையும் வளர்ப்பதாகவே இருக்க வேண்டும். ஆகவே ஆளுமையை வளர்ப்பதற்கும் நல்லொழுக்கத்தைக் கட்டியெழுப்புவதற்கும் கற்றலானது முக்கியத்துவம் வாய்ந்தது என்றே கூறலாம்.

இவற்றை விட ஒரு மனிதனது இன்னோரன்ன சமூகத்தேவைகளை நிறைவேற்று வதற்குக் காரணமாக அவனுள்ளே இலைமறை காயாக இருக்கின்ற அவனது திறமைகளை வெளிக்கொணர்வதற்குத் தேவையான ஆற்றல் கற்றலின் மூலமே பெறப்படுகின்றது எனலாம். இதனையே ஜோன்டூயி "உண்மையான கல்வி குழந்தையின் சமூகத்தேவைகள் நிறைவேற அதன் திறமைகள் தூண்டப்படுவதால் விளையும் பயனே ஆகும்" என்று கூறினார். எனவே கற்றலின் மூலமே திறன்களை வெளிப்படுத்த முடியும் என நம்ப முடிகிறது.

ஆகவே மனிதன் வையத்தில் வாழ்வாங்கு வாழ்வதற்கும், மனித குலம் நீடித்து நிலைப்பதற்கும் கற்றல் இன்றியமையாததாக அமைகின்றது. மனிதனின் உள்ளூறைந்திருக்கும் ஆற்றல் கற்றல் மூலம் வெளிக்கொணரப்பட்டு மனிதன், தானும் மற்றவர்களும் வாழக்கூடிய வகையில் தனது செயற்பாட்டினை மேற்கொண்டு நவீன உலகத்தைப் படைக்கின்றான். நவீன உலகில் வாழக் கூடிய மனிதனாகத் திகழ்வதற்குக் கற்றல் இன்றியமையாததாகின்றது என்பதே இக் கட்டுரை மூலம் வெளிப்படுத்தப் படுகிறது.

திருமதி. ய. முரளிதரன்
ஆசிரியர்

# உலகமயமாதலும் உருக்குலையும் மனிதமும்

அறிவுப் பிரவாகம் ஊற்றெடுக்கும் இன்றைய 21ஆம் நூற்றாண்டில், உலகமயமாதல்/ பூகோளமயமாதல் மற்றும் அறிவுப் பொருளாதாரப் போக்குகள் தீவிரம் பெற்றுள்ளன. பரந்து விரிந்து வியாபித்திருந்த உலகு இன்று பூகோளக்கிராமமாகச் சுருங்கிவிட்டது. அதாவது பூகோள ரீதியாகத் தொலைவு எனும் நிலை தாண்டி அரசியல், பொருளாதார, சமூக ரீதியில் உலகு அண்மித்துச் செயற்படுவதே பூகோளமயமாதல்/ உலகமயமாதல் எனப்படுகின்றது.

உலகமயமாதல் எமக்களித்த நன்மைகள் பல அவை: -

- அறிவுப் பிரவாகம்
- சர்வதேசதர உறுதிப்பாடு
- தரமான கல்வி
- அறிவுப் பொருளாதாரம்
- புதிய தொழில் வாய்ப்பு
- சுற்றுலாத்துறை விருத்தி
- அந்நிய செலவாணி
- தொழிநுட்ப விருத்தி
- புதிய கலாசார பரிமாற்றம்

என்பன போன்ற அனுகூலங்களை மாத்திரமன்றி மனித இருப்பையே கேள்விக்குறியாக்கும் ஆரோக்கியமற்ற சமுதாயம் உருவாவதற்கும் அடிப்படைக் காரணம் உலகமயமாதலே.

ஆரோக்கியம் என்பது நோய்நிலைகளிலும் இயலாமையிலும் இருந்து விடுபட்ட நிலை மாத்திரமல்ல; ஒருவர் தம் உடல், உள, சமூக ஆத்மீக நன்னிலைகளில் அடையக் கூடிய அதிகூடிய நிலையே ஆரோக்கியமாகும். “ஆரோக்கியம்” மனிதனின் அடிப்படைப் பிறப்புரிமைகளில் ஒன்றாகும். ஆனால் இன்று எம் மத்தியில் முழுமையான ஆரோக்கியத்துடன் உலாவருவோர் எத்தனை பேர்?

அன்றைய நாடுகாண் பயணிகளும், தேசசஞ்சாரத்தில் ஈடுபட்ட அறிஞர் பலரும் ஈழமணித்திருநாட்டின் பௌதிக வளங்களை மட்டுமன்றி, அவர்தம் பண்பாட்டு விழுமியங்களையும் வியந்து போற்றினர்.

அராபியர்களால் “செரண்டிப்” (சுவர்க்கபூமி) எனவும்,றொபேர்ட் நொக்ஸ்சினால் இந்நாட்டு மக்கள் ஒழுங்கு, விழுமியம் மனிதநேயம் உபகாரங்களில் ஈடுபட்டுள்ளனர் எனவும் ஜோன்டி மார்ஜோலி என்பவரால் “பூமியின் சொர்க்கம்” எனவும் பூஜிக்கப்பட்ட அன்றைய சுவர்க்கபூமி இன்று களையிழந்து, கதியிழந்து நிர்க்கதியாவதற்கு காரணம் உலகமயமாதலே.

உடையினால் மாத்திரம் ஒருவர் உயர்ந்தவர் ஆவதில்லை. உயர்ந்தவராவது உயர்வான செயல்களைச் செய்வதன் மூலமே. எமது பகட்டான போலி வாழ்வும், பகுத்தறிவு இருந்தும் பாமரரான எமது பண்பற்ற செயல்களுமே எம்மை அழிவுப் பாதைக்கு இட்டுச் செல்லும் வடிகால்கள். இயற்கையை நீ அழித்தால் இயற்கையால் நீ அழிவாய் எனும் மெய்மையை உணர்ந்தும் உணராதது போன்ற செயற்பாடுகளாலேயே மானிடம் மரணித்துப் போகிறது. சூழலை நேசி, சூழலை சுவாசி. சூழலுடன் இசைந்துவாழ்" எனும் தாரக மந்திரத்தை என்றைக்கு மனித இனம் அசட்டை செய்ததோ அன்றைக்கே எமது அழிவுக்கான அத்திவாரம் இடப்பட்டுவிட்டது எனலாம்.

இன்றைய நவீன உலகில், பழைய உலகின் மாற்றீடாக விளங்குபவை தொடர்புசாதனங்களும் இலத்திரனியல் சாதனங்களுமே. மனிதனது வேலைச்சுமையைக் குறைப்பதற்காக அறிமுகம் செய்யப்பட்ட சாதனங்களின் வருகையின் பின்பும் மனிதனுக்கு ஓய்வேது? மனிதன் இந்திரங்களை இயக்கிய காலம் மலையேறி. இன்று இயந்திரம் மனிதனை இயக்கும் காலம் வந்துவிட்டது. அதனால்த்தான் போலும் மனித வாழ்வே இயந்திரமயமாகிவிட்டது.

இன்றைய நவீன அவசர உலகில்

- ✯ வன்முறையான தொடர்பாடல்
- ✯ எதிலும் இலாப நோக்கு
- ✯ பணத்தை மையமாகக் கொண்ட வாழ்க்கை முறை
- ✯ இயந்திரத்துக்கு மனிதனை விட மதிப்பளித்தல்
- ✯ அதீத சுயநலப்போக்கு
- ✯ சுயதிறன் விருத்தியின்மை
- ✯ சூழலுடனான பொருத்தமற்ற இடைவினை
- ✯ நெறி பிறழ்வான நடத்தைக் கோலங்கள்
- ✯ முரண்பாடான சமூகம்
- ✯ மனித நேயத்தைப் புறந்தள்ளல்
- ✯ எதிலும் இயந்திரத்தன்மை

ஆகியபண்புகளே மலிந்துகிடக்கின்றன. இவைதானா உலகமயமாதல் எமக்களித்த அருங்கொடைகள்? ஒட்டுமொத்தத்தில் உலகமயமாதல் போக்குகள் இயந்திரமயமான வாழ்க்கைத் தத்துவத்தையே உருவாக்கியுள்ளது என எண்ணத் தோன்றுகிறது.

"என்னால் மட்டும் வாழ முடியும்" எனும் அகங்கார மைய நிலைப்பாடே எம்மை அழிவுப் பாதைக்கு இட்டுச் செல்லும் மைய விசைச் சக்கரம். கூட்டு சமுதாயப் பண்பை எப்போது மனித இனம் மீறத் தொடங்கியதோ அப்போதே எமது வாழ்வின் இருப்புக்கான கேள்விக்குறியும் ஆரம்பித்துவிட்டது. இன்று அது ஆபத்து விளிம்பில் எம்மை அலைக்கழிக்கிறது. எனவே மரணித்துக் கொண்டிருக்கும் மானிட நேயத்தை, மரணத்தின் கோரப்பிடியிருந்து விடுவித்துப் பழைய உலகினை மீட்டெடுக்கும் இலட்சிய பயணத்தில்

சகலதரப்பினரும் பங்கெடுத்துக் கொள்ள வேண்டியது காலத்தின் கட்டாயம் ஒவ்வொரு நீர்துளியும் இணைந்து பெருநதியாக உருவெடுப்பது போல் ஒவ்வொரு தனிமனிதனும் இணைந்து பேதம் கடந்த மனித நேயத்தை வளர்ப்பதற்குத் திடசங்கற்பம் பூணவேண்டும். அதற்காக இயந்திர சாதனங்கள் எவ்வாறு பழைய உலகைக் கபளிகரம் செய்தன என்பது குறித்து தீவிரமாக ஆராய்வதும் அவற்றினை வெற்றிகொள்ள அனைவரும் ஒருமித்து உழைப்பதுமே முதலில் செய்ய வேண்டிய பணி

மேகங்களும் கடுமையான காற்றும் இன்றி வானவில் தோன்ற முடியாது. அவ்வாறே சவால்களின்றி வாழ்க்கைப் பயணத்தில் வெற்றி பெற இயலாது. சுயத்தைத் தொலைத்துவிட்டு முகம் இல்லா மனிதர்களாக ஊசலாடும் நிலையிலிருந்து மீண்டு, சுயத்தைக்கட்டியெழுப்புவதற்கு, பல்வேறு சவால்களுக்கு வெற்றிகரமாக முகம் கொடுக்கத்தக்க திட உறுதியை வளர்த்துக் கொள்ள வேண்டும்.

பழையன கழிதலும், புதியன புகுதலும் கால வழுவல் எனும் இயற்கை நியதிக்கேற்ப புதிய மாற்றங்களை உள்வாங்க வேண்டியது அவசியம்எனினும் அதனது பொருத்தப்பாடறிந்தே அதனை ஏற்றுக் கொள்ள வேண்டும்.

இன்றைய எமது சமூகத்தில் பெரும்பாலான பெற்றோர்கள் தத்தமது குழந்தைச் செல்வங்களது இயலளவு, ஆற்றல்களைச் சரியாக இனங்கண்டு கொள்ளாது பிறருக்காக வாழ்தல், பிறர் விமர்சனங்களுக்காக வாழும் போலி வாழ்வுக்குத் தம்மை அடிமையாக்கிக் கொள்கின்றனர். இதன்மூலம் “யானை தன் தலையில் தானே மண்ணை வாரிக் கொட்டுவது போல” பலவீனமான எதிர்கால சந்ததியை உருவாக்குவதில் கவனமாகப் பங்கெடுத்துக் கொள்கின்றனர்.

தமது வாழ்வு அர்த்தமற்றதெனச் சிந்திக்கும் ஒருவர் மகிழ்ச்சியற்றவராக இருக்கின்றார். இன்று இத்தகைய மனப்போக்குடையவர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்துச் செல்வதாலேயே தற்கொலை முயற்சிகள் அதிகரித்துச் செல்கின்றன. எனவே வாழ்க்கைத்தத்துவத்தைச் சரியாகப் புரிந்து கொண்டு சூழலுடனும், சமூகத்துடனும் இயைந்து வாழும்பண்பை வளர்ப்பதனூடு மனிதத்தின் இருப்பினை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு உறு துணையளிக்கும் கல்வியை வழிப்படுத்த வேண்டும்.

உலகின் முன்னணி நாடுகள் பலவும் இன்று நவீனத்திலிருந்து பழைமைக்குத் திரும்புகின்றன. மாணவர்களது உள்ளார்ந்த திறன் விருத்தியைக் கருத்திற் கொண்டு கணிப்பொறிக்குப் பதிலாக மனக்கணிதத்துக்கு மீண்டும் முக்கியமளிக்கின்றன. அதற்காக “அபாக்கஸ் ”(abacus) போன்ற நுட்பங்களைக் கையாளுகின்றனர்.

இலங்கை போன்ற வளர்முக நாடுகளைப் பொறுத்தவரையில் விழுமியக்கல்வி, சமயக்கல்வி, அழகியற்கல்வி என்பவற்றை மிகப் பொருத்தமான முறையில் மாணவர் கற்பதற்கு மட்டுமன்றி, கற்றவாறு ஒழுகுவதற்கும் வழிப்படுத்துவதனூடு நவீன மாற்றங்களை உள்வாங்கிக் கொள்வதே மிகப் பொருத்த முடையதாகும்.

*சமய விழுவியக் கல்வியில் அடங்காத தத்துவம் வேறு எதிதலும் இல்லை எனலாம். விஞ்ஞானரீதியாக விளக்கமளிக்கப்படும் கருத்துக்கள், உண்மைகளின் தொன்மையை நாம் சமயத்தினுள் காணலாம். ஆனால் அவ்வுண்மைகள் சரியாக இனங்காணப்படாமல் தவறாக கருத்துநிலையில் நோக்கப்படுவதனாலேயே சமயம் என்பது இழிவானது, நாகரீகமற்றது என எண்ணப்படுகிறது.*

*மனித ஆளுமையில் அழகியற்கல்வியும் பெரும்பங்கெடுக்கின்றதுஎனலாம். அழகியல் துறையினுள் நாடகமும் அரங்கியலும் எனும் பாடத்தினை எடுத்து நோக்கின் வரலாறு, விஞ்ஞானம், தத்துவம் சீர்மியம், சமூகவியல் ஆகிய அனைத்துப் பாடப்பரப்புக்களையும் உள்ளடக்கியிருப்பதால் பரந்த அறிவு பெறப்படுகிறது. இது செயன்முறையுடன் கூடிய உடலுக்கும் உள்ளத்துக்குமான வளப்படுத்தல் பயிற்சிவழியான பாடமாகையால் 21ஆம் நூற்றாண்டில் எதிர்பார்க்கப்படும் தேர்ச்சித் திறன்களான கற்பனை விருத்தி ,சுயதீர்மானமெடுக்கும் திறன், பிரச்சினை விடுவித்தல் திறன் ஆலோசனையும் வழிப்படுத்தலும் தலைமைத்துவப் பண்பு, தான்தொடங்குமாற்றல், கிரகிப்புத்திறன் ,படைப்பாகக்கத்திறன், தொடர்பாடல்திறன், சவால்களுக்கு வெற்றிகரமாக முகம்கொடுக்குமாற்றல், சுயதேடல், சுயகற்றல் போன்ற சமூகத்திறன் விருத்திக்கும் வழிசமைக்கின்றது. மேலும் அழகியலுணர்வு, புரிந்துணர்வு விட்டுக் கொடுக்கும் மனப்பாங்கு, மகிழ்ச்சியாக வாழ்தல், உள அழுத்தங்களிலிருந்து விடுபடல் பயனுள்ள பொழுது போக்குகளில் ஈடுபடல், நவீன உபகரணங்களைக் கையாளல், சூழலுடனும் சமூகத்துடனும் இயைந்து வாழல் என்பன போன்ற மனப்பாங்குகளும் விருத்தி செய்யப்படுகின்றன. எனவே ஒற்றுமை விழுமியத்தைக் கட்டியெழுப்புவதனூடு எமது இருப்பை உறுதிப்படுத்தவல்ல பிரயோகக் கல்விக்கு வழிசமைப்பது அவசியமாகும்.*

*மாற்றமே உலகில் நிரந்தரம். நேற்றைய உண்மை இன்று பொய்யாகலாம். எனவே உலகின் நவீன மாற்றங்களை விளங்கிக் கொண்டு நவீன சவால்களுக்குப் பங்களிப்புச் செய்யும் மாற்றங்களை இனங்கண்டு அவற்றை எமது பண்பாடு, கலாசாரத்துக்குப் பொருத்தமானவாறு பிரயோகிப்பதன்மூலம் வாழ்வை வளம்படுத்த வேணடும். நீரையும் பாலையும் பிரித்து அறியும் அன்னமாக நாம் ஒவ்வொருவரும் செயற்பட வேண்டியது காலநியதி அடியற்றமரம் போல் அல்லாடிக் கொண்டிருக்கும் மனிதத்தின் இருப்புக்கு ஆதாரமளிப்பது மானிடர் ஒவ்வொருவரதும் தலையாய கடமையல்லவா?*

*எம்மால் காற்றினை நிறுத்த முடியாது; ஆனால் காற்று வீசும் திசையை அறிந்து எம் வாழ்க்கைப் பயணத்தை மாற்றியமைக்க முடியுமல்லவா?*

**உசாத்துணை**

*பாலசூரிய ஏ.எஸ். சமாதானத்துக்கான கல்வி*

*முரண்பாடு தீர்த்தலுக்கானகல்வி பயிற்றுனர் கைந்நூல், தே. க.நி அணுசரணை* Unicef

*ஜெயராஜா ச. புதிய கல்விச்சிந்தனை*

திருமதி ஜீ. கேசவன்

ஆசிரியர்

# அனைவரையும் அரவணைப்பது இறையாட்சி

அடுத்திருப்பவனுக்கு அன்பு காட்ட வேண்டும் என்ற கட்டளைக்கு இயேசு முற்றிலும் புதியதொரு பொருள் கொடுத்தார். உலகில் வாழும் அனைத்து மக்களும் நம் அன்புக்கு உரியவரே நண்பராயினும், பகைவராயினும், ஒரே இனத்தவராயினும் பிற இனத்தவராயினும் எல்லா மக்களுக்கும் அன்பு காட்ட வேண்டும் என்பது தான் இயேசுவின் போதனையாக இருந்தது. இயேசுவின் ஆட்சியில் பகைவன் என்ற சொல்லுக்கே இடமில்லை. பகைவனும் ஒருவனுக்கு அயலவனாக உறவினராக மாற முடியும் மாற வேண்டும் என்று தான் இயேசு போதித்தார். அதனால் தான் இயேசு கூறுகின்றார் உங்களை வெறுப்போருக்கு ஆசி கூறுங்கள் உங்களை இகழ்ந்து பேசுவோருக்காக இறைவனிடம் வேண்டுங்கள் என்பதாகும்.

இவ்வாறாக அனைவரையும் இயேசு இறையாட்சியில் பங்கு கொள்ள அழைத்தார். மனிதன் மட்டில் நாம் காட்ட வேண்டிய அன்பைப் பற்றி இயேசு தன் வாழ்வில் காட்டி இருக்கின்றார். இறையாட்சியில் உருவாகுவது சாதாரண குடும்பஉணர்வு அன்று. அது மனித நேயம்நிறைந்தது. பரந்த குடும்ப உணர்வு உள்ள இடத்தில் குறுகிய குடும்ப உணர்வுக்கு இடமில்லை.

இயேசுவின் பணி அவரின் வாழ்வு முழுவதுமே புதிய மனித நேயத்தை கட்டியெழுப்புவதாக அமைந்திருந்தது. ஆனால் இயேசு அறிவித்த செய்தியும் அவர் புரிந்த செயல்களும் மக்கள் மனதில் வெவ்வேறு எண்ணங்களை எழுப்பியிருந்தன. சிலர் அவரைப் பேய் பிடித்தவராகக் கண்டனர். அவர் நிலை தடுமாறி புத்தி சுயாதீனமற்றவராக ஆகிவிட்டார். என்று கூட எண்ணினார். ஆனால் மரியாளிடம் உடலெடுத்து மனிதனாய் பிறந்த இயேசு மரியாளோடும் பிற உறவினரோடும் தமக்கிருந்த இயற்கை உறவை மனிதர்கள் “குடும்ப உறவாக” “குரு உறவாக” புரிந்து கொள்ளக் கூடாது என்பதில் கவனமாயிருந்தார்.

எல்லா மனிதர் மீதும் அன்பு காட்ட வேண்டும் என்று கூறிய இயேசு பரிசேயர்கள், மறைநூல் அறிஞர்கள் மட்டில் அன்பு காட்ட மறுத்து செயலாற்றியது குற்றமாகக் கருதப்பட்டது. ஆனால் இயேசு பரிசேயரோடு வாதாடினார். அவர்களோடு பல காரியங்கள் குறித்து விவாதித்தார். அவர்களோடு பழகினார். விருந்துண்டார் ஆகவே பரிசேயர்களை அவர் புறக்கணித்தார் என்றே அவர்களை அந்நியர் என்று ஒதுக்கினார் என்றோ நாம் கூற முடியாது. நற்செய்தி நூல்களில் பல இடங்களில் இயேசு பரிசேயரோடு உரையாடிய நிகழ்ச்சிகள் விபரிக்கப்படுகின்றன. பரிசேயர்களின் வீட்டில் இயேசு உணவருந்தியதுண்டு. இவர்களுக்கு அறிவுரை கூறி அவர்களை நல்வழிப்படுத்த இயேசு பல முறை முயன்றார். பரிசேயரை இயேசு ஒருபோதுமே ஒதுக்கியதில்லை.

ஆனால் இயேசு பல தடவைகள் பரிசேயர்களைக் கடிந்து கொண்டார். காரணம் அவர்கள் தம்மை அழித்துக் கொண்டதோடு பிறரையும் அழித்துவிட முனைந்தார்கள். இயேசு விடுத்த எச்சரிக்கைகளைக் கேட்காமல் அவர்கள் காதுகள் மந்தமாய் போயின.

இயேசு பரிசேயர் மட்டில் காட்டிய கோபம் அவர்கள் தங்களையும் பிறரையும் அழிக்காமல் இருக்க வேண்டும் என்பதற்காகவே.

ஆகவே எல்லா மனிதரையும் அன்போடும் நேயத்தோடும் அரவணைத்ததன் காரணமாகத்தான் இயேசு ஏழைகள் பக்கம் சார்ந்து நின்றார். ஒடுக்கப்பட்டோரோடு தம்மை ஒன்று படுத்திக் கொண்டார். இவர்களுக்கு சொத்து ஒன்றுமில்லை, மனிதன் ஒன்றே இவர்களுக்கு சொத்தாக இருந்தது. இயேசு ஏழைகளுக்கும் ஒடுக்கப் பட்டோருக்கும் தனிப்பட்ட அன்பு காட்டினார். இதனால் இயேசுவின் இந்த தனி அன்பு மனிதரை வெறுத்து ஒதுக்கிய அன்பு அல்ல. அவரது அன்புக்கு அடிப்படை மனித நேயம் என்ற பரந்த அன்பு. அனைவரையும் அரவணைக்கும் அன்பு.

திரு. ஜே. ஜோண்கியூபேட்
ஆசிரியர்

- ✯ உலகிலேயே மிகச் சிறந்த சீர்திருத்தவாதி யார் தெரியுமா? தன்னைத் திருத்திக் கொள்பவன் தான்.
- ✯ வாழ்க்கையை வளமுள்ளதாக ஆக்கிக் கொள்ளும் முயற்சிக்குப் பெயர் தான் கல்வி.
- ✯ நீ பின்னால் இரு முன்னால் கொண்டுவந்து நிறுத்தப்படுவாய்.
- ✯ பிறர் குறை காண்பவன் அரை மனிதன், தன் குறை காண்பவன் முழு மனிதன்.
- ✯ மனிதனுக்குத் தரவேண்டிய மூன்று உயர்ந்த பட்டங்கள் தியாகி, வீரன், சான்றோன்.
- ✯ செயல் இல்லாக் கல்வி ஒட்டகத்தில் ஏற்றப்பட்ட சுமையை போன்றது.
- ✯ கல்லாகாத இதயமும், களைக்காத மனப்பாங்கும், மற்றவர்களைத் தேவையற்ற விதத்தில் நோகச் செய்யாத அணுகு முறையும் கொண்டிரு.

# மாணவர் கல்வியும் பாடசாலைகளும்

மாணவர்கள் ஒவ்வொருவரிடமும் குறிப்பிட்டளவு உள்ளார்ந்த ஆற்றல்கள் இருக்கின்றன. இவ்வாற்றல்களை விருத்தி செய்கின்றமைக்கான அறிவாற்றல் சார்ந்த சூழல் இன்றியமையாததாகும். எனவே தான் கல்வி மாணவர்களின் பூரண வளர்ச்சிக்கான வாய்ப்பினை வழங்குகின்றது எனலாம். பூரண வளர்ச்சி என்பது மாணவனது உடல், அறிவு, மனவெழுச்சி. சமய ஒழுக்கம் என்பவற்றை உள்ளடக்கிய ஆளுமை வளர்ச்சி என அறியப்படுகின்றது.

கல்வி என்பது தாயின் கருவறையில் இருந்து கல்லறை வரை தொடரும் ஒரு தொடர்நடவடிக்கையாகும். கல்வி என்பதனுள் பல்வேறு விடயங்கள் உள்ளடங்கியுள்ளன. பரந்து பட்ட தெளிவான விளக்கம், அறிவினைப் பெற்றுக் கொள்ளல், திறன்களை வளர்த்தல், எண்ணக்கரு உருவாக்கம். சமூகப் பெறுமானங்கள், சாதக மனப்பாங்குகளை ஆழப்பதியவைத்தல் ,ஆர்வத்தைத் தூண்டுதல், சிறந்த பழக்க வழங்கங்களை உருவாக்குதல் ஒன்றின் மதிப்பை அறிந்து கொள்ளல் எனப் பல்பரிமாணம் பெறுகின்றது.

கல்வியானது திரள் பெறுமானம் உடையது. விளைபயன் மிக்கது இவ்விளை பயனானது தனியாள் தேவை, விழுமியங்கள் கருதியது சமூகப் பெறுமானங்கள் பொருந்தியதாக விளங்க வேண்டும் இவ்வாறான முக்கியத்துவம் மிக்க கல்வியினை வழங்கும் முறைசார்ந்த அமைப்பு பாடசாலையே ஆகும். இப்பாடசாலைகளே ஆரம்பக் கல்வி, இடைநிலைக்கல்வி, சிரேஸ்ட இடை நிலைக்கல்வி ஆகியவற்றை வழங்கும் நிறுவனங்களாக விளங்குகின்றன. இப்பாடசாலைகள் நிலைத்த தன்மை வாய்ந்த சமூக நிறுவனங்களாகும். சமூகத்தை பிரதிபலிக்கும் விம்பங்களாக விளங்குகின்றன. இப்பாடசாலைகளின் தொழிற்பாடுகளாக பின்வருவன காணப்படுகின்றன.

**பல்பக்கக் கல்வி :–**

மரபு சார்ந்த பாடசாலைகளில் எழுத்து, வாசிப்பு, ஒப்புவித்தல் என்ற நிலையில் இருந்து தற்போதைய நவீன பாடசாலைகள் வாசிப்பு, எழுத்து, கணிதம், பொழுது போக்குகள், உரிமைகள், பொறுப்புக்கள், தொடர்புகள் ஆகிய ஏழு விடயங்களில் கவனம் செலுத்தி பல்பக்கக் கல்வியை வழங்குகின்றன.

**ஜனநாயகத்திற்கான பயிற்சி வழங்குதல்**

பாடசாலைகள் மாணவர்கள் ஜனநாயக சமூகத்தில் வாழ்வதற்கான ஜனநாயக முறை சார்ந்த பயிற்சிகளை பாடசாலைக் காலத்தில் வழங்க வேண்டும். இதனூடாக மாணவர்கள் ஒன்று பட்டு ஒற்றுமையுடன் வாழப் பழகிக் கொள்வதுடன் உரிமைகளையும் கடமைகளையும் அறிந்து கொள்வார்கள். இது ஜனநாயக சமூக அமைப்பில் மாணவன் இணைந்து கொள்வதற்கும் பொறுப்புள்ள நாட்டின் குடிமகன் என்ற வகையில் செயற்படுவதற்கும் தேவையான அறிவினை வழங்குகின்றது.

**கலாசாரத்தைப் பேணுதல் / பாதுகாத்தல்:**

பாடசாலைகள் சமூக வாழ்க்கை முறை பழக்க வழக்கங்கள், ஒழுக்கம் ஆகியவற்றை பாதுகாத்து மாணவர்களுக்கு வழங்கும் பெறுமதிமிக்க செயற்பாட்டினை

மேற்கொள்ளுகின்றன. பாடசாலைகளே ஒரு பரம்பரையில் இருந்து இன்னொரு பரம்பரைக்கு கலாசார விழுமியங்களை கடத்தும் செயற்பாடுகளை மேற்கொள்கின்றன.

**சமூக மாற்றங்களுக்கான முகவராகச் செயற்படல்**

முன்னேற்றம் காணவிளையும்பாடசாலைகள் புதிய தலைமுறையினரை அவர்களது பெற்றோர்கள் இருந்த நிலையில் வைத்திருக்க விரும்பாது உலகில் ஏற்படும் தொழில் நுட்பம் சார்ந்த மாற்றங்களை மாணவர்களுக்கு அறிமுகப்படுத்தும் பணியினை பாடசாலைகளில் ஊடாக மேற்கொள்ள வேண்டியுள்ளது.

**விஞ்ஞான மனப்பாங்கினை வளர்த்தல்**

பாடசாலைகளின் ஊடாக விஞ்ஞான ரீதியான விசாரணை முறையினை வளர்த்தெடுத்தல் வேண்டும். தகவல்களைத் திரட்டல், ஆதாரங்களைப் பெறல், தீர்மானங்களை மேற்கொள்ளல் போன்றவற்றில் மாணவர்களுக்கு போதியளவில் பயிற்சிகளை வழங்க பாடசாலை நிலைக்களனாகும். இது மாணவர்களை ஆக்க பூர்வமான சிந்தனைகளின் ஊடாக தீர்வுகளைக் காண வழிகாட்டும்.

**பாடசாலை வாழ்க்கை பாடசாலைக்கு வெளியே உள்ள வாழ்க்கையுடன் தொடர்புபட்டதாக இருத்தல்**

பாடசாலை வாழ்க்கையானது சமூக வாழ்க்கையுடன் தொடர்புபட்டதாக இருக்குமிடத்து மாத்திரமே மாணவன் தனது பிற்கால சமூக வாழ்க்கையில் பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கக் கூடியவனாக, சவால்களை வெற்றிகொள்ளக் கூடியவனாகவும் மாற்றி அமைக்கும்.

**ஒன்றை ஒன்று சார்ந்திருத்தல் பெறுமானம்**

மாணவர்கள் சக மாணவர்களுடன் சமூகத்துடன் தனது நாட்டு மக்களுடன். உலக மக்களுடன் இணைந்து வாழும் பண்புகளை பாடசாலைகளிலேயே விருத்தி செய்தல் வேண்டும். இவ்வகையான சந்தர்ப்பங்களை பாடசாலைகளே உருவாக்கிக் கொடுக்க வேண்டும்.

**மாணவனின் பூரண வளர்ச்சிக்கு வாய்ப்பினை வழங்கல்**

பாடசாலைகள் மாணவர் மையச் செயற்பாடுகளை மேற்கொள்கின்றன. அதற்கான உளவியல் அணுகு முறைகளையே கையாளுகின்றன. மாணவர்களிடத்தில் உயர் ஆளுமையை விருத்தி செய்தல் அவசியமாகும். இதற்கான உடல், உள அறிவுத் தொகுதிகள் வளர்த்தெடுக்கப்படல் வேண்டும். இவற்றுக்கு பாடசாலைகள் வாய்ப்பினை வழங்கி பூரண வளர்ச்சிக்கு உதவ வேண்டும்.

**தனியாள் வேறுபாடுகளை அங்கீகரித்தல்**

மாணவர்களின் தனியாள் வேறுபாடுகள் இனங்காணப்பட்டு அங்கீகரிக்க வேண்டும். அவை பாராட்டப்பட வேண்டும். அவர்களது தனிப்பட்ட திறமைகளை வளர்த்தெடுப்பதற்கான சந்தர்ப்பங்கள் உருவாக்கிக் கொடுக்க வேண்டும். மாணவர்களது இயல்புநிலை விவேகத்திற்கேற்ப கற்கை நெறிகளை வகுத்துக் கொடுக்க வேண்டும்.

**சமூக நீதியின் மேலான பேரார்வம்**

இலங்கையில் பல்இனம், பல்வேறு சமயங்கள் ,நம்பிக்கைகள்,கொள்கைப் பிடிவாதங்கள் போன்ற பல்வேறுபட்ட காரணிகள் உள்ளன. இவ்வகையான சூழ்நிலைகளில் சமூக நீதிகள் மீறப்படும் சந்தர்ப்பங்கள் , துஸ்பிரயோகங்கள் என்பன ஏற்படுவதற்கான வாய்ப்புக்கள் உண்டு. பாடசாலைகள் இவற்றின் தீய விளைவுகளை மாணவர்களின் உள்ளத்திலும் சிந்தனையிலும் உணரச் செய்து சமூக நீதியின் மேலான பேரார்வத்தை வளர்க்க வேண்டும்.

**நன்நடத்தைகளை உருவாக்குதல்**

ஒழுக்கம் வாழ்வியல் சார்ந்த கல்வியானது கோயில்கள், ஆதீனங்கள், தேவாலயங்கள் ஊடாக வழங்கப்பட்டன. நன்னெறி சார்ந்த ஒழுக்க விதிகளை புகட்டுவதில் கூட்டுக் குடும்பமும் முக்கிய பொறுப்பை ஏற்றிருந்தது. தற்பொழுது சிறந்த நன்நடத்தைகளை மாணவர்களிடத்து உருவாக்குகின்ற பாரிய பொறுப்பு பாடசாலைகளுக்கு உண்டு.

**தொழிற் றுறை சார்ந்த கல்வியை வழங்கல்**

வரலாற்றின் இடைக்காலப்பகுதியில் தொழிற்பயிற்சிகள் குடும்ப அடிப்படை யிலேயே வழங்கப்பட்டன. மகன் தந்தையுடன் இணைந்து தொழிலாற்றுவதன் மூலம் இவ்வகை தொழிற்பயிற்சிகளை பெற்றுக் கொண்டான். ஆனால் பொருளாதாரம் தொழில்நுட்பம் வளர்ச்சி கண்டுள்ள தற்போதைய நிலையில் குடும்பப் பயிற்சி நடைமுறை அருகி வருகின்றது. எனவே பாடசாலைகள் தொழில் கல்வியையும் மாணவர்களுக்கு வழங்கும் கட்டுப்பாடுகளைக் கொண்டுள்ளது

**சுயவிருத்திக்கான சுதந்திரம்**

மாணவர்களின் ஆக்க பூர்வமான சிந்தனை விருத்திக்கும், ஆக்க பூர்வமான செயற்பாடுகளுக்கும் மாணவனுக்கு போதியளவு சுதந்திரம் வழங்கப்படவேண்டும். ஆனால் இது கட்டுப்பாடற்ற சுதந்திர அனுமதியாக இருக்கக்கூடாது. மாணவர் தமது ஆற்றல்களை முழுமையாக வெளிப்படுத்தி செயற்படுவதற்கான சுதந்திரத்தையே இது கருதுகின்றது. இதற்கு ஆசிரியருடைய நெறிப்படுத்தல், வழிகாட்டல்கள் மிக அவசியமாகும். மாணவர்கள் தமது சொந்த ஆளுமையை வளர்த்துக் கொள்வதற்கு தடைகள் இல்லாமல் பார்த்துக் கொள்ளல் வேண்டும்

**நற்பயன் விளைவிக்கின்ற ஆக்கச் செயற்பாடுகளுக்கான இடம்**

பாடசாலைகள் நிகழ்ச்சித் திட்டங்களில் பாடசாலைச் சமூகத்திற்கு பயனுள்ளதான கருமங்களுக்கு செய்முறை சார்ந்த பயிற்சிகளை வழங்கும் நிலையமாகவும் விளங்குவதல் வேண்டும்.

**பாடசாலைச்சூழல் வாழ்வியலின் மாதிரி எடுத்துக் காட்டாக விளங்குதல்**

பாடசாலையானது சமூகச் செயற்பாடுகளை பிரதிபலிக்கும் இடமாக விளங்க வேண்டும். ஆனால் இச் சமூகச் செயற்பாடுகள் சுத்திகரிக்கப்பட்டவையாகவும் இலகுபடுத்தப்பட்டவையாகவும் அமைய வேண்டும். அதே நேரம் கற்றல்

செயற்பாடுகளுக்கு இடையூறுகள் விளைவிக்காத வகையில் ஒழுங்குபடுத்தப் பட்டவையாகவும் இருத்தல் அவசியமாகும்.

**சமூக சேவை மையமாக விளங்குதல்**

சமூகத்தில் உள்ள பாடசாலையானது மாணவர்களைப் பொறுத்தவரை பயனுள்ளதும் விளைதிறன் மிக்கதுமான கற்றல் நிகழ்வுகளை உள்ளடக்கியதாக இருத்தல் வேண்டும். சமூகத்தின் பல்வேறு தரப்பினருக்கும் பயன்விளைவிப்பதாக சேவையாற்ற வேண்டும். சமூகப் பரிமாண வளர்ச்சியின் பால் இட்டுச் செல்லல் வேண்டும்.

**நிகழ்ச்சித் திட்டங்கள் ஒத்திசைவுடன் ஒருங்கிணைந்து ஒற்றுமையை வெளிப்படுத்தல்**

பாடசாலை நிகழ்ச்சித் திட்டங்கள் யாவும் நன்கு ஒருங்கிணைக்கப்பட்டு திட்டங்கள் தூண்டல்களை ஏற்படுத்தக் கூடியவையாக இருத்தல் வேண்டும். மாணவர்களதும், பாடசாலைச் சமூகத்தினதும் அறிவு, திறன், மனப்பாங்குகளில் சாதகமான விருத்தி கருதிய மாற்றத்தன்மைகளை ஏற்படுத்தக் கூடியவையாக இருத்தல் வேண்டும்.

கல்வியின் பிரதான நோக்கங்களுள் மாணவர்களை சமூக விழுமியங்களை பேணக் கூடியவர்களாயும் சமூகப் பிரச்சினைகளை தீர்க்கக் கூடிய ஆற்றல் உடையவர்களாகவும் சிறப்பாக சமூகத்துடன் இயைந்து செல்பவர்களாகவும் வளர்த்தெடுப்பது முக்கியமானவையாகும். சமூக உயர்வுக்கு வகுப்பறைச் செயற்பாடுகளை நெறிப்படுத்தல் முக்கியமாகின்றது.

கல்வி என்பது வாழ்க்கையோடு இணைந்த ஒன்றாகும். அது ஒவ்வொரு தனிமனிதனுக்கும் வாழ்வதற்கு வேண்டிய பயிற்சியைத் தருவதாக அமைகின்றது, இவ்வகையிலேயே பாடசாலைகள் எல்லாம் வாழ்க்கைக் கூடங்களாக அமைய வேண்டும் என வலியுறுத்தப்படுகின்றது.

கல்வி என்பது அறிவைப் பெற்றுக் கொள்வதில் மாற்றத்தைக் கொண்டு வருவது மட்டுமன்றி செயலில் திறமை, சிந்தனை உருவாக்கம் பழக்க வழக்கங்களில் மாற்றம் ஏற்படுதல், மனோநிலை மாற்றம் போன்றவைகளையும் ஏற்படுத்திக் கொடுக்கின்றது. இவற்றுக்கு பாடசாலைகள் நிலைக்களன்களாக விளங்குகின்றன.

பாடசாலை மாணவர்களுக்கு கல்வி புகட்டும் ஒரு முறை சார்ந்த நிறுவனமாகும். அது செய்வினை நிகழ்வுகளுக்கான இடமாகும். மாணவர் கல்வியில் செல்வாக்குச் செலுத்தும் பல்வேறு நிறுவனங்களையும் ஓர் இறுக்கமான வரையறைக்குள் உட்படுத்த முடியாது. ஏனெனில் முறைசார்ந்த பாடசாலையினது மாணவர்கள் பல விடயங்களை முறைசாரா வழிகளினூடாக பெற்றுக் கொண்டாலும் மாணவனது கல்வியில் முதன்மை வாய்ந்த முறைசார் கல்வி முகவர் நிறுவனமாக விளங்குவது பாடசாலை என்பது ஏற்றுக் கொள்ளப்பட்ட உண்மையாகும்.

திரு. க. நித்தியானந்தன்
ஆசிரியர்

# ஈரநிலங்கள்

உலகினுடைய பௌதீகச் சூழலில் தனக்கே உரித்தான பயன்பாடுகளையும் தனித்துவமான பண்புகளையும் கொண்டு இயங்கும் சூழலாக ஈர நிலஉயர்நிலச் சூழலானது காணப்படுகின்றது.

உலகினுடைய எல்லாப் பகுதிகளிலும் ஈரநிலங்கள் காணப்பட்டாலும் அயனப் பகுதியில் ஆபிரிக்காவிலும் ஆசியாவிலும் தென்மத்திய பிரேசிலிலும் முக்கியமான ஈரநிலங்கள் காணப்படுகின்றன.

ஈர நிலமானது சதுப்பு நிலம் ,தாழ்வு நிலம் அல்லது முற்றா நிலக்கரி நிலமாயினும் அலையற்ற சமயங்களில் 6 m ற்கு மேற்படாத ஆழம் கொண்ட இயற்கையான அல்லது செயற்கையான நிலையான அல்லது பாய்கின்ற நன்னீர் உவர்நீர் பகுதிகளை உள்ளடக்கியவற்றை ஈரநிலம் எனக் குறிப்பிடுகின்றது.

இத்தகைய ஈரநிலங்களானவை மண், தரைத்தோற்றம், காலநிலை, நீர், நீரின் இரசாயனத் தன்மை, தாவரங்கள் மற்றும் மனித தலையீடுகள் போன்றனவற்றிற்கு ஏற்ப உள்ளூர் மற்றும் பிரதேசரீதியில் பரந்து காணப்படுகின்றன.

இவ் ஈரநில வகைகளுக்குட் சேறு, சக்தி, நீர்த்தன்மையுள்ள நிலப்பகுதி, சேற்று நிலம், சதுப்பு நிலங்கள், வெள்ளச் சமவெளிகள் போன்றன உள்ளடங்குகின்றன.

ஈரநில விலங்குகளாக கபரகொய்யா (உடும்பு, மீன் இனங்கள் (விரால், கெளிறு, செங்கொரசி, விலாங்கு) நீர்ப்பல்லி, பறவைகள், நீலக்கோழி, தாமரைக் கோழி, நத்தைக்குத்திமீன் கொத்தி, நீர்க்காகம். அல்லது சிறுநீர்க்காகம், காட்டுத்தாரா கடற்புறா, கொக்கு நீர்ப்புள்)

ஈரநிலத் தாவரங்களாக கண்டல்,பெருங்கிண்ணை, பன்புல் ,அல்லி, தாமரை, நீலோற்பலம், சிறுகண்டல், வெண்கண்டல், நரிக்கண்டல், தில்லை


ஈரநிலங்களின் முக்கியத்துவங்களாக

உயிர்ப் பல்வகைமைப் பேணுதல்

உள்ளூருக்குரிய பறவையினங்களைப் பாதுகாக்கவும் வெளிஊருக்குரிய பறவையினங்களைக் கவரவும் ஈரநிலங்கள் உதவுகின்றன.

உயிரினங்களுக்குரிய வாழ்வாதாரத்தை ஈரநிலங்கள் வழங்குகின்றன.
சூழலின் உயிர்ச் சூழல் செயற்பாட்டில் பாரிய பங்காற்றுகின்றன.
சூழற் தொகுதியின் உறுதிநிலையைப் பேணுகின்றன.


ஈரநிலங்களின் பயன்களினை எடுத்துக் கொண்டால்




**படம் - 1, உலகில் ஈரநிலங்களின் பரம்பல்**

மூலம் : World conservation monitoring centre, 1992

# இலங்கையில் ஈரநிலங்களின் பரம்பல்



1. ஊர்காவற்றுறை ஈரநிலம்
2. புங்குடுதீவு கடலேரி
3. யாழ்ப்பாணத் தீபகற்ப மேற்கிலுள்ள ஈரநிலங்கள்
4. உப்பாறு கடலேரி
5. தொண்டமானாறு கடலேரி
6. யாழ்ப்பாணக் கடலேரி
7. சுண்டிக்குளக் கடலேரி
8. பளை கடலேரி
9. நாயாறு கடலேரி
10. கொக்கிளாய்க் கடலேரி
11. பெரியகரச்சி, சின்னக்கரச்சிக் கடலேரிகள்
12. உலக்களி கடலேரி
13. மகாவலி கங்கை நீர் மேவு சமவெளி
14. மின்னேரியாக் குளம்
15. உப்பாறு (பனிச்சங்கேணி) கடலேரியும் உப்பளமும்
16. வண்டலூஸ் விரிகுடா, ஆனைத்துறை, தேனட்விரிகுடா
17. மட்டக்களப்பு வளைகுடா
18. மாதுறு ஓயா தேசிய வன ஈரநிலங்கள்
19. சேனாநாயக்க சமுத்திரம்
20. அறுகம்பைக் கடலேரி
21. லாஹுகல, கித்துலான குளங்கள்
22. யால (கிழக்கு) தேசிய வன ஈரநிலங்கள்
23. றுஹுணு (யால) தேசிய வன ஈரநிலங்கள்
24. பலட்டுப்பான பெரும் உப்பளம்
25. வீரவில, திஸ்ஸ, தெபற,யோத குளங்கள்
26. பூந்தள உப்பளம், அம்பிலிகால கடலேரி, மளல உப்பளம்
27. பெரும் உப்பளம், கரகன் உப்பளம்
28. லுனம கடலேரி, கலமெட்டிய கடலேரி
29. ஹோட்டன் சமவெளி தேசிய வன ஈரநிலங்கள்
30. பெல்லன்வில- அத்திடிய சதுப்பு நிலங்கள்
31. முத்துராஜவெல
32. நீர்கொழும்பு கடலேரி
33. முந்தல் குளம்
34. புத்தளம் கடலேரி
35. வில்பத்து தேசிய வன ஈரநிலங்கள்
36. நாச்சாதீவு குளம்
37. யோத குளம்
38. வங்காலைக் கடலேரி, பெரிய கடலேரி,மன் கடலேரி சார்ந்த ஈரநிலங்கள்
39. ஆதாமின் பாலம்
40. போக் வளைகுடா, பேய்த்துறை, விடத்தல் தீவுத்
41. இரணை தீவு

## படம் - 2 இலங்கையில் ஈர நிலங்களின் பரம்பல்

மூலம்: வன வள, சுற்றாடல் அமைச்சு, 1997

1. உலக விவசாயத்தில் கணிசமான பங்கு வகிக்கின்றன.
2. உவர்த்தன்மை, சேற்றுத்தன்மையால் பாதிக்கப்பட்ட நிலங்கள் கூட பதப்படுத்தல் மூலம் விவசாய நிலங்களாக மாற்றப்படுகின்றன.
3. ஈர நிலங்களில் மனிதனால் உருவாக்கப்படும் குளங்கள் விவசாய நிலங்களுக்கு நீர் வழங்கும் மூலமாகச் செயற்படுகின்றது
4. எரிபொருள் தேவையினைப் பூர்த்தி செய்வதில் முக்கிய பங்கு வகிக்கின்றன.
5. கரையோரப் பிரதேச மக்களின் எரிபொருள் தேவையினைப் பூர்த்தி செய்கின்றன.
6. ஈரநிலங்களிலிருந்து கிடைக்கின்ற மற்றொரு எரிபொருள் மூலமாக முற்றா 9. நிலக்கரி கருதப்படுகின்றன.
7. ஆறுகள், வெள்ளச் சமவெளிகள் போன்றவை வரலாற்றுக் கால நாகரீகங்களின் ஆரம்ப இடமாகக் காணப்பட்டன.
8. ஈர நிலங்களின் அழகு சுற்றுலாப் பயணிகளை அதிகம் கவருகின்றது
9. கைத் தொழில் சாலைகளுக்கான நீர் வழங்கும் மூலமாகவும் இவ் ஈர நிலங்கள் தொழிற்படுகின்றன.
10. ஈர நிலங்கள் சமூக கலாச்சார ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த பகுதிகளாகும்.

உலகளாவிய ரீதியில் ஈரநிலங்கள் அச்சுறுத்தலுக்குள்ளாகி வருகின்ற போதும் அச்சுறுத்தல் இடம் பெறும் வீதம் இடத்திற்கு இடம் வேறுபடுகின்றது.

1. மனித குடியிருப்புக்களின் அதிகரித்து வரும் ஊடுருவல்
2. கைத்தொழில் மற்றும் நகரமயமாக்கலுக்கான நில மீட்சிக்கு உட்படுதல் அதனுடன் தொடர்புபட்ட மாசடைதல்
3. வேட்டையடல் அதனுடன் தொடர்புபட்ட நடவடிக்கைகள்
4. கழிவகற்றல் செயற்பாடுகள்
5. வெள்ளப் பெருக்கைக் கட்டுப்படுத்த செயற்கையான அணைகள், தடுப்புச் சுவர்களை அமைத்தல்

ஈர நிலங்களைப் பாதுகாத்தல் தொடர்பாக ரம்ஸார் உடன்படிக்கைக்கு ஏற்ப செயற்படல் இங்கு முக்கியமானதாகும். ஈரானிலே ரம்ஸார் நகரில் 1971இல் இச் சம்மேளனம் நடைபெற்றது. 1975இலிருந்து இது நடைமுறைக்கு வந்தது.

"சர்வதேச ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்ததும் முக்கியமாக நீர்ப்பறவைகளின் வாழிடமான ஈரநிலம் பற்றிய ஒப்பந்தம்" என இதனை அழைப்பர்.

- ஈர நிலங்களை வினைத்திறனுடையதாக உபயோகித்தல்
- ஈர நிலங்களின் மாற்றத்தினையும் சூழல்த் தாக்க மதிப்பீட்டினையும் மேற்கொள்ளல்.
- ஈர நிலங்களில் இயற்கை ஒதுக்குப் பிரதேசங்களை விஸ்தரித்து அவற்றுக்குப் போதிய கண்காணிப்பும் வழங்குதல்
- ஈர நிலங்களை முகாமைசெய்ய, கண்காணிக்க ஆளணியினருக்கு பயிற்சியளித்தல்

## ஈரநிலங்கள்

கடல் கரையோர ஈரநிலங்கள் (உவர் நீர் ஈரநிலங்கள்)
- நதி முகத்துவாரங்கள்
- வற்றுப்பெருக்குச் சதுப்பு நிலங்கள்
- உவர் நீர்ப்பகுதிகள்
- உப்பு மற்றும் நன்னீர் கடனீரேரிகள்
- கண்டல் சதுப்பு நிலங்கள்
- முருகைக் கற்பார்கள்

உள்நாட்டு ஈரநிலங்கள்
- ஏரிகள்
- ஆறுகள்
- அருவிகள்
- நீரோடைகள்
- நீர்வீழ்ச்சிகள்
- சேற்று நிலங்கள்
- முற்றா நிலக்கரிப்பகுதிகள்
- வெள்ளச்சமவெளி

மனிதனால் உருவாக்கப்பட்ட ஈர நிலங்கள்
- கால்வாய்கள்
- குளங்கள்
- நீர் தேங்கி நிற்கும் பகுதிகள்
- கழிவு நீர் அதிகரிக்கும் பகுதிகள்

திருமதி. ந. குகதாசன்
ஆசிரியர்

### ஐ.நா. சபையுடன் இணைத்துள்ள சர்வதேச நிறுவனங்கள

1) UNICEF : சர்வதேசக் குழந்தைகள் நல நிதியம்- நியூயோர்க்
2) UNFPA : மக்கள் தொகைப் பிரச்சனை நிவாரணக்குழு - நியூயோர்க்
3) UNESCO : ஐக்கிய நாடுகளின் கல்வி, விஞ்ஞான, பண்பாட்டு முன்னேற்றக் கழகம் - பாரிஸ்
4) IMO : சர்வதேச நிதிக் கழகம்- வாஷிங்டன்
5) IAEA : சர்வதேச அணுசக்தி ஏஜென்ஸி - வியன்னா
6) ESCAP : ஆசிய மற்றும் பசுபிக் நாடுகளுக்கான பொருளாதாரக் கமிஷன் - பாங்கொக்
7) WHO : உலக சுகாதார நிறுவனம் - ஜெனிவா
8) IATA : சர்வதேச விமானப் போக்குவரத்து சிறுவனம் -மான்ட்ரீஸ்
9) FAO : உணவு மற்றும் விவசாய நிறுவனம் - ரோம்
10) GATT : வர்த்தகம் மற்றும் சுங்கவரி தொடர்பான பொது ஒப்பந்தம் - ஜெனீவா
11) UPU : சர்வதேச தபால் துறை அமைப்பு - போர்ண் சுவிற்லார்ந்து
12) WMO : உலக வானிலை ஆராய்ச்சி நிலையம் - ஜெனீவா

# விசேட வழிகாட்டல் ஆலோசனையும் மாணவ அபிவிருத்தியும்

பாடசாலைகளில் இனங்காணப்பட்ட மாணவர் குழுக்களில் சிலமாணவர்கள் சாதாரண மாணவர்களை விட வேறுபட்ட உடல், உள மனவெழுச்சிப்பண்புகளிலும், நடத்தைகளிலும் வேறுபாடு உடையவர்களாக காணப்படுகின்றனர். இவர்களே விசேட வழிகாட்டல் ஆலோசனை தேவைப்படும் பிள்ளைகள் எனப் படுகின்றனர். விசேட உதவிதேவைப்படும் பிள்ளைகளிற்கு விசேட கவனிப்பு வழங்கப்படாது விடின் நடத்தைப் பிறழ்வு ஏற்படக்காரணமாக அமைந்துவிடும் எனவே ஒவ்வொரு பிள்ளைக்கும் விசேடகவனிப்பு வழங்குதல் பாடசாலைகளது தலையாய கடமையாகும்.
மாணவர்களது நடத்தைப் பிறழ்வுகளிற்கு பங்களிப்புச் செய்யும் காரணிகளாவன

1. பரம்பரை
2. சூழல் போன்றனவாகும்.

நடத்தைப்பிறழ்வு பெற்றோரது பரம்பரை அலகு (Gene) மூலம் கடத்தப்படலாம். அல்லது அவனது குடும்பம், பாடசாலை, பிள்ளைவாழும் சூழல், போன்றனவும் தாக்கத்தினை ஏற்படுத்துகின்றது. இதனை தவிர நோய், விபத்து போன்றனவும் இதற்கு காரணமாக அமையலாம்.

விசேட வழிகாட்டல் ஆலோசனை தேவைப்படுவோரை பின்வருமாறு பாகுபடுத்தலாம்.

1) மீத்திறனுள்ள பிள்ளைகளும், ஆக்கத்திறனுள்ள பிள்ளைகளும்
2) உடற்குறைபாடுள்ள பிள்ளைகள்
3) உளக்குறைபாடுள்ள பிள்ளைகள்
4) கற்றலில் இடர்பாடுடைய மெல்லக்கற்கும் பிள்ளைகள்
5) பொருத்தப்பாடற்ற நடத்தையுடைய நெறிபிறழ்ந்த பிள்ளைகள்.

**மீத்திறனுள்ள பிள்ளைகளும், ஆக்கதிறனுள்ள பிள்ளைகளும்**

மக்கிளஸ் (Makinos) என்பவரதுகருத்துப்படி குவிசிந்தனையுடையோர் மீத்திறனுடையவர் எனவும், விரிசிந்தனை உடையோர் ஆக்கத்திறனுள்ள பிள்ளைகள் எனவும் கூறினார். கிரகித்தல், பகுத்தல். தொகுத்தல் ஆகிய உள ஆற்றலில் மேம்பாடு உடையவர்களாகவும், தர்க்கரீதியாக சிந்தித்தல் பிரச்சினை விடுவித்தல் போன்றவற்றில் விசேட திறன் பெற்றிருப்பர்.

ஆக்கத்திறனுள்ள பிள்ளைகள் அபூர்வமான ஆக்கற் செயற்பாடுகள் ,விஞ்ஞானக் கண்டுபிடிப்புக்கள், கலை, இசை, இலக்கியம் போன்ற துறைகளில் தனித்துவமான படைப்புக்களை ஆக்கும் திறமை பெற்றவர்களாகக் காணப்படுவர். இவர்களிலுள்ள

உள்ளார்ந்த திறன்களிற்கு பரம்பரை ஒரு காரணமாக அமைகின்றது.
இப் பிள்ளைகளுடைய பண்புகளாவன.

- சுதந்திரமான உளப்போக்கு, சுதந்திரமாகத் தொழிற்படல்
- குழந்தைப்பருவத்தில் உயர் நுண்மதி பெற்றிருத்தல்
- சுயநலமான போக்கு
- வகுப்பு மாணவருடன் நெருங்கிப்பழகாமல் தனித்திருத்தல்
- புதிய அனுபவங்களை திறந்த மனதுடன் அணுகுதல்
- நெகிழ்ச்சித்தன்மை
- பலவகையான ஆர்வங்களையும் ஆற்றல்களையும் பெற்றிருத்தல்
- கவின்கலை இரசனையுணர்வு பெற்றிருத்தல், அழகியற் கலையில் ஈடுபடல் போன்றனவாகும்.

## மீத்திறன் , ஆக்கத்திறனுள்ள பிள்ளைகளை வழிகாட்டல்

இப் பிள்ளைகளிற்கு பாடசாலைகளில் விசேட வழிகாட்டல், ஆலோசனை அவசியமாகும். இவர்களிற்கு நுண்மதியாற்றல் கூடிய ஆக்கத்திறனுள்ள மாணவர்களது ஆக்கத்திறனை மேலும் மேலும் வளர்க்கக்கூடிய திறமையுள்ள அர்ப்பணியுள்ள ஆசிரியர் அவசியமாகும். இல்லையேல் இவர்களது விசேட திறன்கள் விரயமாகி அவர்களால் சமூகம் அடையக் கூடிய நன்மைகள் இழக்கப்பட்டு சமூகத்தின் அழிவிற்கு காரணமானவர்களாக அமைந்துவிடுவார்கள். எனவே இவர்கள் மீது ஆசிரியர்கள் கணிப்பு, மதிப்பு, அங்கீகாரம், ஊக்கல் போன்ற வற்றை வழங்குவதன்மூலம் ஆக்கத்திறனுள்ள முழுச்செயற்பாடுகளில் ஈடுபடச் செய்தல் வேண்டும்.

இவர்களை சாதாரணமாணவர்களுடன்வைத்து கற்பிக்கும் போது கற்றலில் சலிப்பு ஏற்படும் எனவே இவர்களிற்கென தனிப்பட்ட வகுப்புக்களை நடாத்துவதன் மூலமும் விசேட செழுமையான பாடவிதானம் அமைத்து விடய ஆழத்தை விசேட கற்பித்தல் முறைகளைக் கையாண்டு கற்பிப்பதன் மூலம் இவர்களது ஆக்கத்திறனை மேலும்விருத்தி செய்யலாம் இவர்களிற்குரிய வகுப்பறைச் செயற்பாடுகளாவன.

- மாணவரின் புதிய கருத்துக்களிற்கு மதிப்பளித்து அதன் பெறுமதியை ஏற்றுக் கொள்ளல்
- விரிசிந்தனையை ஊக்குவித்தல்
- ஆசிரியர்களிடம் வினாக்களை மாணவர்கள் கேட்பதற்கு மாணவர்களை ஊக்குவித்தல்
- வழமையான பாடங்களுக்கு மேலதிகமாக ஆர்வத்தையூட்டி விடயங்களைக் கலந்துரையாடல்
- மாணவர்களின் ஆக்கத்திறன் வெளிப்பாடுகளுக்குரிய கணிப்பைக் கொடுத்தல்
- சிந்தனைக் கிளறலினை தனியாகவும் குழுவாகவும் நடைமுறைப் படுத்தல் சுயகற்றல் செயற்பாடுகளிற்கு ஊக்குவித்தல்

## உடற்குறைபாடுடைய பிள்ளைகள்.

பார்வை, கேள்வி, பேச்சு, அங்கங்கள் உடலியக்கம் போன்றவற்றில் குறைபாடு உடையவர்கள் உடற்குறைபாடுடையோர் எனப்படுகின்றனர். பார்வையற்றோர், காதுகேளாதோர், வாய்பேசாதோர் ,வலதுகுறைந்தோர் போன்றவர்களிற்கு தனிப்பட்ட பாடசாலைகள் உள்ளன. ஓரளவு உடற்குறைபாடு உடையவர்களே சாதாரண பாடசாலைகளில் கல்வி பயில்வர் அவர்களிற்கென இங்கு விசேட உதவிவழங்கப்பட வேண்டும்.

### பார்வைக்குறைபாடு உடையவர்கள்

கண்சிவத்தல், கண்வீக்கமடைதல், கண்களில் நீர்வடிதல், கண்கூசுதல், அடிக்கடிதலைவலி ஏற்படல் வாசிக்கும் போது புத்தகங்களை கண்ணிற்கு அண்மையில் வைத்து அல்லது தூரத்தில் வைத்து வாசித்தல் போன்றவற்றின் மூலம் இவர்களை இனங்காணலாம்.

இவர்களிற்கு தகுந்த மருத்துவ வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல் மூக்குக்கண்ணாடியைப் பெற்றுக் கொடுத்தல், வகுப்பறையில் முன்வரிசையில் அமரச் செய்தல், இவர்கள் மீது விசேட கவனம் செலுத்துவதன் மூலம் கற்றலினை வளம்படுத்தலாம்.

### கேள்விக்குறைபாடு உடையவர்கள்

ஒலி பேதங்களை கிரகித்துக் கொள்ள முடியாமை, விடயங்களை தவறுதலாக விளங்குதல், மிகச் சத்தமான குரலில் பேசுதல். பிழையான உச்சரிப்பு, ஒதுங்கியிருத்தல், பகற்கனவுகாணுதல், போன்றவற்றினைக் கொண்டு இவர்களை இனங்காணலாம் இவர்களிற்கு மருத்துவ வசதியை ஏற்படுத்திக் கொடுத்தல், செவிப்புல சாதனம் பெற்றுக்கொடுத்தல். வகுப்பில் முன்வரிசையில் அமர்த்துதல் போன்றவற்றின் மூலம்அவர்களின் கற்றலினை வளம்படுத்த முடியும்.

### பேச்சுக்குறைபாடு உடையவர்கள் திக்குவாய் உடையவர்கள்

சொற்களை திருத்தமாக உச்சரிக்க முடியாமை, ஒரு சொல்லை மீண்டும் மீண்டும் திக்கித் திக்கிக் கூறுதல், திக்குதல். பேச்சை ஆரம்பிக்க முடியாது திணறுதல், மிகமெதுவாகப் பேசுதல், பேசும் போது முகஞ்சுழித்தல் ,கண்சிமிட்டுதல் ஆகிய இக்குறைபாடுடையவர்களின் இயல்புகளாகும்.

பேச்சுக்குறைபாடு ஏற்படுவதற்கு பிரதான காரணமாக அமைவது மனவெழுச்சி சார் பிரச்சினைகளாகும். இதனைதத்தவிர உடலியல் ரீதியான காரணிகளும் இதற்குக் காரணமாக அமைகின்றது. இங்கு திக்குவாய் ஏற்படக் காரணம் தொண்டை, குரல்வளை, பிரிமென்தகடு ஆகியவற்றிலுள்ள தசைநார்கள் இறுக்கமடைவதனாலாகும். இதனைத் தவிர பிள்ளைகளில் ஏற்படும் மனவெழுச்சிகளான மனப் பதட்டம், உணர்ச்சிவசப்படல், கவலை, கோபம், பயம், போன்றவற்றினால் திக்குதல் மேலும் அதிகரிக்கும்.

திக்குவாய் பெரும் பாலும் 2வயதிற்கும் 6வயதிற்கும் இடைப்பட்ட காலத்திலேயே ஆரம்பமாகின்றது. பிள்ளை குழந்தைப் பருவத்தில் தாயைப்பிரிவது, நெருங்கிய உறவினர் இறத்தல், அந்நியசூழ்நிலைக்கு இடம் பெயர்ந்து வாழ்தல் பிள்ளைகளிற்கு வழங்கும் தண்டணை, துன்புறுத்தல் பிள்ளைக்கு முன்னர் கிடைத்த அன்பு கணிப்பு போன்றன புதிய சகோதரரிற்கு இடம் மாறுவதால் பெற்றோரின் கவனிப்பை தன் வசம் ஈர்ப்பதற்காக தான் பேசும் போது திக்கித்திக்கிப் பேசுகின்றது. எனவே மேற்குறிப்பிட்ட உளத்தாக்கங்கள் பிள்ளையின் மனவெழுச்சியைப் பாதித்து திக்குவாய் ஏற்படக் காரணமாக அமைகின்றது.

சிறுவயதில் பிள்ளைக்கு புதிய சகோதரர் உருவாகும் போது பெற்றோர் இந்தப் பிள்ளை மீது காட்டும் அன்பு, கரிசனை போன்றன குறையவில்லை என்பதை உணரச்செய்ய வேண்டும். முன்பள்ளி, ஆரம்பப்பாடசாலை, ஆசிரியர்கள், சகபாடிகள் ஆகியோர் குழந்தையைப் பயமுறுத்தக் கூடாது அத்துடன் துன்புறுத்தல், தண்டித்தல் போன்றவற்றினை வழங்கக் கூடாது பிள்ளையின் மனதில் உள்ள சஞ்சலம், பயம், பொறாமை போன்ற உணர்வுகளினைத் தீர்க்கக் கூடிய விதத்தில் வழிகாட்டல், ஆலோசனையை வழங்குதல் வேண்டும் இயலாத சந்தர்ப்பங்களில் மருத்துவ ஆலோசனையைப் பெற வழிகாட்ட வேண்டும்.

## உடல் அங்கவீனர்கள்

பிறவியிலேயே அல்லது நோய், விபத்து போன்றவற்றாலோ உடல் உறுப்புக்கள் பாதிக்கப்படல் அல்லது உடலமைப்பில் விகாரம் ஏற்படல் போன்றன அங்கவீனமாகும்.

அங்கவீனர்களிற்கு தமது உடல் ஊனத்தால் உளத்திறன் பாதிப்படைந்து சாதாரண மாணவர்களை விட ஆற்றலுள்ளவர்களாகக் காணப்பட்டாலும் தமது ஆற்றலினை வெளிக்காட்டாது ஒதுங்கி தனிமைப்படுத்தப்பட்ட நடத்தைகளைக் காண்பிப்பர். இப்படிப்பட்ட மாணவர்களிற்கு ஏனைய மாணவர்களால் இழப்படல், ஒதுக்கிவைக்கப்படல் போன்றன ஏற்படாமல் ஆசிரியர் கவனித்துக் கொள்வதுடன் அவர்களிற்கு வைத்திய சிகிச்சை பெறவும், சக்கரநாற்காலி ஊன்றுகோல் போன்ற சாதனங்களைப் பெற்றுக் கொடுக்க உதவியளித்தல் வேண்டும். இதனைவிட வகுப்பில் அவர்களுடைய ஆசனங்கள் அவர்கள் இயங்குவதற்கு வசதியான வகையில் அமைத்தல் வேண்டும். அத்துடன் ஏனைய மாணவர்களைப் போல அவர்களால் இயலும் என்ற மனோபலத்தை ஏற்படுத்தி வகுப்பறைச் செயற்பாடுகளில் ஈடுபட வழிசமைத்தல் வேண்டும்.

## உளக்குறைபாடுடையோர்

பிள்ளைகளின் நுண்மதி மிகத்தாழ்ந்த மட்டத்தில் காணப்படுவர்களையே உளக்குறைபாடுடையவர்கள் எனக்கருதப்படுகின்றது. இங்கு நுண்மதிஈவு 25ற்கு கீழ்ப்பட்டோர் தீவிர உளக்குறைபாடுடையவர்களாவர். நுண்மதி ஈவு 25 - 55 வரையுள்ளவர்கள் உளப்பிற் போக்குடையவர்களாவர். இவர்கள் இருவகையினரும் சாதாரண பாடசாலைகளில் காணப்படமாட்டார்கள். இவர்களிற்கு ஆரம்பப் பாடசாலைகளில் விசேட கற்பித்தல் முறைகளைக் கையாளுவதன் மூலம் அடிப்படைக்

கல்வியைப் பெற வழிகாட்டலாம். அத்துடன் இவர்களை கைப்பணிசார்பான தொழில்களில் ஈடுபடுத்துவதுடன் சுயபொருத்தப்பாடு, சமூகப் பொருத்தப்பாடு ஆகியவற்றைப்பெற வழிகாட்டல் வேண்டும்.

**கற்றலில் பின்தங்கியோரும், மெல்லக்கற்போரும்**

மாணவரின் வயதுக்கேற்ற வகுப்பு நியமத்திலும் தாழ்வான வகுப்பில் காணப்படின் அவர்களை கற்றலில் பின்தங்கியவர் எனப்படுவார். கற்றலில் குறைபாடு உடையவர்கள் மெதுவாக அல்லது தாமதித்து கற்கின்றனர் இவர்களை மெல்லக் கற்போர் எனப்படுகின்றனர்.

பாட அடைவுகளின் தகுதிநிலையில் ஒரு மாணவன் ஏற்றுக் கொள்ளப்பட்ட நியமத்திற்குரிய மட்டத்தை அடையத் தவறுவானாயின் பின்தங்கியவனாகக் கருதப்படுகின்றான். இதற்குப் பிரதானமாக 3 காரணிகள் தாக்கம் செலுத்துகின்றது.

1. வீட்டுச் சூழல் தொடர்பானது
2. பாடசாலை தொடர்பானது
3. தனிநபர் தொடர்பானது

வீட்டுச்சூழல் தொடர்பான காரணியை எடுத்து நோக்கும் போது பிள்ளையின் கல்வி தொடர்பாக குடும்பங்கள் நிலவுகின்ற அக்கறையற்றதன்மை, சீரற்ற குடும்பஉறவுகள், பிளவுபட்ட குடும்பங்களில் பெற்றோரின் பொருளாதார நிலை, பெற்றோரின் கல்வித் தரக்குறைவு போன்றன பிள்ளையின் பால் தாக்கத்தை ஏற்படுத்துகின்றது.

அடுத்து பாடசாலைச் சூழலை எடுத்து நோக்கும் போது சீரற்ற மாணவர் தொடர்பு, கற்றல்சுமை, தனியாள் வேறுபாடுகளைக் கருத்திற் கொள்ளாது மேற்கொள்ளப்படுகின்ற உகப்பற்ற கற்பித்தல் முறைகள், கற்றலில் ஆர்வமற்ற சகபாடிகளின் குழுஅங்கத்துவம் போன்ற பாடசாலை ரீதியான தாக்கங்களாகும். தனிநபர் தொடர்பான காரணிகளை நோக்கும் போது நுண்மதிக்குறைவு, உடல் உளக் குறைபாடுகள், முதிர்ச்சிக்கு முன்னதாக கற்றலை ஆரம்பித்தல் போன்றனவாகும்.

**இவர்களிற்குரிய விசேட கற்பித்தல், கற்றல் உத்திகள்**

- பாடத்தைச் சிறு சிறு அலகுகளாகப் பிரித்துக் கற்பித்தல்
- தொடர்ச்சியாக பலமணி நேரம் கற்பிக்காமல் சிறிய பாடவேளைகளாகப் பிரித்துக்கற்பித்தல்
- செயற்பாடுகள் மூலம் கற்றல்
- கட்புல சாதனங்களைப் பயன்படுத்திக் கற்றல்
- சுய எண்ணக்கரு மட்டத்தை மேம்படுத்தித்தன்னம்பிக்கையை ஏற்படுத்துதல்
- ஒவ்வொரு கற்றல் படியின் பின்பும் மீளவலியுறுத்தலின் பொருட்டு வெகுமதி.

* பொருளாதார அடையாளக் கட்டைகள் ஆகியவற்றை வழங்குதல்.
* விரைவாகக் கற்பதைவிட திருத்தமாக கற்பதில் கவனஞ்செலுத்துதல்
* மிகைக்கற்றல், மீண்டும் மீண்டும் கற்று அதிக பயிற்சிகளைச் செய்தல்

## பொருத்தப்பாடற்ற நடத்தையுடைய நெறிபிறழ்ந்த பிள்ளைகள்

மனவெழுச்சிகள் ,சமூகத் தொடர்புகள். ஆகியன தொடர்பாக பொருத்தப் பாடற்ற பிரச்சினைக்குரிய நடத்தை உடையவர்கள் இதனுள் அடங்குவர். தனிநபர் ஒருவர் சூழலுக்கு ஏற்ப இசைவாக்கம் அடைதல் பொருத்தப்பாடாகும். பிள்ளைகளில் காணப்படும் பொருத்தப்பாடற்ற நடத்தைகளை மூன்று பிரிவுகளாக வகுக்கலாம்.

1. நியம நடத்தையிலிருந்து ஓரளவு விலகிய நடத்தை உடையவர்கள்
2. சாதாரண. அசாதாரண நடத்தைகளிற்கு இடைப்பட்ட நிலையில் உள்ளோர்
3. அசாதாரண நடத்தை, தீசிர ஆளுமைச் சீர்குலைவுடையோர்

இங்கு முதலிரு பிரிவிலும் உள்ளவர்களை பாடசாலையில் காணலாம். மூன்றாம் பிரிவில் குறிக்கப்பட்டுள்ள ஆளுமைச் சீர்குலைவுடையோரை சாதாரண பாடசாலைகளில் மிக அபூர்வமாகவே காணலாம். பொருத்தப்பாடற்ற நடத்தையை ஏற்படுத்தும் காரணிகளாவன உடலியற்காரணிகள், உளக்குறைபாடு, சூழற்காரணிகள் போன்றனவாகும்.

பொருத்தப்பாடற்ற பிள்ளைகள் அதீத உணர்ச்சிவசப்படல், பயந்து பின்வாங்கும் சுபாவம், தாழ்வுச்சிக்கல் கற்றலில் குறைபாடு போன்றவற்றால் ஆளுமைச் சீர்கேடுகளிற்கு உள்ளாகின்றனர். எனவே ஆரம்பத்திலேயே இவர்களை இனங்கண்டு சீராக்கம் செய்யாதுவிடின் நெறிபிறழ் ந்த பிள்ளைகளாக மாற்றமடைவார்கள். பிள்ளைகளின் நெறி பிறழ்விற்கு பின்வருவன காரணங்களாக அமைகின்றன என ஆராட்ச்சியாளர்கள் கருதுகின்றனர்.

* குழுந்தை முதல் ஐந்து வருடங்களும் பெற்றோரிடமிருந்து பிரிந்து வாழுதல்
* குழந்தைப் பருவத்தில் உளவியல் தேவைகள் பூர்த்தியடையாமை
* பெற்றோரின் வறுமை, தொழிலின்மை, ஒழுக்கச்சீர்கேடுகள்
* குடும்ப உறுப்பினர்களான தாய், தந்தை,தமையன், மாமன், போன்றவர்கள் குற்றச்
* செயலில் ஈடுபட்டால் அவர்களின் நடத்தையை பிள்ளை முன்மாதிரியாகக் கற்றுக் கொள்ளும்.

ஆரம்பநிலையிலேயே நெறிபிறழ்வு ஏற்படாமல் தடுப்பதற்குப் பாடசாலைகளில் வழிகாட்டல் ஆலோசனையை மேற்கொள்வதன் மூலம் நல்ல சமூக ஒழுக்க விழுமியங்கள் சுய கட்டுப்பாடு உடைய சமூகத்திற்குப் பொருத்தப்பாடுடைய நற்பிரஜைகளை உருவாக்கலாம்.

திரு. அ. சியாமளரூபன்
ஆசிரியர்

# எண்களின் மதிப்பு

எண்கள் என்பது பொருட்களின் எண்ணிக்கையை அளவிடப்பயன்படும் ஓர் குறியீடு முறையாகும். எண்களின் கண்டுபிடிப்பு மனித நாகரிகத்தின் ஒரு வளர்ச்சிப்படியாக அமைந்தது.

பல்வேறுபட்ட நாகரிக காலங்களில் வேறுபட்ட எண்ணமைப்புக்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. இங்கிலாந்து நாட்டவர் 17ம் நூற்றாண்டு வரை உரோமானிய எண்களையே பயன்படுத்தி வந்தனர். பத்தடி எண்ணமைப்பு இந்து அரேபியக் குறியீடுகளைக் கொண்டதாகும். அக் குறியீடுகளே நாம் அன்றாடம் எந்த ஒரு பெரிய, சிறிய இலக்கங்களென்றாலும் பயன்படும் 0, 1, 2, 3, 4, 5, 6, 7, 8, 9 எண்களாகும்

| அளவு | ஈரடி எண் | பத்தடி எண் |
|---|---|---|
| ஒன்றுமில்லை | 0 | 0 |
| 0 | 1 | 1 |
| 00 | 10 | 2 |
| 000 | 11 | 3 |
| 0000 | 100 | 4 |
| 00000 | 101 | 5 |
| 000000 | 110 | 6 |
| 0000000 | 111 | 7 |

$11010_2 = x_{10}$ ஆக மாற்றுக.

11010 = 10000 + 1000 + 0 + 10 + 0

விரித்தெழுதினால்

↓ 16 + 8 + 0 + 2 + 0 = **26 பத்து**

ஈரடி எண் பின்னங்களின் இட எடை மதிப்பு

| $\frac{1}{2}$ | $\frac{1}{4}$ | $\frac{1}{8}$ | $\frac{1}{16}$ | |
|---|---|---|---|---|
| $2^{-1}$ | $2^{-2}$ | $8^{-3}$ | $16^{-4}$ | $2^{-5}$ |

உ-ம் 0. 1 1 0

0. $\frac{1}{2}$ $\frac{1}{4}$ $\frac{1}{8}$ ⟶ $0.5 + 0.25 = 0.75$

$$0_0 1101_2$$

$$0 \quad \tfrac{1}{2} \quad \tfrac{1}{4} \quad \tfrac{1}{8} \quad \tfrac{1}{16} \rightarrow 0.5 + 0.25 + 0.625$$

$$0\,.\,1101_2 \quad = 0.8125$$

ஈரடி எண்களின் பெருக்கம்

111    101 உடன் பெருக்கு

$$\begin{array}{rr} 7 & 111 \\ \hline 5 & 101 \\ 35_{10} & 100011_2 \end{array}$$

101.1 x 11.01

$$\begin{array}{rr} 101.1 & 5.5 \\ \hline 11.01 & 3.25 \\ \hline 11001.111 & 17.875 \end{array}$$

ஈரடி எண்களை வகுத்தல்

$1111 \div 11 = 101$    $3\overline{)15}$ = 5    $11\overline{)1111}$ = 101

$15 \div 5 = 5$    $5 \rightarrow 101$ மேலே உள்ள அட்டவணையில் இருந்து

திரு. ம. லோகநாதன்

ஆசிரியர்

# சமாதானத்தை நோக்கி

சமாதானம் என்ற ஐந்தெழுத்து
மக்கள் மனதில் என்றும் ஆயுத எழுத்து
எப்போது தெரியும் ஒளியின் விளக்கு
அதைக் காண இருளை விலக்கு

பண்ணும் பரதமும் துலங்கிய பூமியில்
கடலும் வளமும் கொழித்த இந்நாட்டில்
தொடங்கியது அன்று கோர யுத்தம்
ஓடியது அதனால் வீர இரத்தம்

மண்ணாய் போனது மனித வாழ்க்கை
மாயவன் காலனின் மரண வேட்கை
கொடியவர் கரங்களால் குவலயம் சிவந்தது
குரல்வளை நசுங்கியே குடிகளும் மாய்ந்தது

வருடங்கள் ஓடி முப்பதை கடந்தது
வசந்தத்தை தொலைத்தே வாழ்க்கை வீணானது
எட்டாத கனியாக சுதந்திரம் போனது
ஏங்கியே வாழ்வது எமக்கியல்பானது

நான்கு வரி முட்கம்பியே
நாதியளித்தது நம்மவர்க்கு
யுத்தம் வென்ற களிப்பிலே சிலர்
இரத்த உறவைத் தொலைத்த துயரினிலே பலர்

மாட தேசத்தில் மலர்ந்தது மகிழ்ச்சி
வந்தது எமக்கு மீள்குடியமர்வுச் செய்தி
உதித்தது வாழ்வினில் புதுக் களிப்பு
உள்ள முடையோர் வழங்கிய பங்களிப்பு

விரைந்தனர் சூரிய குணதிசைக்காய்
ஏங்கினர் புதிய உறவினுக்காய்
தடைகளை வீசித்தாக்கியே தரணியில்
நடந்தனர்சமாதானத்தை நோக்கியே.

திருமதி ய. சந்திரலிங்கம்
ஆசிரியர்

# விழுமியமும் நாமும்

மனிதன் மனிதனாய் வாழ்வதற்கு
மகத்தானவை மனித விழுமியங்கள்
விழுமியம் தன்னை கடைப்பிடித்தால் - நாம்
வெற்றியுடன் உலகைச் சுற்றிடலாம்

அன்பும் பண்பும் நாம் கொண்டிருந்தால்
அகிலம் என்றும் எம் கையில்
ஆற்றல் தன்னை நாம் வளர்க்க - அது
ஆதாரமாக அமைந்திடுமே

உண்மை உயர்விற்கு வழிவகுக்கும் - எமை
உத்தமராக்க வழிசமைக்கும்
உண்மை பேசி வாழ்க்கையிலே
உன்னதமாய் வாழ்ந்திடுவீர்

பகிர்ந்துண்ணும் பண்பை நீ போற்று
பல்லுயிரில் இறைவனை நீ காண்பாய்
என்றும் எதிலும் சிறந்திடவே
ஏழைகள் மீது இரக்கம் கொள்வாய்

அறம் செய்திடவே நீ விரும்பு - உயிர்
அனைத்துமே உனை அடிவழுத்தும்
அறம் பல செய்து நீ வாழ்ந்தால்
ஆண்டவன் அருளால் உயர்ந்திடுவாய்

தன்னம்பிக்கை கொண்டு நீ வாழ்ந்தால்
தரணியில் ஜெயிக்க உனக்கு என்ன?
எங்கும் எதிலும் வெற்றி உண்டு
இனியும் தயக்கம் உனக்கெதற்கு

திருமதி. ஜெ. சிவானந்தன்
ஆசிரியர்

# இணையம் (Internet)

எந்த ஒரு மனிதனும் மனித சமுதாயத்தில் இருந்து நீங்கித் தனிமையில் வாழ விரும்பு வதில்லை. கற்காலமனிதனில் இருந்து தற்கால மனிதர்கள் வரை அடுத்தவர்களுடன் தொடர்பு கொண்டு கலந்துரையாடி தகவல்களைப் பரிமாறவே விரும்புகிறான். ஆரம்பகாலத்தில் தீ, கொட்டு முழக்கம் தூது, புறா என்பவற்றைப் பயன்படுத்தி தொலைவில் உள்ளமற்றொருவருக்குத் தகவல் அனுப்பினான். நாகரீகம் வளர்ச்சியடைய தபால், தந்தி, தொலைபேசி, பக்ஸ் என மனிதனும் வளர்ச்சியடைந்து இன்று கணனி வழியாக உலகின் எந்த மூலையில் உள்ளவர்களுடனும் தொடர்புகளை அதிவிரைவாக ஏற்படுத்தித் தகவல்களையும் சேவைகளையும் பரிமாறிக் கொண்டுவருகின்றான். இதுவே இணையத்தின் பரிணாம வளர்ச்சியில் இன்று நாம் காணக்கூடியதாகவுள்ளது.


தேடல் தான் முயற்சியின் முன்னோடி. தேடல் தான் உழைப்பின் ஊற்றுக்கண். தேடல் தான் வாழ்க்கையின் ஆதாரம். தேடல் தான் முன்னேற்றத்தின் முக்கிய சூத்திரம் தேவையும் தேடலும் எப்பொழுதும் மேகத்தைத் துரத்தியகதைதான். இன்றைய விஞ்ஞான வளர்ச்சியில் அலைந்துதிரிந்து எதையும் தேட வேண்டியதில்லை. உட்கார்ந்த இடத்தில் இருந்து கொண்டே எமக்கு தேவையான தரவுகளையும், தகவல்களையும், சேவைகளையும், பெறுவதற்கு இணையம் உதவிபுரிகின்றது. விஞ்ஞானம், கணிதம் புவியியல், வானிலை, காலநிலை, கணனி செய்நிரல்கள் சமையல்க்குறிப்புக்கள், இடவிளக்கங்கள், கண்டுபிடிப்புக்கள் போன்ற அனைத்து விடயங்களையும் இணையத்தின் மூலம் பெற்றுக் கொள்ள முடிகிறது.


ஐக்கிய அமெரிக்காவின் பாதுகாப்புத் திணைக்களமானது 1969களில் ஆய்வாளர்களுக்கிடையேயும் இராணுவப்பிரிவில் ஒரு பிரிவினருக்கும் மற்றைய பிரிவினருக்குமிடையே அவசர நிலைமைகளில் தொடர்பாடலை மேற்கொள்ள வசதியளிக்கக்கூடிய வலைப்பின்னல் செயற்திட்டமொன்றினை J,C,R லிக்லைடர் தலைமையில் ஆரம்பித்தது. இச் செயற்திட்டம் ARPA வலையமைப்பு எனப்பட்டது. இதுவே இணையத்தின் தோற்றத்திற்கு அடிப்படையாக அமைந்தது. கணனிகளை ஒன்றிணைத்துக் காணப்படும் நிலையினை எடுத்துக் கொண்டால் பின்வருமாறு பிரதானமாக வகைப்படுத்திக் கொள்ளலாம்.

## குறுப்பரப்புப் பிணையம் LAN


LAN எனப்படுவது Local Area Network ஆகும். இது 100m சுற்றளவில் அல்லது எல்லைக்குள் கணனிகளை ஒன்றோடு ஒன்று இணைப்பினை மேற்கொள்ளப்படுவது ஆகும். ஒரு பாடசாலை, பல்கலைக்கழகம் போன்றவற்றை உதாரணமாக கொள்ள முடியும். இங்கு வயர் மூலமோ அல்லது வயர் இல்லாமலோ LAN ஒன்றில் கணனிகளை இணைக்கலாம். வயர் மூலத்தினை பயன்படுத்தும் போது முறுக்கிய கம்பிச்சுருள் (UTP, STP cable) இணையச்சுவடம் (Coxial cable) இழை ஒளிவடம் (Fiber Optical cable)


என்பவற்றை பயன்படுத்தலாம். வயரில்லா மூலத்தினை பயன்படுத்தும் போது கதிரியக்க ஊடகம் (Radiated Media), Wi - Fi, Bluetooth, satellite என்பன உபயோகிக்கப்படுகின்றது. வயரின் மூலம் பயன்படுத்துவதில் Fiber Optical cable ம் வயரில்லாமல் பயன்படுத்துவதில் Wi - Fi ம் அதிக வேகமுடையதாக காணப்படுகின்றது. bluetooth micro weve என்பன நுண் அலைகள் ஆகும். LAN ஒன்றில் கணனிகளை இணைப்பதன் நோக்கம் தரவுகளை இலகுவாக பரிமாறவும் வளங்களை (Printer, Scanner) பகிர்ந்துகொள்ளவும் ஆகும். இதனால் தரவுகள் மிக வேகமாக ஓரிடத்தில் இருந்து இன்னோரிடத்திற்கு கடத்தப்படுவதுடன் தரவுகளை பரிமாறுகின்ற செலவும் குறைக்கப்படுகின்றது. LAN ஆனது பின்வரும் இடத்தியல்(Topology) முறைகளில் இணைக்கப்படலாம்.






Digram - Tree Topology





## பெரும்பரப்புப் பிணையம் WAN (Wide Area Network)


உலகளாவிய ரீதியில் கணனிகள் ஒன்றுடன் ஒன்று தொடர்புபட்டிருக்கும் சிக்கலான நிலையே பெரும்பரப்புப்பிணையம் ஆகும். இந்த பெரும் பரப்புப் பிணையத்திற்குள் மில்லியன் கணக்கான குறும்பரப்புப் பிணையம் LAN காணப்படலாம். அதாவது உலகில் உள்ள அனைத்து நாடுகளிலும் உள்ள கணனிகள் ஒன்றுடன் ஒன்று தொடர்புபட்டிருக்கும் நிலையினைக்குறிக்கும். அதிக செலவுடைய இவ்விணையம் குறைந்த வேகத்தில் தரவுகளைக்கடத்தும். பெரும்பரப்பிணையத்திற்குள் Radiated Media, Wi - fi, Bluetooth, satellite wawes என்பன காணப்படும்.


## மாநகர்பிணையம் MAN (Metropolitan Area Network)

வளர்ச்சியடைந்த மாநகரங்களில் கணனிகளை இணைப்பதற்கு பயன்படுத்துகின்ற இடத்தியல் முறையே மாநகர் பிணையம் ஆகும். LAN ஐ விடப் பெரியதாகவும் WANஐ விட சிறியதாகவும் காணப்படும். இங்கு கணனிகள் மிகவேகமாக ஒன்றுடன் ஒன்று தொடர்புறும். இதுபோலவே PAN, (Personal Area Network) எனவும் HAN (Home Area Network) எனவும் சிறுபிரிவுகள் உண்டு. இவை தனிப்பட்ட தேவைகளுக்க்காக பயன்படுத்தப்படுபவையாகும் இணையத்தினை WAN<MAN<LAN<HAN<PAN என்ற பருமனில் வேறுபட்டுக் காணப்படும்.

## HAN (Home Area Network)

Home Area Network என்பது வீட்டில் பயன்படுத்தப்படும் இலத்திரனியல் உபகரணங்களை இணையத்துடன் இணைக்கின்ற முறையாகும். தொலைவில் இருந்தவாறே வீட்டில் உள்ள இலத்திரனியல் பொருட்களை இயங்கவைக்கவோ அல்லது நிறுத்தவோ முடியும். உதாரணமாக கூறின் வீட்டில் FAN ஐ பாவித்துவிட்டு நிறுத்தாமல் அலுவலகத்திற்கு வந்துவிட்டோம் என எடுத்துக் கொண்டால் அலுவலகத்தில் இருந்துகொண்டே இணையத்தினூடாக FAN நிறுத்த அல்லது இயங்க வைக்க முடியும். இதை எதிர்காலங்களில் நாமெல்லாம் சாதாரணமாகப் பாவிக்கப்போகின்றோம்.




வீட்டில் பயன்படுத்தப்படும் இலத்திரனியல் உபகரணங்கள் இணையத்துடன் இணைக்கப்பட்டிருத்தல் காட்டப்பட்டுள்ளது

### தரவு ஊடுகடத்தும் விதங்கள் (Data Transmission Modes)

தரவுகளை ஓரிடத்தில் இருந்து இன்னோர் இடத்திற்கு ஊடுகடத்தும் போது அது எவ்வாறு கடத்தப்படுகின்றது என்பதனை நோக்கின் இதை இருவகையாக வகைப்படுத்தலாம். அவையாவன ஒற்றைவழிப்போக்கு (Simplex) எனவும் இருவழிப்போக்கு (Duplex) எனவும் வகைப்படுத்தலாம். ஒற்றைவழிப்போக்கு என்பது ஒரு திசையில் மட்டும் தரவுகள் கடத்தப்படுவதனைக்குறிக்கும். உதாரணமாக வானொலி தொலைக்காட்சி என்பவற்றைக்குறிப்பிடலாம். இருவழிப்போக்கானது ஒற்றை இருவழி, (half duplex) முழு இருவழி (Full duplex) என பிரித்து நோக்கப்படுகின்றது. Half duplex என்பது ஒரு வழியில் இரு தரவுகளும் பயணம் செய்யும். Half duplex க்கு உதாரணமாக வோர்க்கி டோக்கியைக்குறிப்பிடலாம். Full duplex என்பது இரு வயர்களின் ஊடாக தரவுகள் கடத்தப்படும். Full duplex க்கு உதாரணமான தொலைபேசி, Skype, live messenger என்பவற்றைக்குறிப்பிடலாம்.

## தரவுத்தொடர்பாடல்

தரவுகளை ஓர் இடத்தில் இருந்து இன்னோர் இடத்திற்கு கடத்தப்படும் முறையே தரவுத்தொடர்பாடல் ஆகும். அதாவது எவ்வாறு தரவுகள் சென்றடைவதைக்குறிக்கும். தொடர்பாடலுக்குரிய அடிப்படைக்காரணிகளை நோக்கின் தரவை உண்டாக்குபவர் அல்லது தரவு மூலமும் (Sender) அத்தரவினை காவிச் செல்லும் தரவு ஊடகமும் (Communication Medium) மற்றும் பெறுநர் (Receiver) ஆகியன அவசியமான காரணிகளாகும். வெவ்வேறு இடங்களில் உள்ள கணனித்தொகுதிகள் ஒன்றுடன் ஒன்று தொடர்புபட்டிருக்கும் போதே தரவுத்தொடர்பாடல் நிகழ்கின்றது.

## இணையத்தினால் ஏற்படக்கூடிய நன்மைகள்

நமக்குத்தேவையான தரவுகளை நாம் இருந்த இடத்திலேயே பெற்றுக் கொள்வதற்கு இணையம் உதவிபுரிகின்றது. இந்த உலகின் எந்த மூலையில் யாருடனும் எப்போதும் நாம் தொடர்புகளை ஏற்படுத்த முடிகிறது. உலகம் சுருங்கிவிட்டது, உலகம் பூகோளமயமாகிவிட்டது என்று அடிக்கடி கேள்விப்படுகின்றோம். இதற்குக் காரணமாக அல்லது பெரும்பங்கு வகிப்பது இணையம்தான் என்றால் யாரும் மறுப்பதற்கில்லை. எமக்குத்தெரியாதவற்றை எவரின் உதவியுமின்றி இலகுவாக இணையத்தில் இருந்து பெற்றுக் கொள்ள முடியும். அறிந்து கொள்ள முடியும். இன்றைய பொழுது போக்கு சாதனங்களை விட இணையத்தில் உள்ள பொழுதுபோக்கு அம்சங்களே அதிகமான சிறுவர்களுக்கு ஆதாரமாக விளங்குகிறது. இன்றைய உலகில் இணையத்தின் ஊடாக மின்வணிகம் online marketing, online purchasing , e - education, e-government, online business, Tele medicine பணிப்பரிமாற்றல்கள், கடனட்டைப் பயன்பாடுகள் போன்றன இணையத்தினை ஆதாரமாகக் கொண்டே நடைபெறுகின்றது.

இணையத்தோடு நாம் இணைவதற்கு கணனி ஒன்றும், இணையசேவை வழங்குநர் ஒருவரும், (உ-ம் ரெலிகொம்) தொலைத்தொடர்பு சாதனங்களும், இணையத்தினை பாவிப்பதற்கான மென்பொருளும் இருந்தால் இலகுவாக இணைந்து கொள்ளலாம். இதனால் இணையத்தினை பாவிப்பதற்கு நாம் தகுதிபெறுகின்றோம். இன்று இணையத்தினால் online booking, online share marketing போன்ற அனைத்துமே இணையத்திற்கு ஊடாக நடைபெறுகின்றன. இணையத்தினை பயன்படுத்தாத எவரையும் இன்று காணமுடியாது இந்த அளவுக்கு இணையம் எல்லோரிடமும் போய்ச் சேர்ந்துள்ளது. தொடர்பாடல் செலவு குறைவு மற்றும் வளங்களை தூரத்தில் இருந்தே கையாளும் வசதியும், தூரத்தில் உள்ள கணனிகளை தொலைவில் இருந்தபடியே திருத்தும் வசதி என்பனவும் இணையத்தில் காணப்படுகின்றன. இருந்தும் இணையத்தில் பயன்களைப் பின்வருமாறு சுருக்கமாகப் பட்டியல்படுத்த முடியும்.

| | |
|---|---|
| மின்வணிகம் | (E- Commerce) |
| தகவல்களைத் தேடுதல் | (Using Search Engine) |
| இணையத்தொலைபேசி | (Internet Call) |
| கோவை இடமாற்றம் | (File Transfer) |
| தொலைக்கல்வி | (Tele Education) |
| தொலைமருத்துவம் | ( Tele Medicine) |
| இணையக்கொள்வனவு | (Online Shopping) |
| இணைய விளையாட்டுக்கள் | (Online Games) |
| இலத்திரனியல் காகிதம் | (Email) |
| இணையப் பத்திரிகை | (Online Paper) |
| இணைய அரட்டை | (Online Chatting) |
| செய்திக்கூட்டங்கள் | (News Groups) |
| சலனப்படமாநாடு | (Video Conferencing) |
| கடனட்டைப்பயன்பாடு | (Credit Card) |

என்பவற்றைக்குறிப்பிடலாம். எவ்வளவோ நன்மைகள் இருந்தாலும் குறிப்பிடத்தக்க தீமைகளும் இருக்கத்தான் செய்கின்றன. அத்தீமைகளை நோக்கின் இன்று இணையத்தினை பயன்படுத்துபவர்களில் இளையசமூகத்தினர்தான் அதிகமாகவுள்ளனர். இதனால் அவர்கள் பாலியல் ரீதியான படங்களையும் வீடியோக்களையும் பார்வையிடுகின்றனர். அதுமட்டுமல்ல சில சட்டத்திற்கும் சமூகத்திற்கும் எதிரான நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றனர். இணையத்திற்கு அடிமையாகின்றவர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்த வண்ணம் உள்ளது. இதனால் குடும்பங்களுக்கு இடையே காணப்படுகின்ற அந்நியோன்னியம் குறைக்கப்படும். சட்டவிரோதமான Credit Card மோசடிகள் இடம் பெறுகின்றன. கணனியைத்தாக்கும் நச்சுநிரல்கள் (Virus) மற்றும் Spasms என்பன எமது கணனிக்குள்ளும் இலகுவாக புகுந்துகொள்ள வாய்ப்பளிக்கின்றது. இணையத்தளங்களில் கொண்டிருக்கும் தகவல்கள் எபபோதும் உண்மைத்தகவல்களைக் கொண்டிருக்கும் என்று கூறமுடியததாது. ஏனெனில் பொய்த்தகவல்களைக் கொண்டு ஆக்கப்பட்டிருக்கலாம். அதனைப் பயன்படுத்தும் போது பொய்யான முடிவுகளும், பொய்யான விளைவுகளும் ஏற்படுகின்றன. சரியான தகவலைக்கண்டுபிடிப்பது கடினமாக காணப்படும். நம்பகத்தன்மையற்றதகவல்களை அதிகமாக கொண்டிருக்கும். இதனை விட Internet service provider இல் தங்கியிருக்க வேண்டிய கட்டாய நிலையிருக்கிறது. எல்லாராலும் இலகுவில் அடையமுடியாத செலவு கூடியதாக காணப்படுகின்றது.

எந்த ஒரு விடயத்திலும் நன்மையும் தீமையும் உண்டு. அவற்றில் நன்மையான விடயங்களை மட்டும் எடுத்துக் கொண்டு தீமையான விடயங்களில் இருந்து ஒதுங்கிக் கொள்ள வேண்டும். எது எவ்வாறு இருப்பினும் இணையம் இன்று பேரளவு வளர்ச்சி கண்டுள்ளது. இனிவரும் காலங்களில் இணையம் படைக்கப்போகும் சாதனைகளும் மாற்றங்களும் எதிர்பார்க்க முடியாத அளவிற்கு இருக்கப்போகின்றன. இணையம் தான் பெரும் சக்தியாக இன்னும் ஐந்து வருடங்களின் பின்னர் இருக்கப்போகின்றன. இணையத்தினூடாகவே எம்மைச்சூழவுள்ள அனைத்து இலத்திரனியல் பொருட்களும் இணைந்திருக்கப்போகின்றன. ஆகவே இணையத்தில் உள்ள தீமையான விடயங்களை விடுத்து நல்லவிடயங்களை அறிந்து எதிர்கால இணையத்திற்கு முகம் கொடுக்கத் தயாராவோம்.

திரு. பா. சசிகுமார்

ஆசிரியர்

# யா/ கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி
# பாடசாலை அபிவிருத்திச் சங்கம் 2012 / 2013

**உறுப்பினர் விபரம்**

| | | | |
|---|---|---|---|
| தலைவர் | :- | திரு. க. இ. இராசசேகரம் | |
| உபதலைவர் | :- | திரு. சி. சிவலிங்கம் | திரு. நீ. விஜயகுமார் |
| செயலாளர் | :- | திரு. க. பரராசசிங்கம் | |
| உபசெயலாளர் | :- | திருமதி. செ. அனித்தாராணி | |
| பொருளாளர் | :- | திரு. ச. வசந்தராசா | |

**உறுப்பினர் விபரம் பெற்றோர் சார்பில்**

திரு. க. நித்தியரத்தினம்
திரு. க. இந்திரகுமார்
திருமதி. சு. ஜெகநாதன்
திருமதி. செ. அருந்தவமலர்
திருமதி. ப. வசந்தகுமாரி
திரு. ஐ. பிரபாகரன்
திரு. T. சிவபாலகுமாரன்
திரு. யோ. தாவீது
திரு. ய. தவராசா

**நலன் விரும்பிகளாக**

திரு. தா. கதிர்ச் செல்வன்
திரு. வி. லிங்கேஸ்வரன்

**ஆசிரியர்கள் சார்பில்**

திரு. பூ ஸ்ரீஸ்கந்தராசா
திரு. ப. சி. ஸ்ரீரூபன்
திருமதி சி. ஆனந்தஜோதி
திருமதி ய. முரளிதரன்

# யா /கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி
# பாடசாலை அபிவிருத்திக் குழு - 2012/ 2013

| | | |
|---|---|---|
| **தலைவர்** | திரு. க. இ. இராசசேகரம் | |
| **பிரதிஅதிபர்** | திரு சி. சிவலிங்கம் | |
| **பொருளாளர்** | திரு. ம. கணேசானந்தன் | திருமதி லி. ரதீஸ்வரி |
| **செயலாளர்** | திரு. க. விநாயகலிங்கம் | |
| **பழைய மாணவர்** | செல்வி ம. கந்தையா | திரு. ஐ. சிவராசா |
| **கோட்டக் கல்வி அதிகாரி** | திரு. வே. பாலசுப்பிரமணியம் | |
| **பெற்றோர்** | திரு. K. நித்தியரட்ணம் | திரு. சி. யோகேஸ்வரன் |
| | திருமதி. கா. பாலேந்திரன் | |

# யா/ கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி
# பழைய மாணவர் சங்கம் 2012/2013
### நிர்வாக சபை உறுப்பினர்கள்

| | |
|---|---|
| **போஷகர்** | திரு. நா. சிவநாதன் |
| **தலைவர்** | திரு. க.இ. இராசசேகரம் |
| **உபதலைவர்கள்** | திரு. க. விநாயகலிங்கம் |
| | திரு.வை. சுப்பிரமணியம் |
| | திரு. G.T ஞானசேகரவேல் |
| | திரு. வே. சண்முகலிங்கம் |
| | திரு. ஐ. சிவலோகநாதன் |
| | திரு. இ. இராசதுரை |
| **செயலாளர்** | செல்வி. ம. கந்தையா |
| **உபசெயலாளர்** | திரு. ந. உமாகாந்தன் |
| **பொருளாளர்** | திரு. இ. கிருஷ்ணகுமார் |

**நிர்வாக சபை உறுப்பினர்கள்**

| | |
|---|---|
| | திரு. வே பொன்னம்பலம் |
| | திரு. ஆ. ஜெயபாலசிங்கம் |
| | திரு. க. சிறிஸ்கந்தராசா |
| | திரு. கா. திருச்செல்வம் |
| | திரு. ஐ.மகேந்திரராஜா |
| | திரு. சு. சிவனேசராசன் |
| | திரு. செ. தவேஸ்வரன் |
| | திரு. கு, துஸ்யந்தன் |
| | திரு. வே. சுதாகரன் |
| | திருமதி. வி. பாலதாசன் |
| | திருமதி. நா. சிவபாதம் |
| **பத்திராதிபர்** | திரு. சி. சிவலிங்கம் |
| **எண் பார்வையாளர்** | திரு. க. இராமச்சந்திரன் |

# மலருக்கு அனுசரணை வழங்கியோர்

* லயன் Dr. வை. தியாகராசா — ரூபா 10000
* திருமதி கீதாஞ்சலி கிரிதரன் — ரூபா 25000
* கஜமுகன் தொலைத்தொடர்பு நிலையம் (கோப்பாய்) — ரூபா 2500
* திரு. கெ. காண்டீபன் — ரூபா 2500
* லக்கி பான்சிஹவுஸ் (இருபாலை) — ரூபா 500

யா/கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியின்
160ஆவது ஆண்டு நிறைவினை வாழ்த்துகின்றோம்



யா/கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியின்
160ஆவது ஆண்டு நிறைவினை வாழ்த்துகின்றோம்

# ஆறுமுகம் சிற்பாலயம்

# Arumugam Sitppalayam

Kallikovilady, Thirunelvely West, Jaffna.

Specialist All Kinds of Wood Carving,
Sculptures, Temple
Chariots, Vaganams,
Rathams and etc.




'Jeya Mahal'
Thirunelvely East
Jaffna

T.P: 021 2222892

யா/கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியின்
160ஆவது ஆண்டு நிறைவினை வாழ்த்துகின்றோம்

# உங்கள்சிறார்களின் உயர் படிப்புக்காக இப்பொழுதே சேமியுங்கள்

## ரண் கெகுளு



இலங்கை வங்கி

BOC

தேசத்தின் வங்கியாளர்

கூடிய வட்டி

ஆண்டு 5 புலமைப்பரீட்சை
திறமைசாலிகளுக்கு பணப்பரிசு

கணக்குகளுடைய சிறார்களுக்கு
வைத்திய மற்றும் அவசர
சிகிச்சைக்கான காப்புறுதி

வைப்பாளர்களுக்கு ஆயுட் காப்புறுதி

யா/கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியின்
160ஆவது ஆண்டு நிறைவினை வாழ்த்துகின்றோம்



பாடசாலை, சுற்றுலா,
திருமண வைபவம்
களப்பயணங்கள்
கோவில் உற்சவங்கள்
போன்றவற்றிற்கு
தரமான
போக்குவரத்து வசதி
வழங்கப்படும்

# CITIZEN TRAVELS

து. பாஸ்கரன்
கோப்பாய் சந்தி,
கோப்பாய்.

தொடர்புகட்கு: 0774329105

# THAKSHAA TRADING

Dealers for fan, Water pump, paints,
Floor polish, Thinner. Floor powder,Theppan Tine,
Door Lock, Paint Remover,
Grease & General Hard ware



தொ. பே: 021 223 0202
077 857 5158

பருத்தித்துறை வீதி,
கட்டைப்பிராய்.

யா/கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியின்
160ஆவது ஆண்டு நிறைவினை வாழ்த்துகின்றோம்

# MATHURAM KIDS
## PRE - SCHOOL

MATHURAM INSTITUTE - KOPAY, JAFFNA.

## எமது அதிஉயர் முன்பள்ளியில்!

- ☞ புதிய கல்வி சீர்திருத்தத்திற்கு அமைய தமிழ் ஆங்கில மொழி மூலம் கற்பித்தல்.
- ☞ 10 மாணவர்களுக்கு ஒரு ஆசிரியர் என்ற ரீதியில் குழு முறைக்கற்பித்தல்.
- ☞ தரமான பயிற்றப்பட்ட நீண்ட அனுபவம் வாய்ந்த ஆசிரியர்கள்.
- ☞ மாணவர்கள் ஒவ்வொருவருக்கும் தனித்தனியே தினக்குறிப்பேட்டுப் பதிவுகள்.
- ☞ ஒழுங்கமைக்கப்பட்ட பாடத்திட்டம்.
- ☞ $2^+$ $3^+$ $4^+$ மாணவர்களுக்கு தனித்தனிப் பிரிவுகள்
- ☞ சிறந்த வகுப்பறைகள், கவின் நிலையுள்ள அகப்புறச் சூழல்
- ☞ விளையாட்டு விழா, பரிசளிப்பு விழா, வாணி விழா, சுற்றுலா என்பன

**உங்கள் பிள்ளைகளின் ஒளிமயமான**

**எதிர்காலத்திற்கு**

**இன்றே எம்முடன் இணையுங்கள்**

# மதுரம் கிட்ஸ் முன்பள்ளி

டச்சு வீதி, கோப்பாய் தெற்கு.

யா/கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியின்
160ஆவது ஆண்டு நிறைவினை வாழ்த்துகின்றோம்



# சிறி நதியா நகை மாளிகை

அழகிய தங்க ஆபரணங்களை
உத்தரவாதத்துடன்
குறித்த தவணையில்
பெற்றுக் கொள்ள

01, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
தொ. பே : 021 222 2709

கிளை:
56 கஸ்தூரியார் வீதி
யாழ்ப்பாணம்.
தொ. பே: 021 222 6744

# GURU PRINTERS

குரு பிறிண்டேர்ஸ்

Computer Designers,
Offset Printing,
Screen Printing &
Cool Laminating

T.P. : 021 2228266,
Mobile : 077 7917542,
Email : guruprint99@gmail.com

No. 39/2, Adiyapatham Road,
Thirunelvely.

சிறுவர் ஆடவர் பெண்களுக்கான துணிவகைகள்
பாடசாலை உபகரணங்கள், அழகு சாதனப் பொருட்கள்
அன்பளிப்புப் பொருட்கள்,
சகல விதமான கட்டிடப் பொருட்கள்
தரமான நுகர்ச்சி பொருட்கள்
தரமான பொருட்களை
நியாய விலையில் ஒரே இடத்தில்
பெற்றுக் கொள்ள







# Co-op city

# Mini Co-op city

உரும்பிராய் சந்தி

இருபாலை சந்தி.
நீர்வேலி வடக்கு.
ஊரெழு.
கோப்பாய் சந்தி.

சேவைகள்:
எரிபொருள் நிலையம் - கோப்பாய் நீர்வேலி
அரைக்கும் ஆலை சேவை
வங்கிசேவை - கிராமிய வங்கி - கோப்பாய், உரும்பிராய்
வாகன சேவை - நீர்வேலி மொத்த விற்பனை நிலையம்

யா/கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியின்
160ஆவது ஆண்டு நிறைவினை வாழ்த்துகின்றோம்


# மித்திரன் மல்ரி ஸ்பொட்




அழகுசாதனப் பொருட்கள்,
அன்பளிப்புப் பொருட்கள்,
பாடசாலை உபகரணங்கள்,
பாதணிகள், பாக் வகைகள்,
கூல்சோடா, யூஸ், ஐஸ்கிறீம்,
பிஸ்கட் வகைகள்
என்பவற்றை
பெற்றுக் கொள்ள




## மித்திரன் மல்ரி ஸ்பொட்

**மானிப்பாய் வீதி, கோப்பாய் வடக்கு.**

தொ.பே.: 0771162819

யா/கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியின்
160ஆவது ஆண்டு நிறைவினை வாழ்த்துகின்றோம்


வினோ நகைப் பூங்கா

தங்க வைர நகை வியாபாரம்

அசல் 22 கரட் தங்க நகைகள்
உத்தரவாதத்துடன்
குறித்த தவணையில் செய்து கொடுக்கப்படும்

தொ. பே 021 222 5394
021 222 9494
தொலைநகல் 021 222 2824

185, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.



சேட்டிங் சூட்டிங் வகைகளும்
பெண்களுக்கான திருமண பட்டு சேலை,
பஞ்சாபி வகைகளிற்கும்
அனைத்து வகையான
ஆடைகளினையும்
மொத்தமாகவும்,
சில்லறையாகவும்
பெற்றுக் கொள்ள

சிவகணேசன் ரெக்ஸ்ரைல்ஸ்

தொ. பே: 021 222 2063
41, கிராண்ட் பசார், யாழ்ப்பாணம்.

யா/கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியின்
160ஆவது ஆண்டு நிறைவினை வாழ்த்துகின்றோம்


அழகிய கலைநயம்
எழிலுறு தொழில்வளம்
உயர்தரம் மிகு 22 கரட் தங்க நகைகளிற்கு

# தயா நகைப் பூங்கா

# THAYA NAKAI BOONKA

213c கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

213c Kasthuriar Road,
Jaffna.

உங்களுக்குத் தேவையான
இலத்திரனியல் சாதனங்களை
உத்தரவாதத்துடன் பெற்றுக் கொள்ள

நாடவேண்டிய இடம்

## அல்டி எலக்ரோனிக்ஸ்



15, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

தொ. பே : 021 222 2676

*e mail: aldielec@yahoo.com*

பாடசாலை மாணவர்களிற்கு
தேவையான அனைத்து விதமான
பாடசாலை உபகரணங்களையும்
கொள்வனவு செய்ய
நாட வேண்டிய இடம்

## ஸ்ரீ பேப்பர் மார்ட்



தலைமை அலுவலகம்
No 58, OLD MOOR STREET,
COLOMBO.



கிளை அலுவலகம்
388 ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

N.S.K
25 பனாலி வீதி,
திருநெல்வேலி.

தொ.பே: 021 222 2909

யா/கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியின்
160ஆவது ஆண்டு நிறைவினை வாழ்த்துகின்றோம்


Exporters, Importers,

Got. Transport Contractors,

Customs Clearing,

Forwarding Agents




&



Civil Contractors

# A.M.T.

## TRANSPORT SERVICE

No. 230 & 232, Wolfendhal Street,
Colombo - 13, Sri Lanka

Tel: 011 245 1716, 011 247 0465
011 245 1558, 011 460 2129/30,
021 223 0397, 024 222 6053

Fax: 011 234 2138 E-mail: amtbowser@yahoo.com,
amttransport1@sltnet.lk

யா/கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியின்
160ஆவது ஆண்டு நிறைவினை வாழ்த்துகின்றோம்

# AILSHI TRADING

*Dealers For Electrical Materials,*
*Paints, Building Materials*



Kopay Junction, Kopay.
T.P: 077 443 2144

# கோப்பாய் பனை தென்னை வள அபிவிருத்தி
# கூட்டுறவுச் சங்கம்



## எமது சேவைகள்



- கதிரை வாடகைக்கு விடப்படும்
- கூட்டுறவு கிராமிய வங்கிச் சேவை

அத்துடன் எமது கட்டடத்தில் கடைகள் வாடகைக்கு வழங்கப்பட உள்ளது

பருத்துத்துறை வீதி, கோப்பாய் தெற்கு, கோப்பாய்.

# கல்லூரிக் கீதம்

**இராகம் : ஹம்சத்வனி**

வாழிய நம் கலைக்கூடமே வாழ்க
வாழிய வாழிய வாழியவே
களனிகள் சூழ்ந்திடு கோவையம்பதியில்
விளங்குநற் கிறிஸ்தவ கல்லூரி
உண்மையும் நேர்மையும் உவந்திட அளிக்கும்
உன் புகழ் என்றென்றும் வாழியவே

*(வாழிய)*

பல்புகழ் மலிந்திடும் பல பெரியோர்களைப்
படைத்து நற்பணிபுரிந்தாய்
அவர் மிகு சேவையை ஏத்திட நன்னிலை
அடைந்த நல் நாடெமதே

மனதினிலுன் திறம்மதிப் பொடுநிலைத்திட
மகிழ்வொடு நாம் முயல்வோம்
கலைபல கவினுறக் கனிந்திட நல்வழி
காட்டிடுவாய் தாயே

*(வாழிய)*

நிலமிசை நின்புகழ் நீடுவாழ்க
நின்பணி தொடர்ந்து என்றும் வாழ்க
நிலை பெறு கலைகளின் நிறைகுடமாக
நீயென்றும் வாழிய வாழியவே

*(வாழிய)*

# நன்றி நவில்கின்றோம்

'எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் - உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகர்க்கு'

என்ற வள்ளுவர் வாக்கிற்கிணங்க தமிழர் பண்பாடான நன்றியறிதற் பண்பு காணப்படுகிறது. இந்த வகையில் எமது பாடசாலை 160ஆவது ஆண்டு நிறைவு பெற்றதை முன்னிட்டு வெளிவரும் மலருக்கு ஆதாரமாக விளங்கும் இந் நூலுக்கு ஆக்கமும் ஊக்கமும் தந்த அதிபருக்கு முதற்கண் நன்றியறிதலைச் சமர்ப்பணமாக்குகிறோம்.


இம்மலருக்கு ஆசியுரை வழங்கிய சான்றோர்களுக்கும், வாழ்த்துரை வழங்கிய அறிஞர்களுக்கும் மனமார்ந்த நன்றிகள் உரித்தாகட்டும்.

இந்நூல் சிறப்புற அமைய அயராது பாடுபட்டு மலரினை மணம் வீச வைத்த மலர்க்குழுவினருக்கும் நன்றிகளைக் கூறிகின்றோம்.


மலரினை அழகு பெற அணிகலன்களாக ஆக்கங்களைத் தந்துதவிய ஆசிரியப் பெருந்தகைகளுக்கும், மாணவச்செல்வங்களுக்கும் மனமார்ந்த நன்றிகள். அத்துடன் மலருக்கு அட்டைப்படசித்திரம் வரைந்து தந்த ஆசிரியர் ம. கணேசானந்தன் அவர்களுக்கும், நூலினை வெளியிட உயிரோட்டமாக இருந்து நிதியுதவி வழங்கியவர்களுக்கும், விளம்பரங்களை தந்துதவிய வர்த்தகர்களுக்கும் நன்றிகள்.

நூலினை முழுமையாக்கிச் சிறந்த முறையில் அச்சிட்டுத் தந்த குரு அச்சகத்தினருக்கும், எங்கள் உள்ளம் நிறைந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

மலர்க்குழு
160ஆவது ஆண்டு நிறைவு மலர்
யா/கோப்பாய் கிறிஸ்தவகல்லூரி.



2013/10/12


யா/ கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி
J/ KOPAY CH
IAN COLLEGE
GURU PRINTERS - 021 222 8266